1361

1957 December
1958 January

1361

Vol. 16 - No. 12
Vol. 17 - No. 1

ஸ்ரீ
ந்ருஸிம்ஹ ப்ரியா

OF THE ... OF BOOKS
27 MAR 1958
MADRAS

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்

திருநாமம்:—	ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன்
பூர்வாச்ரமத் திருநாமம்:—	ஸ்ரீ. உப. வித்வான், பருத்திப்பட்டு, ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாசாரிய ஸ்வாமி.
அவதாரம்:—	ப்லவ ஸு, கார்த்திகை மீ, பூராடம், 1901.
ஆஸ்தான வித்வான்:—	ஸ்ரீ இஞ்சிமேட்டு அழகியசிங்கர் காலம்.
ஆச்ரமஸ்வீகாரம்:—	விக்ருதி ஸு, தைமீ, 27உ, வெள்ளிக்கிழமை (9-2-51)
ஆஸ்தானத்தில் பட்டாபிஷேகம்:—	நந்தன ஸு, மாசிமீ, 30உ, வெள்ளிக்கிழமை (13-3-53)
பரமபதத்திற்கு எழுந்தருளினது:—	ஹேவிளம்பி ஸு, கார்த்திகை மீ, ஞாயிற்றுக் கிழமை, 9உ, (24-11-57)
ப்ருந்தாவனம்:—	நைமிசாரண்யம்.
செய்தருளிய கைங்கர்யங்கள்:—	ஸம்ஸ்க்ருதஸ்கூல்கள் (1) ஸ்ரீரங்கம், (2) திருக்குடந்தை, (3) வடுவூர், (4) பாதூர், (5) மதுராந்தகம், (6) மாம்பலம், (7) உத்திரமேரூர், (8) காஞ்சீபுரம். திருவெண்ணெய்நல்லூர், புள்ளபூதங்குடிகளில் கோபுர கைங்கர்யம். கடப்பை, வானமாமலை, திருக்கோட்டியூர் முதலியவிடங்களில் புதிதாக மடம் கட்டியது. திருநாராயணபுரம், திருப்பதி, திருவுள்ளூர், ஸ்ரீமுஷ்ணம், திருவஹீந்திரபுரம், திருக்குடந்தை, ஓரகடம், ஸ்ரீபெரும்பூதூர், காஞ்சீபுரம் முதலியவிடங்களில் மடங்கள் ஜீர்ணோத்தாரணகைங்கர்யம் பண்ணியது. திருவுள்ளூரில் சிறிய புஷ்கரிணி. தங்கப்பல்லக்கு, தூபக்கால், சங்கதாரை, பத்மதாரை, கடாரத்தி, தீபக்கால், முதலியவைகள் தங்கத்தால் செய்தாயிற்று. 2 புதிய யானைகள் வாங்கியாயிற்று. அனேகவிடங்களில்பக்தப்ரதிஷ்டைகள் செய்தாயிற்று. ஆஸேது ஹிமாசலபர்யந்தம் ஸஞ்சாரம் செய்தருளியாயிற்று.
இவர் சோதித்து வெளியிட்ட க்ரந்தங்கள்	ஸ்ரீஸாரபோதிநீ வ்யாக்யாநஸஹிதம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம், ந்யாஸநிஷ்டாமீமாம்ஸா, முதலியன.
பூமிகை எழுதிய க்ரந்தம்	வீக்ஷாரண்யக்ஷேத்ரமாஹாத்மியம்.





ஆந்த்ராச்ரமத்தில்
ஸ்ரீ அழகியசிங்கர்

(கீழே)

ஸ்ரீ அழகியசிங்கர்
ஹ்ருஷீகேசத்தில்
கங்கையில் நீராடல்



ஸ்ரீ அழகியசிங்கர் ஸூர்யாவலோகநம் செய்தருளுதல்



(வலது பக்கம்)

ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரஹ்மரதத்தில் எழுந்தருளுதல்

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ஞூ மார்கழி மீ { ஸஞ்சிகை 12

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

210746

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑌵𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

சரமச்லோகங்கள் (1)

[ஸ்ரீ. உப ஸ்ரீகார்யம் ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம், நைமிசாரணியம் (முகாம்)]

अब्देऽस्मिन् हेविलम्बिन्यधिवसति रवौ वृश्चिकं शुक्लपक्षे
शर्वाणीदैवतिथ्यां दिनकरदिवसे मूलनक्षत्रयुक्ते ।
श्रीमच्छ्रीवीररघ्वीट्शठमथनयतीट् श्रीनृसिंहास्पदं तत्
भेजे लक्ष्मीनृसिंहप्रथमशठरिपोः योगिनेतुः प्रसादात् ॥ १

सुधीर्हेविलम्बिन्यहो वृश्चिकेऽग्रचे तथाशुक्लपक्षे तृतीयाख्यतिथ्याम् ।
गुरुर्वीररघ्वीट्शठद्विडचतीशः प्रपेदे पदाब्जं गुरोः स्वस्य भक्तचा ॥ २

नमस्कृतो येन महात्मनाऽसौ नारायणोऽष्टाक्षरमन्त्रद्रष्टा ।
सदा बदर्याश्रमभूमिवासी तन्मन्त्रदैवं स जगाम द्रष्टुम् ॥ ३

(எப்போதும் பதரிகாச்ரமவாஸியான ஸ்ரீமதஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்தைக் கண்டறிந்த ஸ்ரீமந்நாராயணன் யாதொரு புண்ணிய'புருஷனுல் ஸ்ரீ அழகியசிங்கரால் நமஸ்கரிக்கப்பட்டானே? அந்த மந்த்ரராஜனைக் கண்டுவணங்க ஸ்ரீ அழகியசிங்கர் பரமபதமெழுந்தருளினர்)

कृत्वा कार्यं गृहिसमुचितं शास्त्रदृष्टया महात्मा
लब्ध्वा तुर्याश्रममपि मठे ह्यास विद्योपदेष्टा ।
स्मृत्वा सोपाधिकमिति परं सर्वकार्यञ्च धीरः
वस्तुं मेने वितमसि पदे वासुदेवस्य धन्यः ॥ ४

(சாஸ்த்ரோக்தமான க்ருஹஸ்த தர்மங்களையநுஷ்டித்துப் பிறகு ஸந்யாஸாச்ரமத்தை ஸ்ரீமதஹோபிலமடத்தில் பெற்று ஸ்ரீமதழகியசிங்கராகி ஸமந்த்ரோபதேசாதிகளைப் பண்ணிக்கொண்டிருந்து, இவ்விபூதியிலுள்ள ஸர்வமும் ஸோபாதிகமென்று கருதி திடசித்தராய் சுத்தஸத்வமயமான பரமபதத்தில் நித்யவாஸம் பண்ணத் திருவுள்ளம்பற்றினர்.)

चक्रतीर्थादितीर्थानामृषीणां चक्रिणस्तथा ।
वसतौ नैमिशारण्ये पुण्ये सोऽन्तरधीयत ॥ २

(பாவனங்களான சக்ரதீர்த்தம் முதலிய தீர்த்தங்களுடையவும், சுகர் முதலிய ருஷிகளுடையவும், சக்ரதாரியான பகவானுடையவும் வாஸஸ்தானமான புண்ணியமான நைமிசாரணியத்தில் திருப்பள்ளிகொண்டார். (பிருந்தாவனத்தை ஸங்கல்பித்துக்கொண்டார்.)

(2)

[ஸ்ரீ, உப, வித்வான், ப. ஸ்ரீ. வீரராகவாசாரியர் ஸ்வாமி, தேவனார்விளாகம்]

अब्देऽस्मिन् हेविळम्बौ सवितरि सुगते वृश्चिकं मासमच्छे
पक्षे भानोस्तृतीयातिथियुजि दिवसे धातृदैवत्यतारे ।
विष्णोः श्रीवीररघ्वीट् शठमथनगुरुर्योगिराट् सद्गुणाढ्यः
मालोलस्थानभाक्श्रीनरहरिशठजिद्योगिदृष्टचाप धाम ॥ १

हेविळम्बौ तुतीयायां वृश्चिके भानुवासरे ।
शठजिद्वीररघुराट् स्वाचार्यचरणावगात् ॥ २

(நாளது ஹேவிலம்பஹு கார்த்திகைமீ 9உ சுக்லபக்ஷம் த்ருதீயை திதி மூலநக்ஷத்ரம் ஞாயிற்றுக்கிழமையன்று நற்குணபூர்ணரான ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹசடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் கடாக்ஷத்தினல் ஸ்ரீ விஷ்ணுபதமைனும் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளியாயிற்று.)

यो नित्यं नृहरेः पदाम्बुजयुगव्यामोहतस्तन्त्रवित्
स्वैश्वर्यं तृणवद्विधाय यतिराट् कारुण्यपूर्णो बभौ ।
मालोलं परिचर्य लोकहिततो यात्रां विरच्याधुना
श्रीमद्धाम जगाम नैमिशवने हा हन्त! कृच्छ्रं महत् ॥ ३

(யாதொரு ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் திருவடிகளில் கொண்ட பேராவினல் தமது அளவற்ற ஐச்வர்யத்தை துரும்பாக எண்ணித் துறவறம் பூண்டு கருணமூர்த்தியாக விளங்கினரோ! அந்த மாபுருடன் இப்போதுலோகக்ஷேமார்த்தமாக ஸ்ரீமாலோலனை ஆராதித்து திவ்யதேசயாத்திரை செய்து கொண்டு ஸ்ரீ நைமிசாரணியத்தில் திருநாட்டுக்கெழுந்தருளினர். அஹோ! தாங்கவொண்ணப் பெரிய கஷ்டம்!)

श्रेयो धाता निखिलजगतां सम्मतो योगिवृन्दैः
विश्वाचार्यो निधिरविकलो वीररघ्वीट्छठारिः ।
भक्त्या नित्यं नृहरिचरणौ पूजयित्वा नृसिंह-
स्थानं भेजे परममहितं सूरिवृन्दानुभाव्यम् ॥ ४

(ஸர்வ ஜனங்களுக்கும் ச்ரேயஸ்ஸைக் கொடுப்பவராயும், மஹாயோகிகளின் கணங்களுடன் கௌரவிக்கப்பட்டவராயும், கொள்ளக்குறைவிலாத புதையல் போன்றவருமான ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அனுதினம் பக்தியுடன் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய பொற்றாமரையடிகளைப் போற்றிப் பணிந்து நித்யஸூரிகள் போற்றிப் பணிந்திடும் மிகப் பெருமையுடைய நரசிங்கனுறையும்வைகுந்தவிண்ணகரத்தைத் திருவுள்ளம்பற்றினர்)

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

நைமிசாரண்யத்தெந்தையைச் சிந்தையில் வைத்தவர்கள் வெண்குடைக்கீழ் வையகம் ஆண்டு உம்பருமாகுவர் தாமே என்ற உண்மையைக் கேட்டுள்ளோம். ஆனாலும் நம்மில் பலர் இவ்வுண்மையைச் சிந்தித்துப் பார்த்ததில்லை. வேதத்தின் உட்பொருளையும் நாம் கேட்டுள்ளோம். கேட்பது, சிந்திப்பது, த்யானம்செய்வது என்பது வேதத்தில் கூறப்பட்டுள்ளபடிகள். எல்லோரும் எக்காலத்திலும் கடைப்பிடிக்குமவைபழக்கத்தில்இல்லா தவைதானே. ஆயினும் நம்முடைய நற்பயனின் காரணத்தினால் கேட்கப்பட்ட உண்மைகளை சிந்திக்க வேண்டிய ஸந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

நடந்த கார்த்திகைத் திங்களன்று ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தைக் கண்டுகளித்து ஆசிபெற்றுவர நைமிசாரணியம் விரைந்தேன். நைமிசாரணியத்தில் திருநக்ஷத்திரம்நடக்கவிருந்ததென்றஸமாசாரத்தைமுன் கூட்டி அறிய முடியாததால் அறிந்தவுடன் விரைந்தேசெல்லவேண்டிவந்தது. திருநக்ஷத்ர மஹோத்ஸவதினத்திற்கு முன்னாள் ஞாயிறு ஸாயங்காலம் ஆறு மணிக்கு பாலாமு என்ற ரயில்வே நிலயத்தை அடைந்தேன். அங்கிருந்து நைமிசாரண்யத்திற்கு ரயில்மார்கமாகவேதான் செல்லமுடியும். அதுவும் மறுநாட் காலையில் 8-30 மணிக்குத்தான் அங்கிருந்து புறப்படும் என்று தெரிந்து அங்கேயே தங்கும்படி நேர்ந்தது. இரவு சுமார் 8-30 மணிக்கு ஸ்ரீமதழகியசிங்கருக்குத் திருமேனிபாங்கில்லை என்றும், மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் ஹரித்வாரம் செல்லும் ஒருயாத்ரிகர்மூலம் தெரிந்தது. உடனே விவரிக்க இயலாத ஒரு பயங்கரமான சூழ்நிலையில் இருப்பதாக அடியேனுக்குத் தோன்றியது. பிறகு (நடு இரவுக்குப் பின்னா) ஸ்டேஷன் மாஸ்டர் மூலமாகவும், ஒரு நண்பர் மூலமாகவும் ஸ்ரீமதழகியசிங்கர் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளிவிட்டதாகக் கேள்விப்பட்டுப் பரிதவித்தேன்.

அடியேன் குடும்பத்துடன் கூடவே அடியேன் ஆப்தர் திருக்குடந்தை (குரிச்சி) ஸ்ரீ. உப. ஸந்தானம் ஐயங்கார் ஸ்வாமியும் இருந்தார். ஸ்ரீமதழகியசிங்கரால் முன்னரே நியமிக்கப்பட்டிருந்ததை அநுஸரித்து தங்கத்தினால் ஆன கடதீபத்தையும் அடுக்கு ஆரத்தியையும் அந்த ஸ்வாமி எடுத்து வந்தார். பந்தோபஸ்தாகக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டியதற்காக அடியேன் பெட்டியில் இவ்விரண்டு வஸ்துக்களையும் வைத்து எடுத்துச்சென்றிருந்தேன். ஸ்ரீமதழகியசிங்கரின் மனோரதபூர்த்திச் சின்னங்களாகிய இவைகளை நினைக்க அடியோங்களுக்கு துக்கம் மேலிட்டது.

சோழநாட்டில் கங்கையிற்புனிதமாய் (காவிரியின் கிளை நதிக் கரையில்) அவதரித்த முனிச்ரேஷ்டர் குமரி முதல் இமயம் முடிய பாரத நாட்டிலுள்ள எல்லாத் திவ்ய தேசங்களிலும் ஸஞ்சாரங்களைச் செய்து—

வெந்திறல்களிறும்வேலைவாயமுதும்
விண்ணொடு விண்ணவர்க்கரசும்
இர்திரற்கருளியெமக்குமீந்தருளு
மெந்தையெம்மடிகளெம்பெருமான்
அந்தரத்தமரரடியிணை வணங்க
ஆயிரமுகத்தினாலருளி
மந்தரத்திழிந்த கங்கையின் கரை மேல்
வதரியாச்ரமத்துள்ளானே

என்றப்ரகாரம் பதரிகாச்ரமத்தெம்பெருமானை மங்களாசாஸனம் செய்து கங்கைக் கரையில் ஏழாவது சாதுர்மாஸ்யத்தைப்பூர்த்தி செய்து வையகம் ஆண்ட பின்னர் இமையோர் நாதன் வந்திறைஞ்சும் நைமிசாரண்யத்தெந்தையைச் சிந்தையுள் வைத்து வானோர் நலம் புரிந்தி

றைஞ்சும் நைமிசாரணியத்துள்ள வனரூபியாகிய எம்பெருமான் பக்கல் எழுந்தருளிவிட்ட ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யதிருமேனியைத் தான் அடியோங்களால் மறுநாள் ஸேவிக்க முடிந்தது. திருநக்ஷத்ரமஹோத்ஸவத்திற்குச் சென்ற அடியேன் அதேதினத்தில் திருநக்ஷத்ரத்தைக் காண முடியாமல் நெஞ்சினில் பிரியாதொரு துக்கத்தைத்தான் அனுபவித்தேன்.

ஸ்ரீமதழகியசிங்கரின்சரணமே ஶரணமென்றிருந்த என்போன்றவர்களுக்குபுகலாகநின்ற ஆசார்யரத்னத்தை இழந்து புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே என்று சிந்திக்கும்படி ஏற்பட்டது.

பூர்வாசார்யர்களைக் குறிக்கும் பல சொற்களில் 'முனி:' என்றசொல் மிகவும் விசேஷார்த்தங்களைக் கொண்டது. 'து:கேஷ்வநுத்விக்நமநா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ: | வீதராகபயக்ரோத: ஸ்திரதீர்முனிருச்யதே ||' துக்கம் ஏற்படுமாபின் சஞ்சலமனதையடையாமலும் ஸுகம் உண்டானால் ஆசையைக் காட்டாமலும் ஆசை, பயம், கோபம் இவைகளிலிருந்து விடுபட்டும் ஸ்திரமானமனோநிலையை உடைய மஹான் 'முனி:' என்று சொல்லப்படுகிறார். இவ்விடத்தில் கூறப்படுள்ள குணங்கள் பெரிய மஹான்களிடம்தான் காணப்படும்.

இம்மாதிரியாக 'முனி:' என்ற பதத்தை 'ஸஹி விஜயதே யாமுனமுனி:' என்று ஆளவந்தார் விஷயத்தில் உபயோகித்தார் பகவான் பாஷ்யகாரர். இதேபோல் 'ப்ரணாமம் லக்ஷ்மணமுனி:' என்று பாஷ்யகாரர்விஷயத்திலும் காணப்படுகிறதைக் கவனிக்கவேணும். ஆயினும் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் விஷயத்தில் இப்பதம் இன்னும் சற்று உயர்வையே குறிப்பது கவனிக்கத்தக்கது. 'ஶரணம் பவபீதாநாம் சடகோப முநீச்வரம் என்று ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனை முநீச்வரர் எள்று கூறியுள்ளார்கள்.

இங்கு 'முநீச்வர' பதம் பரமாசார்யனையும் குறிக்கிறதென்பது கவனிக்கத்தக்கது. ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹன், தானே, ப்ரேஷமந்த்ரோபதேசத்தைச் செய்து ஆராத்யதெய்வமாகத் தானே எழுந்தருளினான் என்பது குருபரம்பரை. அதேபோல் 'யத்கடாக்ஷண ஸர்வேபி யத்ஸ்தாநாநதயோகி: | ஸ்ரீந்ருஸிம்ஹதயாபூர்ணாஸ்தந்முனேர் மங்களம் ஸதா ||' என்றபடி ஸ்ரீந்ருஸிம்ஹனின் அவதாரவிசேஷங்களே ஸ்ரீமதழகியசிங்கர்களின் அவதாரங்களும்.

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் திருநாமமாகிய 'ஸ்ரீமதழகியசிங்கர்' என்ற திருநாமமே, ஸ்ரீஸந்நிதியில் ஸ்ரீஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் முதல் எல்லா ஸ்ரீ சடகோபயதீந்த்ர மஹாதேசிகர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இம்மாதிரி வழியில் தோன்றும் ஆசார்யச்ரேஷ்டர்கள் தங்ங்ள் சிஷ்யர்களுக்கு ஸதுபதேசம் செய்தும் அவர்களுக்குத் தேவையான பஞ்சஸம்ஸ்காராதிமந்த்ரோபதேசங்களைசெய்தும் இறுதியில் ஸ்ரீந்ருஸிம்ஹனிடம்புருஷகாரமாக இருந்துசிஷ்யர்களின்சேதனாசேதனாத்மகமானவைகளை எம்பெருமான் திருவடிகளில் சேருவதற்கு உதவியும் பரமோபகாரபுருஷச்ரேஷ்டர்களாக விளங்கி வருகிறார்கள். புருஷோத்தம: என்ற பதம் எப்படி ஸ்ரீமந்நாராயணனைக் குறிக்குமோ அதேபோல் முனிச்ரேஷ்டர் என்பது ஸ்ரீமதழகியசிங்கர்களையே குறிக்கத்தக்கதாக இருக்கிறது என்பது நமது ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யசரித்ரத்தை உணருகிறவர்களுக்குத் தெரியும். ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்திற்கு அஸாதாரணமான 'கர்மண்யேவாதிகாரஸ்தே' என்ற பகவத்வாக்யத்தை நம்பி நடப்பது ஸாத்விகத்யாகம் முதலியவைகளை நெஞ்சினால் நினைந்தும் வாயினால்மொழிந்தும் நடத்திக்காட்டியருளிய மஹாபுருஷன் ஸ்ரீமதழகியசிங்கர்தான்.

ஸ்ரீமதஹோபிலமடத்தின்நிர்வாஹவிஷயங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் இவ்வுண்மை நன்கு புலனாகும். மிகவும் சிக்கலான விஷயங்களில் பகவந்நியமனத்தை எதிர்பார்த்து தெளிவு பெற்று நடத்தும்படி நியமிப்பதும், பெரிய பெரிய ராஜகீய விஷயங்களிலும் இதேமாதிரி கொள்கைகளை அனுஸரிக்கும்படி நியமித்தருளுவதும், ஸ்ரீமதழகியசிங்கரிடம் அஸாதாரணமான குணங்கள். 'ஆத்மாநம் மானுஷம் மந்யே' என்று ஸ்ரீராமபிரான் மனுஷ்யனாக எண்ணி நடந்ததுபோல பகவதுபகரணமாகத் தம்மைக் கருதி எழுந்த

ருளியிருந்த பெருமை ஸ்ரீமதழகியசிங்கரைச் சாரும். ராமனுடைய வாழ்க்கை எப்படி நமக்கு எடுத்துக்காட்டோ அதேபோல்தான் ஸ்ரீமதழகியசிங்கருடைய ஜீவிய சரித்ரம்.

ராமனுடைய அழகை வர்ணிக்குமிடத்தில் கம்பர்:– 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்றெல்லாம் கூறி முழுவதும் கண்டவர் ஒருவருமிலர் என்றார். அதாவது எம்பெருமானின் ஏகதேச அழகில் ஈடுபட்ட ஸமயம் அதிலிருந்து விடுபடாதவர்களாக வேறொன்றையும் காணாதவர்களாக இருந்தார்கள் என்பதுதான் கவியின் கருத்து. அதேபோல் ஸ்ரீ அழகியசிங்கரின் குணார்ணவத்தில் மூழ்கிய ஒவ்வொரு சிஷ்யரும் ஏகதேச குணத்தையே கண்டு பெருமைப்பட்டுக்கொண்டு இதரகுணவிசேஷங்களை அனுபவிக்கமுடியாதவர்களாகவே இருந்தார் என்பது மிகையல்ல.

வைராக்யத்தில் சிறந்த யதிகள் முன்னாள் இருந்ததாகக் கூறுவதைக் கேட்டுள்ளோம். ஸர்வவிதமான ஸம்பத்துக்கள் ஸித்தமாக இருந்தும் அவைகளை அறவே வெறுத்த வைராக்யநிதி நம் ஸ்ரீமதழகியசிங்கரேதான் என்பது உண்மையை அறிந்தவர்களுக்குத் தெரியும். பகவத்கைங்கர்யமே புருஷார்த்தம் என்று எக்காலமும் நடத்திக் காட்டிய மஹான் ஸ்ரீஅழகியசிங்கர்.

'இச்சாமோ ஹி மஹாபாஹும் ரகுவீரம் மஹாபலம் । கஜேந மஹதா யாந்தம் ராமம் சத்ராவ்ருதாநநம் ॥' என்று அயோத்யாவாஸிகள் கூறியதுபோல் ஸ்ரீமதழகியசிங்கரின் கம்பீரமான தோற்றத்தையும் கதியையும் கண்டு களித்தவர்கள் பலர்.

'பெற்ற தாயாய்ப் பத்தர் பேதமில்லாத்தந்தையுமாய் மற்றுமுள்ள சுற்றமுமாய் மன்னிய பொன்னிராசியுமாய் உற்றமுனிசடகோபா!...' என்று போற்றி உகந்தவர்கள் பலர்.

இவ்விதம் பஹு ப்ரகாரத்தினாலும் ஏற்றத்துடன் எழுந்தருளியிருந்த மஹான் ஸ்ரீமதஹோபிலமட ஆஸ்தானத்தில் ஐந்து ஸம்வத்ஸரங்களுக்குக் குறைவககவே எழுந்தருளியிருந்தது நமது தௌர்ப்பாக்யத்தினால்தான்.

'சிஷ்யபாபம் குரோரபி' என்பதுபோல் நம்முடைய பாபசேஷங்கள் ஸ்ரீமதழகியசிங்கரின் மனோரதத்திற்கே இடையூறாக இருந்ததெனலாம். அதாவது இன்னும் பல ஸம்வத்ஸரங்கள் எழுந்தருளியிருந்தால் இன்னும் பல சிஷ்யர்களுக்கும் நல்வழி புகட்டியிருக்கலாம். ஸ்வதேஜஸ்ஆனால் உலகத்திற்கு ஒரு பெரிய கலங்கரை விளக்காக ஜ்வலித்திருக்கலாம். அதற்கெல்லாம் இடமில்லாமல் போய்விட்டது.

ஒரு அன்பர் ரஸமாக ஒரு கருத்தை வெளியிட்டார். ஸ்ரீந்ருஸிம்ஹன் லீலாவிபூதியில் அர்ச்சையில் எழுந்தருளியிருக்கிறான். தன்னை ஆராதனம் செய்துவந்த ஸ்ரீமதழகியசிங்கரின் தேஜஸ்ஸில் மூழ்கிவிட்ட எம்பெருமான் ஸ்திரமான நித்யவிபூதிக்கே ஸ்ரீமதழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவிட்டான் என்பதுதான் உண்மை என்றார். இதுதான் உண்மையிலும் உண்மை. 'அஹந்யஹநி பூதாநி ப்ரவிசந்தி யமாலயம் । சேஷா: ஸ்தாவரமிச்சந்தி கிமாச்சர்யமத: பரம் ॥' என்று யக்ஷப்ரச்னத்திற்கு தர்மபுத்ரர் கூறிய உண்மையை அனுஸரித்து நாம் எல்லோரும் வெகுசீக்கிரத்திலேயே இந்த ஸம்பவங்களை மறந்துவிடுவோமென்பதில் ஸந்தேஹமில்லை. அதுதான் உலகஸ்திதி. ஆயினும் சிற்சில ஸம்பவங்கள் பசுமரத்து ஆணி போல் நமது மனதிற் பதிந்தேயிருக்கும். ஸந்தர்ப்பங்களில் வெளிப்படும். அம்மாதிரியான ஸந்தர்ப்பங்களை நமக்கு அதிகமாக அளித்தவர் நம் ஸ்ரீமதழகியசிங்கர்.

ஸ்ரீவைஷ்ணவ உலகுக்கு எம்பெருமானாரைத் தந்த பெருமை ஸ்ரீஆளவந்தாருக்கு உண்டு. ஸ்ரீராமாநுஜரை ஸ்ரீபாஷ்யகாரராக்கியவர் ஸ்ரீஆளவந்தார்தான். ஸ்ரீஆளவந்தாரின் சரம தசையில் ஸித்தாந்த ஸ்தாபனம் செய்வதாக வ்ரதம் பூண்டார் ஸ்ரீராமாநுஜர். அதுஸமயமே ஸ்ரீஆளவந்தாரின் மனோரதம் பூர்த்தியானதாக நமது குருபரம்பரை கூறுகிறது. அதேபோல் நேரில் நாம் கண்ட உண்மையை எல்லோரும் அறிவர்.

ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பதும், விஸ்தரிப்பதும் தான் ஸ்ரீஸந்நிதியின் கடமை. ஸ்ரீஸந்நிதியின் பெருமையுங்கூட, ஆகவே ஸ்ரீமதழகியசிங்கர் நித்யவிபூதியை அலங்கரிக்க எழுந்தருளியதும், லீலாவிபூதியில் ஸ்ரீபகவத்ராமாநுஜஸித்தாந்தஸ்தாபனத்துக்காக மற்றொரு ஸ்ரீமதழகியசிங்கர்

எழுந்தருளியாயிற்று. முன் கூறிய ஸம்பவம் குருபரம்பரை மூலம் கேட்டது. இப்பொழுது கூறுவது நேரில் கண்டது. கேட்டதும் கண்டதும் உண்மைகளே அல்லவா.

அங்கண்ஞாலமஞ்ச அங்கு ஓராளரியாய்த் தோன்றிய ஸ்ரீமதழகியசிங்கர், வையகம் ஆண்டு, நைமிசாரண்யத்தில் அந்தர்த்தானமானார் என்பதுதான் தத்வம். ஸ்ரீமதழகியசிங்கர் ஆஸ்தானத்துக்கு எழுந்தருளியபின் முதலில் மங்களாசாஸனம் செய்த திவ்யதேசம் ஸ்ரீ அஹோபிலம். கடைசி திவ்யதேசம் நைமிசாரண்யம். (திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்த க்ஷேத்ரங்களில் நைமிசாரண்யத்துக்கு அடுத்தது ஸ்ரீ அஹோபிலம் என்பது கவனிக்கத்தக்கது.)

நைமிசாரண்யத்தில் அந்தர்த்தானமான ஆழ்வார் அஹோபிலத்தில் மங்களாசாஸனம் செய்ததுபோல் ஸ்ரீ அஹோபிலத்தில் (அஹோபிலே ஸ்ரீந்ருஸிம்ஹ: ப்ரேஷமந்த்ரம் ஸ்வயம் ததௌ என்பதுபோல்) ப்ரேஷமந்த்ரோபதேசம் பெற்ற ஒரு பெரிய மஹானே ஸ்ரீ அழகியசிங்கராக எழுந்தருளவேணுமென்பது மிகவும் பொருத்தமானதுதானே.

அஷ்டாதச புராணங்களும் நைமிசாரண்யத்தில்தான் தோன்றின. அதேபோல புராண ப்ரவசனங்களில் உத்தீர்ணரான நமது ஸ்ரீமதழகியசிங்கர் அதே இடத்தில் ஆஸ்தானத்துக்கெழுந்தருளினார் என்பதும் ஸ்ரீந்ருஸிம்ஹனின் அனுக்ரஹத்தினால் ஏற்பட்ட பொருத்தமான ஸம்பவம். குருபரம்பரையில் கூறப்பட்டுள்ள முன் ஸம்பவம் ப்ரத்யக்ஷமாக நமக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதும் நமது பாக்யந்தானே.

ஸ்ரீ ஆளவந்தாருக்குப் பின் எழுந்தருளிய மஹான் ஸ்ரீபாஷ்யகாரர். ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பின்னர் எழுந்தருளியவர் ஸ்ரீ வேதாந்ததேசிகர். நைமிசாரண்யத்தில் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளிய ஸ்ரீமதழகியசிங்கருக்குப் பின்னர், 'பாஷ்யகார: புநர்பூமௌ' என்றபடியும், 'வேதாந்ததேசிக: ஸோऽயம்' என்றபடியுமாக, ஸ்ரீமதழகியசிங்கரே ஸ்ரீ வேதாந்ததேசிக நாம ரூபத்துடன் எழுந்தருளியதும் நமது பாக்யவிசேஷந்தான். மிலேச்சர்களால் நமது ஸம்ப்ரதாயத்திற்குக் கேடு விளைவிக்கப்பட்ட ஸமயத்தில் பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹத்தைத் தேடிப் பிடித்துக் காப்பாற்றிய பெருமை ஸ்ரீ பாஷ்யகாரருடையதாயிருந்தது. 'காக்ரஹவிசக்ஷண: ஜயதி லக்ஷ்மணோயம் முநி:' என்று ஸ்ரீ தேசிகன் ஸாதித்தருளினார். அதேபோல் ஸ்ரீஸந்நிதியையும், ஸ்ரீந்ருஸிம்ஹனையும் நமக்குக் காப்பாற்றிக் கொடுக்கும் பெருமை ஸ்ரீமதழகியசிங்கருக்கு ஏற்பட்டிருப்பதால் ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ரமஹாதேசிகன் என்ற திருநாமமும் மிகவும் பொருத்தமுடையதாகிறது.

ஸ்ரீமதழகியசிங்கர் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளியதெல்லாம் நமது பாக்யவசமேயாயினும் பெரும் அளவில் இப்பெருமைகள் 42-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரையே சாரும். இணையற்ற ஒரு ஸ்ரீ அழகியசிங்கரை உலகுக்கு அளித்த பெருமை தமக்குத்தான் உண்டு என்று 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிப்பது வழக்கம். ஸத்சிஷ்யனிடம் ஒப்படைக்கப்பட்ட வித்யையின் மூலம் ஆசார்யனின் பெருமை அதிகப்படுமாப்போலே 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரை நமக்கு அருளியதின் மூலம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் பெருமை அதிகரித்தது. அதன் காரணமாகவே பாரததேசம் முழுவதும் ஸ்ரீமதஹோபிலமடத்தின் பெருமை விஸ்தரித்தது. அதன் காரணமாகவே பதரி யாத்திரையும் ஸுகரமாக முடிந்து நைமிசாரண்யத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் மறைவும் ஒன்பது ரூபத்தில் ஆவிர்ப்பாவமும் ஏற்பட்டது. ஆகவே தத்காலம் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகியசிங்கர் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளியவுடன் ஸ்ரீந்ருஸிம்ஹனின் நித்ய ஆராதனத்துடன் ஸ்ரீமதழகியசிங்கர்களின் அர்ச்சாரூபங்களையும் ஆராதிக்கவேண்டும் என்று ஸங்கல்பித்ததும் மிகவும் பொருத்தமானதே.

திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்கும்படி இரண்டு அர்ச்சாரூபங்களைத் தகுந்த ஸ்தபதிகள் மூலம் நிர்மாணம் செய்துவரும்படி ஸ்ரீமதழகியசிங்கரும் நியமித்தருள வழக்கம் போலவே திருக்குடந்தை (குரிச்சி) ஸந்தானம் ஐயங்கார் ஸ்வாமியும் மிகவும் குருகிய அவகாசத்தில் (இரண்டு மூன்று தினங்களிலேயே) அர்ச்சாரூபங்களைத் திருக்குடந்தையில் தயா

ரித்து நைமிசாரணியத்தில் கொண்டுவந்து ஸமர்ப்பிக்க ஸகாலத்தில் தகுந்த அதிசாரிகளைக்கொண்டு ப்ரதிஷ்டையும் செய்யப்பட்டு ஸ்ரீந்ருஸிம்ஹன் பக்கலில் இரண்டு ஸ்ரீமதழகியசிங்கர்களும் (42–43-வது பட்டங்கள்) ஸேவை ஸாதித்துவருகிறார்கள் என்பது நமது பாக்யவிசேஷமல்லவா?

42-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் ப்ரபாவங்களைப்பற்றி தத்காலம் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் ஒரு மங்களம் அனுக்ரஹித்தாயிற்று, அதில் 'வீக்ஷாரண்யே வஸந் யோகீ' என்று ஸாதித்தாயிருக்கிறது. வீக்ஷாரண்யவாஸிகளுக்கு மட்டில் இந்த பாக்யம் கிடைக்கும் மற்றவர்களுக்கு இல்லாமல் போகலாமே என்ற சங்கை ஏற்படுமோ என திருவுள்ளத்திற்கொண்டு (க்ராமங்கள் தோறும்) ஸ்ரீந்ருஸிம்ஹன் எழுந்தருளும் இடமெல்லாம் இந்த ஸ்ரீமதழகியசிங்கர்கள் எழுந்தருளியிருக்கவேண்டும் என்று இவ்விதம் ஏற்பாடு செய்தருளியாயிருக்கிறது என்றே தோன்றுகிறது.

நைமிசாரண்யத்தில் 43-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் ப்ருந்தாவனத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் அர்ச்சாரூபப்ரதிஷ்டையும் செய்யப்பட்டிருக்கிறது. பதினாயிரக் கணக்கில் ப்ருந்தாவனம் க்ட்டப்படுவருகிறது மற்றொரு விசேஷ ஸம்பவத்தை இங்கு குறிப்பிடவேண்டும். திருக்குடந்தை ஸ்ரீஅழகியசிங்கர் காலத்தில் ஸ்ரீஸந்நிதியில் அந்வயித்திருந்த ஒரு உத்தரதேசத்து சிஷ்யரால் ஏற்கனவே நைமிசாரணியத்தில் ஒரு ஸ்ரீ அஹோபிலமடம் நிர்மாணிக்கப்பட்டு அதில் ஸ்ரீந்ருஸிம்ஹன் அர்ச்சாரூபமாக ஸேவை ஸாதிக்கிறான். அதில் தத்காலம் பூஜை செய்துவரும் அதிகாரியும் தஞ்சாவூர் ஜில்லா நெடுங்கொருவில் 43-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் சாதுர்மாஸ்யஸங்கல்பகாலத்தில் நேரில் வந்து ஸ்ரீமதழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டு திருவடிச்சோடு பாதுகை போட்டோ இவைகளையும் பெற்று சென்றிருக்கிறார். அந்த ஸமயம் ஸ்ரீமதழகியசிங்கரும் மற்றொரு ஸமயத்தில் நைமிசாரண்யம் எழுந்தருளுவதாக ஸாதித்ததாகவும் அந்த அதிகாரி கூறுகிறார். இதே ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்குப் பக்கத்தில் 43-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் தத்காலம் அர்ச்சாரூபியாகவும்ப்ருந்தாவனத்திலும்எழுந்தருளியிருக்கும்படிநேர்ந்திருப்பதும்ஆச்சர்யத்திலும்ஆச்சர்யமல்லவா!

ஸுமார் 600 வருஷகாலமாக ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் காலம் முதல் நமதுஸமூஹத்திற்குப்பேருதவிசெய்து வந்துள்ள ஸ்ரீஸந்நிதியின் பெருமையைக்காப்பாற்றுவதற்காகவே ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்தானத்தை ஏற்க முன் வந்து ஸ்ரீஸந்நிதியின் பெருமையைக் காப்பாற்றியதற்காக ஸ்ரீமதழகியசிங்கருக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் கடாக்ஷவிசேஷத்தினால் ஸ்ரீமதழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து நம்மை அனுக்ரஹித்தருளவேணும் என்று நாம் ஸ்ரீ மாலோலனைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

சேராக் குணச் சேர்த்தி சிதைந்தது அந்தோ!

[ஸ்ரீ. உப. வித்வான், வேதாந்தவாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி,
உபாத்யக்ஷர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

'तेषां सर्वगतं तेजः स्वासु योनिषु शाम्यति' என்றார் மநு. நீரிலிருந்து நெருப்பு பிறப்பதாக சாஸ்த்ரம் கூறும். ஜலத்திலிருந்து மின்சாரத்தைக் கண்டுபிடித்த விஜ்ஞானமும் இதை ஒருவாறு ஒப்புக்கொள்ளுகிறது. இவ்விதம் நீரில் பிறந்த நெருப்பு நீரிலேயே அணைந்து மறைந்துவிடுகிறது. தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கரும் தமது அவதாரத் திருநாளிலேயே அந்தர்தானமடைந்த செய்தி கேட்டு அகில லோகமும் ஆராத்துயரத்தில் மூழ்கியுள்ளது. பேச வாய் கூசுகிறது. எழுத கை நடுக்குகிறது. மனமோ சோகச் சுமையைத் தாங்காது தத்தளிக்கிறது. என் செய்வோம்? யாருக்குச் சொல்வோம்? எப்படிச் சொல்வோம்?

கௌஸல்யாபிராட்டியார் 'ஐயோ! மகனே! நீ பிறவாதொழிந்தாய் ஆகாதே! மலடிக்கு மனவேதனை எப்பொழுதும் ஒன்றே. குணாதிகனான உன்னைப் பெற்று நான் பிரிந்து பல விதங்களிலும் நோவுபட நேர்ந்துள்ளதே' என்று பெருமாள் காடேற எழுந்தருளின போது ப்ரலபித்தாள். இவ்வளவு குணாதிகவிஷயத்தை நமக்கு என் ஈச்வரன் நடுவில் முற்றாட்டாக அனுபவிக்கத் தந்தருளவேணும்? குணக்குன்றான இவ்வழகியசிங்கரின் அனுபவத்தின் கனம் இவரைப் 'பிரிந்து நாம் வீழ்ச்சியுறும்போது மிகுந்த அதிர்ச்சியை அன்றோ உண்டுபண்ணியுள்ளது. இவ்விதம் அகாலத்தில் இவரைப் பிரிந்து நாம் நோவுபடவேணுமென்றே அதற்கு அங்கமாயே இவரை அகில குணபரிபூர்ணராய் ப்ரகாசிக்கச் செய்து நமக்கு அவன் காட்டி மறைத்தான்போலும்.

சக்ரவர்த்தித் திருமகனை மற்றவரோடு ஒப்பிடும்போது 'க்ஷமயா ப்ருதிவீஸம:' பொறுமையில் பூமிக்கொப்பானவர், 'காம்பீர்யாத் ஸாகரோபம:' கலங்காத தன்மைக்குக் கடலை ஒத்திருப்பர் என்றபடி ஒவ்வொரு குணத்தை இட்டு ஒவ்வொன்றை உவமிக்க வேண்டியிருக்கும். சக்ரவர்த்தித் திருமகனின் குணராசிகள் அனைத்தையும் சேர எடுத்து 'இவருக்கு இத்துறையில் இன்னார் உபமானம் என்று பேசப் போகாது. அவ்வளவு குணராசிகளும் சேர்த்தியாக இவரைத் தவிர்ந்து அயலாரிடம் காணக் கிடையாதல்லவா? அதனால் தான் 'பஹவோ ந்ருப! கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே' என்று அவனுடைய கல்யாண குணங்களைச் சேர்த்துச் சொல்லும்போது உபமானமின்றிக்கே, 'குணங்கள் பல பல உண்டு உன் மகனுக்கு. நான் சொல்லுவேன் கேளாய்' என்று தொடங்கி மஹர்ஷி கூறினான். இவ்விதமே இவ்வழகியசிங்கரின் குணச் சிறப்புகளைச் சேர்த்து அநுஸந்திக்கும்போது மற்றொன்றை உவமித்துக் கூறவியலாதிருக்கிறது.

பொதுவில் செல்வமும், ஸரஸ்வதியும் சேரக் காண்பதரிது. ஜ்ஞானத்தில் வந்தவாறே அத்யயனம், அருளிச்செயல்களில் ஆழ்ந்த ஜ்ஞானத்தோடு, ஈடுபாடு, அதன் பயனான பகவத்பக்தி. ந்யாய மீமாம்ஸா வேதாந்த சாஸ்த்ரங்களில் கரைகண்ட பாண்டித்யம், இவைகளோடு ஸதாசாரஸம்பத்தி, இவையனைத்தும் பால்யம் தொடங்கி அமைந்திருந்தன. பரம்பரைச் செல்வம் படைத்தவர் பரிசுத்த வ்ருத்தியைக் கைக்கொள்ளல் அரிதிலும் அரிது. ஏகாதசி உபவாஸமும், ஏகயோக க்ராமாதிபத்யமும் எங்காகிலும் கண்டதோ, கேட்டதோ உண்டா? ஸௌகர்யமும், சரீராரோக்யமும் உள்ள பேர் கடுமையான ஆஹாரநியமங்களைப்பின்பற்றுவார்களா? எல்லாவற்றிற்கும்மேலாக சாஸ்த்ரார்த்தங்களை அழகுற வெளியிடும் ஆற்றல் அமைந்தவர். இவருடைய த்ரமோபதேசங்களைக் கேட்டுத் தவறு திருந்தி தன்யர் ஆனவர்கள் அநந்தம்பேர்கள்.

இவர் அவதரித்த திவ்யதேசம் திருவிண்ணகரம் என்னும் ஒப்பிலியப்பன் ஸந்நிதி.

அங்கெழுந்தருளியுள்ள எம்பெருமானை நம்மாழ்வார் 'நற்குரவும் செல்வமும் சுவர்க்கமும் நரகமுமாய் அனைத்துலகும் தானாய்நின்றவன்' என்று மங்களாசாஸனம் செய்துள்ளார். ஸம்பத்து, தாரித்ரியம், ஸ்வர்க்கம், நரகம் இவை போன்ற— விருத்தமாய்- முரண்பட்டவை போன்ற பொருள்களையும் தனக்கு விபூதியாகக் கொண்டவன் எம்பெருமான் என்ற ஆழ்வார் கருத்தை அடிபொற்றினாற்போல் அத்திவ்யதேசத்தில் இவர் சேராத குணங்களைத் தன்னிடம் சேர்ப்பித்துக்கொண்டு தோன்றினார். திருமங்கையாழ்வார் இத்திவ்யதேசத்தெம்பெருமானைத் திருவடித் தொழும்போது பாசுரந்தொரும் 'வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே' என்று இல்வாழ்க்கையை வெறுத்து விண்ணப்பித்ததை இவர் கைக்கொண்டு ஸகல ஸம்பத்துக்களையும் துறந்து ஸந்யாஸியானார். பிறந்த இடத்தில் திருமங்கையாழ்வாரைப் பின்பற்றினாற்போல் மறைந்த இடத்திலும் அவ்வாழ்வார் வாக்கை மெய்ப்பித்தருளினார். 'நாடி நான் வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்' என்ற ஆழ்வார் பாசுரம் அப்படியே இவர் பக்கல் அமைந்தது. பல திவ்ய க்ஷேத்ரங்களைத் தாண்டி நைமிசாரண்யத்தை நாடி வந்தடைந்து அரண்யரூபியான அவன் திருவடிகளில் இளைத்து விழுந்தவர் போல் எழுந்திருக்கவே இல்லை. ஆக இவ்விதம் சேராத குணங்களின் சீரிய சேர்த்தி க்ஷணத்தில் சிதைந்து மறைந்தது. அந்தோ!

நாமும் இவை எல்லாவற்றையும் நினைத்து தான் அன்று தேவனார்விளாகத்தில்:

> 'अहो! भग्नः केतुः विविधपरसिद्धान्तविजयी
> शुचीनां श्रीमत्वेऽपि अनितरजुषां अग्र्यविदुषाम्।
> कुले जातः बाल्यप्रभृति भगवद्भक्तिभरितः
> कमन्यं वै तावद्गुणविभवयुक्तं वदत! भोः! ॥

என்று சொல்லி வருந்தினோம். பரமதங்களை நிரூபாறு செய்து வெற்றி கொள்ளும் வித்வத்வமும் பணம் படைத்தும் பரிசுத்த வாழ்வு வாழ்ந்த பரமைகாந்தி பண்டிதவர்யர் குலப்பிறப்பும் பால்யமே துடங்கி தொடர்ந்துவரும் பக்திப்பெருக்குமுள்ள இவர் இப்போது திடீரென்று இல்லையானார். ஐயோ! இத்துணைச் சிறப்பும் செரியச் சேர்ந்த மற்றொருவரை இம்மண்ணுலகில் காண இயலுமா? என்று அதன் கருத்து. இங்கு '**शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽपि जायते**' என்றகீதாவசனம் கருத்தில் கொள்ளப்பட்டு அதன் பொருள் சிறிது பரிஷ்கரிக்கப்பட்டது. முன் ஜந்மத்தில் யோகத்தைச் சிறிது தொட்டுவிட்டவர் மறுபிறப்பில் செல்வச் சீமான்களும் சுத்தர்களுமானவர் வீட்டில் அவதரித்து யோகத்தை விட்டவிடத்திலிருந்து துவங்கி பூர்த்தி செய்வர் என்ற மேற்படி வசனத்தின் தாத்பர்யத்தில் 'சீமான்களாயிருப்பினும் சுத்தர்களானவர் வீட்டில்' என்று அவ்விரண்டு நிலைகளுக்கும் விரோதம் தோன்ற வ்யாக்யானம் செய்யப்பட்டது. உலக இயற்கையில் அவ்விரண்டும் சேராச் சேர்த்தியாய் அன்றோ இருப்பது. சக்ரவர்த்தித் திருமகனை '**धनदेन समः त्यागे**' என்று வர்ணித்தது ராமாயணம். ஆனால் ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் 'கொடையில் குபேரனை ஒத்தவன்' என்ற மேல் கண்ட வசனார்த்தம், உலக வழக்குக்கு முரணானது. குபேரன் செல்வத்தைச் சேமித்து பூதம் போல் காப்பவனேயன்றி கொடுப்பவனன்று என்று கண்டு அச்ச்லோகத்தின் அந்வயத்தில் சிறியதொரு மாற்றம் செய்தனர். '**त्यागेऽपि**' என்றுஒரு உம்மையைச் சேர்த்துக்கொண்டார்கள், ராமன் மிக த்யாகம் செய்தவரினும் குபேரனைப்போல் கொள்ளமாளாத ஐச்வர்யம் படைத்தவன் கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் கோதிலன் என்னக் கடவதிறே' என்றிவ்வாறு வ்யாக்யானம் செய்தார்கள். அதுபோல் நாமும் '**शुचीनां श्रीमतां**' என்றவிடத்தில் '**श्रीमत्वेऽपि शुचीनां**' என்று கொண்டு விவரித்தோம்.

மலர்ச்சோலையில் பற்பல பூக்களையும் நாடிச் சென்று ஓர் வண்டு மது உண்டு களித்துக் கொண்டிருந்தது. பொழுது சாயும் தருணம் மகரந்தரஸாநுபவத்தால் மெய் மறந்த நிலையில் ஓர் மலர்த் தாமரையில் அந்த வண்டு நீண்ட நேரம் நிலைத்திருக்க அம்மலரின் வாய் மூடிக் கொண்டது. ஸ்வதந்த்ரமாய் எங்கும் திரிந்து

பறந்துகொண்டிருக்கும் சஞ்சலஸ்வபாவமுடைய அச்சிறிய வண்டு மலர்ச் சிறையில் வைப்புண்டால் என் செய்யும்? என்னவெல்லாம் எண்ணும். ஓர் கவி இந்நிலையை பரம பரிதாபகரமாக வர்ணித்துள்ளான். அவ்வண்டு இரவு முழுவதும் இவ்விதம் எண்ணிற்றாம்,– ‘रात्रिः गमिष्यति भविष्यति सुप्रभातम्’–நெல் செய்யப்புல் தேயுமாப்போல் விடிவு வேளை வந்து நெருங்க கொடிய இருட்டும் விடை பெற்றுக்கொள்ளும். ‘भास्वान् उदेष्यति’– இரவு அகன்றவுடன் இரவியும் தோன்றுவான். ‘हसिष्यति पङ्कजश्रीः’-வாய் மூடி மௌனியான தாமரை நங்கையும் தம் மலரிதழ் விரியச் சிரித்து சூரியனை வரவேற்பாள். நமக்கும் விடுதலை சீக்கிரம் கிட்டும். ‘इत्थं विचिन्तयति कोशगते द्विरेफे’– என்றிவ்விதம் மலரில் சிறைபட்ட அச்சிறிய அறுகால வரிவண்டு விடிவிற்குக் காத்து எண்ணி எண்ணி ஏங்கி இருக்கும்போது, ‘हा! हन्त! हन्त!’- அந்தோ! பரிதாபம்! இவ்விதம் நேர்ந்துவிட்டதே என்று கவி அங்கலாய்க்கிறான். அங்கு நடந்த அலங்கோலத்தை ஆபத்தை, கருணை மேலிட்டால் கவி சொல்ல மாட்டுகிறான் இல்லை. சொல்லிலடங்காத சோகக் கதை. சிறுத்தொண்டர் என்னும் தேவதாந்தர பக்தரும், அவர் மனைவியும் தெய்வசோதனைக்குள்ளாகி தன்னிஷ்ட தெய்வத்திற்கு தங்களுடைய ஒரே மகனைக் கொன்று கரியாக்கி பாவனை செய்விக்க முயலுகின்றனர். ‘कुलशोकहरं कुमारं एकं कुहनाभैरव पारणोन्मुखाभ्याम्’ வீதியில் விளையாடிக் கொண்டிருந்த அப் பாலகனை ‘அப்பா! வாடா இங்கு’ என்று அன்பு ததும்ப அழைத்தார்களாம். ‘उपहूय कृतादरं पितृभ्यां’ இருட்டு உள்ளில் அழைத்துச் சென்ற பிறகு அங்கு என்ன நடந்தது? கவி சொல்லத் தயங்குகிறான். நாப் புறளவில்லை. ‘उपरि प्रस्तुतं’ என்று ஒருவாறு சொல்லி மூடி மறைக்கிறான். மேல் நடக்க வேண்டியது நடந்தே விட்டது என்கிறான். விட்டுச் சொல்ல வாய் வரவில்லை. ‘श्री कृष्णाय नमः’ என்று நாம் சொல்வதே போல் ‘ओं नमः शिवाय’ என்கிறான் கவி. இவ்வளவு நாவில் வைத்துச் சொன்னதற்கும் நாமஸ்மரணத்தை ப்ராயச்சித்தமாக நாடுகிறான்.

அதுபோல் இங்கும் கவி மேல் நடந்ததைக் கூற க்ஷணகாலம் கூசுகிறான். பிறகு ஒருவாறு மனம் தேறி நடந்ததைக் கூறி நம்மைத் திடுக்கிட வைக்கிறான். ‘नलिनीं गजः उज्जहार’- அவ்வண்டிருந்த பூவோடு, இலையோடு, கொடியோடு சேர்த்து அத்தாமரையை மத்தகஜம் ஒன்று உருவி வாங்கி, காலின் கீழ் இட்டுத் துகைத்ததந்தோ! என்கிறான்.

‘त्वयि उत्तरस्यां दिशि तीर्थयात्रावशेन याते सुसुखं निवृत्तिः। कदा कदा इत्येव चिराभिकांक्षिणः वयं हताः त्वयि अपुनर्निवृत्ते ॥’

நம் நிலையை அவ்வண்டுடன் ஒப்பிட்டுப் பேசலாம். வடதிசைக்கெழுந்தருளின இவர் வரவு அணித்தாகும். அனுபவத்தை இழந்ததால் வந்த சிந்தையின் அந்தகாரம் அகலும். புனிதநீராடிப் பொங்கிப் பூரித்து ஜகதாசார்ய சூர்யன் இத்திக்கில் உதயமாவான். நமது மனத்தாமரையும் ஆனந்தவிகாஸம் அடையும் என்று எல்லோரும் எண்ணி இருந்தோம். நாம் அத்தகைய பாக்யம் பெற்றிருக்கவில்லை. அவன் இவரை அழைத்துக்கொண்டான். அங்குள்ளவர் இப்பேறு பெற்றனர். நாம் வரவேற்க எண்ணி இருந்த இவரை வரவேற்று வைகுந்தமாநகரவாயில் திறந்து கொண்டது. அங்கிருந்தபடியேனும் இவர் எல்லோரையும் கடாக்ஷித்து சேமம் செய்து வைப்பாரென்று ப்ரார்த்திக்கிறோம்.

श्लोकाश्शोकसमुद्गाराः चित्तशुद्धिविधित्सया ।
विहिता न तु वैदग्ध्यात् क्षम्यन्तां शान्तिभूषणैः ॥

ஸ்ரீ:

பகவத் ஸங்கல்பம்

[ஸ்ரீ. உப. திண்டுக்கல், ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]

பெருமாளை நோக்கிப் பிராட்டி,

'ईर्ष्यारोषौ परित्यज्य भुक्तशेषमिवोदकम् ।
नय मां वीर! विस्रब्धः पापं मयि न विद्यते ॥'

என்று அருளிபதாக ஸ்ரீ வால்மீகி பகவான் அயோத்தியாகாண்டத்தில் (27-6) அருளிச் செய்திருக்கிறார். ஈர்ஷை என்றால் அஸூயை அதாவது—பொறாமை. அதையும் கோபத்தையும் தூர எறிந்து, என்னை வநத்திற்கு அழைத்துக்கொண்டு போக வேண்டும் என்று பெருமாளை வற்புறுத்துகிறாள் பிராட்டி. அந்த ச்லோகத்தை ஸேவிக்கும் போதெல்லாம் அடியேனுக்கு ஒரு ஸந்தேஹம் எழுவதுண்டு. ஸகலகல்யாணகுணாகரனாய் அகிலஹேயப்ரத்யநீகனாயுள்ள ஸர்வேச்வரனுக்கும் பொறாமை என்ற கெட்டகுணம் உண்டா? இது பிராட்டி வாக்யமாக இருப்பதாலும், அதுவும் வால்மீகியால் பாடப்பெற்று இருப்பதாலும், வெறும் காவியமுறையென்றோ, அதிசயோக்தி யென்றோ சொல்லி அதை அநாதரிக்கமுடியாதே. பாஸகவி, தன் பிரதிமாநாடகத்தில் சித்திரகூடத்துக்கு வந்த பரதாழ்வானைக் கண்டதும் பெருமாள் வாக்கியமாக ஒரு ச்லோகம் அமைக்கிறான்:—

'सुचिरेणापि कालेन यशः किञ्चिन्मयार्जितम् ।
अचिरेणैव कालेन भरतेनाद्य सञ्चितम् ॥'

வெகு காலம் கஷ்டப்பட்டு நான் ஸம்பாதித்த யசஸ்ஸை இந்தப் பரதன் இப்படி ஒரு நொடியில் அடித்துக்கொண்டு போய்விட்டானே! என்று பொருள்படும் இந்த ச்லோகம் அஸூயையாலே வெளிவந்ததாகத்தான் ஆகவேண்டும். ஆனால் பெருமாளைப்பற்றி அந்தக் கவிக்கு அவ்வளவுதான் அறியமுடிந்தது எனக் கூறிவிடலாம். தெய்வீகக்கவியும் ஆதிகவியுமான வால்மீகிவிஷயத்தில் அப்படிச் சொல்ல முடியுமா? அந்ருதமான - பொய்யும் அதிவாதமும் கலசாத காவியமாயிற்றே! அதுவும் பிராட்டி திருவாக்காக அமைந்த ஒரு ச்லோகத்திலல்லவா இது காட்டப்படுகிறது. இப்படியெல்லாம் அடியேனுள்ளம் ஊசலாடிக் கொண்டிருந்தது.

சென்ற 25-11-57 திங்கட்கிழமை காலை தினசரிப் பத்திரிகையில் ஸ்ரீமதஹோபிலமட திவ்யாஸ்தானத்தில் 43-வதுபட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகனைப் பெருமாள் பரமபதமேற எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய்விட்டாரென்ற செய்தியைப் படித்ததும் மேற்கூறிய ஸ்ரீமத்ராமாயணச்லோகம் முழு உண்மைதான் என்று அடியேனுக்குப் புலப்பட்டது. 'கோபமாஹாரயேத் தீவ்ரம்' என்பதுபோல் அஸூயையையும் மேற்கொள்ளக்கூடும் ஸர்வேச்வரன் என்று விளங்கியது. ஈச்வரஸ்வரூபத்தில் கோபம் எப்படித் தட்டாதோ, அப்படியே அஸூயையும் தட்டாது என்பது வாஸ்தவம் தான். இருப்பினும் நிக்ரஹாநுக்ரஹமுறையில் எம்பெருமான் பல ஹேயகுணங்களைத் தக்க ஸமயங்களில் கையாள்வது உண்டு. இல்லாவிடில் 'கஸ்ய பிப்யதி தேவா: ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே' என்பது எப்படி ஒரு குணவானுடைய குணகதனமாகும்? பொறாமையும் பெருமாள் ஆவிஷ்கரிக்கவல்லதொரு குணம்தான் என்று தீர்மானித்தேன்.

இல்லாவிடில் எம்பெருமான் அம் மஹாபுருஷனை ஏன் இவ்வளவு விரைவில் திருவுள்ளம் பற்றவேண்டும்? அதிவிலக்ஷணமான முறையில் சென்ற $4\frac{1}{2}$ ஸம்வத்ஸரங்களாக நாடெங்கும் ஸஞ்சரித்து, கோடிக்கணக்கான மக்களுக்குப் பெறற்கரிய ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹன் திவ்ய ஸேவையையும், தமது கருணை ததும்பும் கடாக்ஷத்தையும், அன்பு ததும்பும் உபதேசங்களையும் கொடுத்து வாழ்வித்து வரும்போது, யாத்திரை பூர்த்தியாகும் வரை கூடப் பொறுக்காமல், இப்படித் தன் திருநாடேறக் கொண்டு போவனோ? ஸ்ரீமதழகியசிங்கர் திவ்யதேச

யாத்திரையும், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸஞ்சாரமும் நன்றாக முடிந்து ஸ்ரீமதழகியசிங்கரும் பெருமாளும் திருவுள்ளூருக்குச் சுகமாக எழுந்தருளியிருந்தால், அன்று ராமாவதாரத்தில், தான் நாடெங்கும் நடந்து பெற்ற பெருமை ஸ்ரீமதழகியசிங்கருக்கும் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தால்தானே பெருமாள் இப்படிப் பல்லாயிரமக்கள் துன்பக்கடலுள் துளங்கும் வண்ணம் ஸ்ரீமதழகியசிங்கரை விண்ணேறச் செய்திருக்க வேண்டும். பெருமாள் சக்ரவர்த்தித் திருமகனாக பெரியபெருமாளை அயோத்தியிலேயே விட்டு விட்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்தே சென்றார். இன்று நம் ஸ்ரீ அழகியசிங்கர் தம் ஆராத்யமூர்த்தியான சிங்கப்பிரானை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு தெற்கிலிருந்து வடக்குநோக்கிச் சென்று இப்புனிதநாட்டைப் பிரதக்ஷிணம் செய்யும் முறையில் எழுந்தருளினார். சென்னை, சேலம், மைஸூர், ஆந்த்ரம், மத்தியப்ரதேசம், பம்பாய் முதலிய மாகாணமக்களெல்லாம் பெருமாளையும் ஆசார்யனையும் ஸேவித்து க்ருதார்த்தர்களானார்கள். ஒருவரும் நினைக்கவும் முடியாத முறையில் பதரிசாச்ரமம் எழுந்தருளி மீண்டார். இவைகளிலெல்லாம் பிறர் ஒத்துழைப்பையும் ஸம்பாதித்துக்கொண்டு பெருமாளின் யாத்திரையை வெகு அழகாக நிர்வஹித்தருளினார். பல முக்கிய நகரங்களில் ஸ்ரீமதழகியசிங்கர் விஜயம் வெகு விபவமாக நிகழ்ந்தது. இம்மாதிரி கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என்று வருஷங்களும் மாதங்களும் கழிந்த பின்னரும் அப்பெருமைகளை இன்றளவும் அங்கங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். எத்தனை பேருக்கு பஞ்சஸம்ஸ்காரம்! எத்தனை பேர் பரஸமர்ப்பணம் செய்து கொண்டனர்! எத்தனை பேருக்கு நல்வார்த்தைகளும் ஸதுபதேசங்களும்! இவைகளுள் ஒன்றும் கணக்கிலடங்காத வண்ணமேயன்றோ நிகழ்ந்தன. பார்த்தான் ஸர்வேச்வரன். எல்லோரும் வீடு பெற்றால் உலகத்துக்கு முடிவு ஏற்பட்டு விடுமோ; தனது லீலாவிபூதிக்கு முற்றுப்புள்ளி விழுந்து விடுமோ என்று எண்ணினான் போலும் இறைவன். இவ்வளவு போதும். உத்தரப்ரதேசத்தில் ஒரு பாகமும், வங்காள மஹாநாடும் ஒரிஸ்ஸாவும் இந்த மஹானால் ஸஞ்சரிக்கப்படவேண்டாம் என்று கருதி, வெகு விரைவில் அதிலும் திடீரென்று, ஒருவரும் எதிர்பாராதபடி ஸ்ரீ அழகியசிங்கரின் நிர்யாணத்தை ஸங்கல்பித்தான். வேறு என்னவென்று நாம் சொல்ல வல்லோம்?

நம்மில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக பாபங்கள் பிரதிபந்தங்களாக இருப்பனபோல் ஸமூஹங்களுக்கும் பாபங்களிருந்து பாபபலன் களையளிக்குமென்று பெரியோர் சொல்வதன் உண்மை இந்த நிகழ்ச்சியால் நன்கு விளங்குகிறது. ஆஸேதுஹிமாசலம் வஸிக்கின்ற ஸ்ரீ வைஷ்ணவர்களனைவருக்கும் நல்லொட்ப்பிருந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீமதழகியசிங்கரையும் அடிபணியும் பாக்கியம் கிடைத்தது. திடீரென்று அவர்களனைவரும் திடுக்கிட்டுத் திகைத்துப்போகும்படி இந்தப் பெருநஷ்டம் ஏற்பட்டு விட்டது. இந்தப் பிரிவினால் ஒரு குடும்பமன்று; ஒரு கிராமமன்று; ஒரு வட்டாரமன்று; ஒரு ஜில்லாவன்று; ஒரு தேசமன்று; இந்திய நாடடையத் துன்பத்தில் ஆழ்ந்து விட்டது. ஸ்ரீமதழகியசிங்கர் இப்பதவியெய்திய காலத்தில் களிப்புற்றுப் பெருமிதமெய்திய பேர்களெல்லாம் இவ்வளவு சீக்கிரத்தில் இந்த மஹாபுருஷனை இழந்துவிடுவோமென்று எண்ணவில்லையே என்று பசுவைப் பிரிந்த கன்றுகள் போல் பரிதபிக்கிறார்கள். காரணம்_ அதிவிலக்ஷணமாக உயர்ந்த ஆஸ்தானத்தை நிர்வஹித்தமை. முன்னோர்கள் செய்தறியாத பல பெரிய காரியங்களை ஸாதித்துப் போந்தமை. ஆழ்ந்த படிப்புக்குச் சேர உயர்ந்த ரீதியில் அநுபவம். ஆத்மாநுபவத்தை அடியார்களனைவருக்கும் எட்டும்படி செய்ய வல்லமை. அருகணைந்தவரையெல்லாம் நல்வார்த்தை சொல்லித் திருத்திப் பணிகொள்ள வல்ல சொல்லினிமை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராதிக்கும்போதும் ஆங்காங்கு திவ்யதேசங்களில் எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளும்போதும் அருகிருந்தவர்களையெல்லாம் ‚ஸ்வாதயந்தே பதம் தே’ என்ற கணக்கில ஈடுபடுத்தவல்ல அழகிய நிர்வாஹங்கள்,

இவைகளையும் இவை போன்ற பல பெருமைகளையும், இந்த யாத்திரையில் நிகழ்ந்தவற்றை, நேரிலும் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகா மூலமும் அநுபவித்து வந்த பேர்கள் அநந்தம். அவர்களுடைய இந்தப் பேரானந்தம் முற்றுப்பெற்றது ஈசன் செயலால். பகவத்ஸங்கல்பம் என்று ஆறியிருக்கத்தான் வேண்டும். இயலவில்லையே!

ஆனால் ஒன்று; பகவத் ஸங்கல்பத்தின் பெருமை நம் துன்பத்தின் இடையிலும் நமக்குப் பிரகாசிக்கத்தான் செய்கிறது. நம்மையெல்லாம் சோகத்திலாழ்த்தும் போதும், நம் கண்ணைத் துடைக்கவல்ல பல ஸந்நிவேசங்களை அமைத்து வைத்தான் எம்பெருமான். ஸகல புராணங்களுக்கும் அவதாரஸ்தலமான நைமிசாரண்யம் நம் அழகியசிங்கருக்கு நிர்யாண ஸ்தலமாய் அமைந்தது. மஹரிஷிகளெல்லாம் பண்டைக்காலத்தில் கூடிக்கூடி எம்பெருமான் பெருமைகளை 'போதயந்த: பரஸ்பரம்' என்ற முறையில் சொல்லியும் கேட்டும் அனுபவித்த புண்ணிய பூமி. அந்தப் பெருமை ஒருபுறம் இருக்க, எம்பெருமான் பக்கல் ஸர்வார்த்தக்ரஹணம் செய்தருளிய திருமங்கையாழ்வார் தமக்கு அந்திமதசை ஏற்பட வேண்டிய ஸ்தலமாக வரித்த திவ்யதேசம். 'அடியேனருவாணுள் சென்னாளெந்நாள், அந்நாள் உனதாள் பிடித்தே செலக்காணே' என்றும், 'தளராவுடலம் எனதாவி தளர்ந்து போம்போது இளையாதுனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசை நீயே' என்று ஆராவமுதாழ்வான் திருவடிகளிலே இறைஞ்சுகிறார் நம்மாழ்வார். திருமங்கை மன்னனோ—

'ஊனுடைச் சுவர் வைத்து என்புதூண் நாட்டி
உரோமம் வேய்ந்து ஒன்பது வாசல்
தானுடைக்குரம்பை பிரியும்போதுந்தன்
சரணமே சரணமென்றிருந்தேன்
தேனுடைக்கமலத் திருவினுக்கரசே!
திரைகொள்மாநெடுங்கடல் கிடந்தாய்!
நானுடைத்தவத்தால் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்'

என்று தம் உடலைத் துறப்பதற்கு நைமிசாரணியத்தை விரும்பினார். அவருக்குக் கிடைக்கவில்லை. நம் ஸ்ரீ அழகியசிங்கருக்கே கிடைத்தது. 'வாணிலாமுறுவல்' திருமொழி எந்த நிலையில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்தில் ஓடியிருக்க வேண்டும் என்று நிகழ்ச்சியைக் கொண்டு ஊஹித்தறியக் கிடக்கிறது. 'நானுடைத் தவத்தால்'. அத்தவம் பெரிதும் ப்ரகாசித்தபடியால் தான் ஸ்ரீமதழகியசிங்கருக்கு அங்கே நிர்யாணம் நிகழ்ந்தது. திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திற்குக் குறித்த நாள் திருவிண்ணகர்ப்புகும் திருநாளாக மாறியது. இடமும் காலமும் இவ்வளவு நன்றாக அமைந்தபடி தான் என்னே!

திருமங்கைமன்னன் பாசுரத்தோடு நம்மாழ்வார் பாசுரமொன்றும் நம் நினைவில் நன்றாக அழுந்த இந்த நிகழ்ச்சி இடம் கொடுத்திருக்கிறது. 'எம்பெம்மானோடு ஒத்தே சென்று அங்கு உள்ளங் கூடக் கூடிற்றாகில் நல் உறைப்பே' (திருவாய்மொழி— 8-8-8) என்ற அநுஸந்தானமும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்தில் நன்கு இடம்பெற்றிருக்குமோ என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது. இல்லத்தாரோ புறத்தாரோ அருகு மொய்க்க அவகாசமே இல்லாது, கேவலம் எம்பெருமான் ஒருவனே அருகிருந்து அழைத்துச் சென்றதாகக் கூடத் தோன்றுகிறது. கர்ப்பஸ்ரீமானாயிருந்த இம் மஹாபுருஷன் ஆச்ரமஸ்வீகாரமான பிறகு ஆவிஷ்கரித்த விரக்தியையும், திருமேனியின் ஸௌகுமார்யாதிகளைச் சிறிதும் கணிசியாது கடுமையான அநுஷ்டானங்களை மேற்கொண்டு வந்ததையும், யாத்திரையில் பல இன்னல்களை ஸஹித்து வந்ததையும் கண்டு வியந்த பலருக்கு இப்படி நிர்யாணம் நேர்ந்ததிலிருந்து இவரது விரக்தியும் பக்தியும் ஶரண்யனுக்கே உகப்புக்கு நிலமானதுடன் ஆழ்வார்பாசுரத்தை மெய்ப்பிக்கும் முறையில் நல்லுறைப்பாகச் சமைந்தருளினான் ஸர்வேச்வரன் என்று எண்ணம் எப்படி உதியாமல் போகும்?

இப்படிப்பட்ட நம் ஆசார்யர்களை நமக்குக் காட்டி வாழ்வித்த ஸ்ரிய:பதியே இப்படிக் காரியம் செய்தால் நாம் யாரோடு நோவது? யார்க்கெடுத்துரைப்பது?

44-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸ்தானத்தை ஸ்வீகரித்துக்கொள்ளுதல்

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் பிரிவு

[ஸ்ரீ உப. கோடிபாலம், துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]

அகலகில்லேனிறையுமென்றலர்மேல்மங்கையுறைமார்பனும், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் சென்ற மாதம் திடீரென்று ஆச்சரிய ஸங்கல்பமொன்றைச் செய்து நமது அழகியசிங்கப் பிரானைத் தன் பரமபதத்திற்கு அழைத்துக் கொண்டு போயினான். இவ்விதம் மாலோலன் காட்டிய விசேஷ க்ருபையின் காரணத்தை அரவும் கருடனுமன்புடனேந்தும் அவனடிக் கீழமர்ந்து புகுந்த நம் ஆசார்யரத்னந்தானறிவார். தௌர்ப்பாக்யத்தால் இக்குருபரனையிழந்த நம்மால் நிரங்குசஸ்வாதந்த்ரியனான எம்பெருமானின் ஸங்கல்பத்தின் மஹிமையைப் பரிச்சேதித்துப் பேசமுடியாதல்லவா. ரக்ஷிக்குமிடத்தில் அபேக்ஷாப்ரதீக்ஷனும் ஆச்ரிதசரீரத்திலே ஆதரயுக்தனும் யதோக்தகாரியுமான பகவான் நம் ஸ்வாமிக்கு ஸ்வபதப்ரதானத்தில் இவ்வளவு த்வரையைக் காட்டி தன் மனோரதப்படி வைகுண்டத்தில் அவரோடு பரிஷ்வங்காஸத்தைப் பூர்ணமாயனுபவிக்க இச்சித்தான் போலும். ஸ்ரீசடகோபனுக்குத் தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமான் எவ்விதம் காத்துக்கொண்டிருந்தானோ அவ்விதமே நம்முச்சோற்பசவர் தன்னை நாடி வருவாரென்று தேவராஜன் ஸ்ரீஹரிலக்ஷ்மியுடன் நைமிசத்தில் மறுபடியும் கோயில்கொண்டு அவஸரப்ரதீக்ஷனாய் நின்றதிருக்கோலத்துடன் ஸந்நிஹிதனாயிருந்தான். ஐந்து நாளைக்கு முந்தித்தான் (18-11-57) நம் ஸ்வாமியின் சரீரவிச்லேஷத்திற்கு ஒரு நிமித்தத்தை உண்டாக்கினான். நம் ஆசார்யஸார்வபௌமனும் அதையே வ்யாஜமாக அவலம்பித்து அவனழைக்க இன்றையோ நாளையோவென்று அவன் நகை செய்ய இடங்கொடாமல் 'நாயிந்தே' என்று போரவனுடன் அவனைத் தரிசித்து 'வைகுந்தம் புகுவதும் மண்ணவர் விதியே' என்றபடி பரமபதத்தில் திருமாமணி மண்டபத்தில் அந்தமில் பேரின்பத்தடியரோடு சேர்ந்து அவனுக்கு வழுவிலாவடிமை செய்ய எழுந்தருளிவிட்டார்.

திருமங்கைமன்னன், ஸ்ரீ தேசிகன் முதலியவர்களைப் போல் நம் அழகியசிங்கப்பரனும் அர்ச்சாவதாரத்தில் ஊன்றியவராய் எல்லா திவ்யதேசங்களிலும் பெருமாளுக்கு மங்களாசாஸனம் செய்தவராவர். மேலும் தனக்கு அபிமதமான கைங்கர்யங்களைப் பெற்றுகந்து தன்னால் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போகப்படும் அர்ச்சாரூபிகளான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், கண்ணன் இவர்களிடம் அடங்காக் காதல் கொண்டவர். ஆயினும் இந்தலீலா விபூதியில் பரிமிதமாகக் கிடைக்கும் பகவதநுபவத்தில் திருப்தியடையாமல் பரிபூர்ணப்ரும்மாநுபவத்தைக் கோறினவராய் மோக்ஷத்தை சீக்கிரமாக அடையத் தீர்மானித்துவிட்டார். அவ்விதமே இணையில்லாத் துணைவனான எம்பெருமானும் தன் முடியுடைவானவர், வேத நல்வாயவர், மற்றுமுள்ள ஆதிவாஹிகர் இவர்களுடன் அழகியசிங்கரை அவருகந்த திவ்ய தேசத்திலேயே எதிர்கொண்டு அழைத்துப் போயினான். இவ்விதம் ஸத்யகாம, ஸத்யஸங்கல்பனும், பரமகாருணிகனும், அனந்த கல்யாண குணவிசிஷ்டனும். ஸர்வலோகசரண்யனுமான ச்ரிய:பதி நம் குருபுங்கவரைத் திருநாட்டிலே பகவத்சேஷத்வஸாம்ராஜ்யத்திலேயபிஷிக்தராய் அபுநராவ்ருத்தியோடு நித்யமுக்தர்களுடன் ஸர்வகாலமும் ஸர்வசேஷவ்ருத்தியும் பண்ணிக்கொண்டிருக்கும்படி செய்தருளினான்

ஸ்ரீ அழகியசிங்கர் பூலோகத்தைவிட்டு விலகிய க்ஷேத்திரம் நைமிசாரண்யம். இத்திவ்யதேசம் திருமங்கைமன்னனால் மங்களாசாஸனம்செய்யப்பெற்றது. ஸூதபுராணிகர் தபஸ்விகளுக்கு அஷ்டாதச புராணங்களை ப்ரவசனம் செய்த ஆரணமென்று சொல்லுகிறார்கள். வானவரும், இமையவர் நாதனும் ஆதியஞ்சோதியை இறைஞ்சுமிடமாம். தருப்பை நேமி உருண்டு நின்று காட்டிக்கொடுத்த இத்

தபோவநம் வெகுநாளாய்க்ஷீணதசையடைந்து பகவானின் கோயிலையுமிழந்து ஒரு அரண்யமாக இருந்ததாம். இனி இவ்விடம் நம் அழகியசிங்கரின் இன்னருளால் மறுபடியும் பகவத்ஸாந்நித்யம் பெற்று ஸ்வாமியின் அர்ச்சையோடு சாச்வதமான புனித க்ஷேத்ரமாய் பொலிந்து விளங்கும் பேற்றையடைந்துவிட்டது. இவ்விடத்தில்தான் நம் மஹாதேசிகன் க்ருத்ராஜனை பெரிய உடையாரைப்போல் சதுர்வித புருஷார்த்தங்களையுமுதறித்தள்ளிவிட்டு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் ப்ரீதியை முன்னிட்டு தன் உயிரை அவனுக்குக் கைங்கர்யமாக ஸமர்ப்பித்தார். தம்பரமென்று தளரா மனத்துடன் தன் திருமேனி ஸௌகர்யங்களை லக்ஷ்யம் செய்யாமல் திக்விஜயம் செய்துவந்த இஜ்ஞானவைராக்யச் செழுமணி எம்பெருமானிடத்தில் தீவ்ர நிஷ்பங்க ராகமுடையவராய் 'பவதர்த்தே விநியுக்த ஜீவிதஸ்ஸந்' என்றவாறு தன் ப்ராணனை அர்ப்பணம் செய்து அவனோடு போகஸாம்யத்தை அடைந்தார்.

இந்த ஸ்வாமியின் ஆசார்யலக்ஷணங்களைப் பற்றியும் கல்யாணகுணங்களைப்பற்றியும் எல்லோரும் அறிவார்கள். அவருடைய ஸஞ்சாரக்ரமத்தை ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் ஸேவித்துவந்த அல்பஜ்ஞனான அடியேன் மனதில் தோன்றிய சில குணாம்சங்களை மட்டும் ஸஹ்ருதயர்களிடம் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன். நம் யதீந்த்ரர் பிறவியென்னும் பெருங்கடலைத் தாண்டி செய்தற்கரிய காரியங்களைச் செய்த நினைப்பார் பிறவியை நீக்கும் பிரான். உணர்ந்தார் தங்கள் கற்பகமான இவரைப் 'பிறவி பெருந்தனைப் புண்ணியம் யாமுடையோம்'. இவர் பகவத்பக்தஜனபானஸராஜஹம்ஸம். அடியார்களுக்கு ஜ்ஞானோத்கர்ஷத்தையும், குத்ருஷ்டி பயநிவர்த்தியையும் அளிக்கவல்ல குருமாமணி. சிஷ்யர்களின் மனோரதஸாரதி. தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு அவரவர்களுடைய அதிகாரசக்த்யாதிகளுக்கநுகுணமாக தத்வார்த்தங்களை உபதேசித்து ஸம்யக்ஜ்ஞானத்தையுண்டாக்கி அவர்கள் பகவானின் திருவடிகளையடையும்படி உபாயாநுஷ்டானத்தைச் செய்வித்து அவர்கள் மீளாத பேரடிமைக்கு அன்பு பெறும்படி செய்துவந்த நிர்வாஹகர். மற்றொரு பேறுமதியாது அரங்கன் கழல் பரவும் உற்றவரே தமக்கு உற்றவராய்க் கொள்ளும் உத்தம நேயர். ஸாத்விகோத்தமர்களான வைஷ்ணவர்களின் நிர்வேத மனோரத ப்ரகாரங்களைத் தன் உபதேசத்தாலும் அநுஷ்டாநமுகத்தாலும் கற்பித்துக்கொடுத்து நிர்வேத சீலத்வத்தோடு விளங்கியவர். உபயவேதாந்தங்களிலும் நிலவரான தத்வதர்சி. ஆழ்வார்கள், திவ்யப்ரபந்தங்கள் ஸ்ரீராமாநுஜதேசிக ஸூக்திகள் இவைகளின் மேன்மையை பல படிகளிலே ப்ரவசனம் செய்து ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்திற்கு பேருதவி புரிந்த புண்ணியர். ஸ்ரீ ஆதிவண்சடகோபனைப்போல் ஸம்ப்ரதாயத்தில் மஹோந்நதநிஷ்டையுடைய பெருமான். செந்தமிழ், வடமொழி செழுமறை யாவும் இவர் திறத்தால் நிறம் பெற்றனவென்பதுமிகையாகாது. உடையவர், ஸ்ரீ தேசிகன் இவர்களைப்போல் ஆஸ்தான நிர்வாஹத்தையும் ஆசார்யக்ருத்யத்தையும் நடத்திவந்த ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர். தன் திவ்யாஸ்தானத்தில் எழுந்தருளிய பிறகு ஸ்வல்பகாலத்திற்குள் பகவத்ஸாந்நிதிகளுக்கும் ஆச்ரிதஜனரக்ஷணத்திற்கும் வேண்டிய அனேக அரிய பெரிய கைங்கர்யங்களை அருளிச்செய்திருக்கிறார். ஸ்ரீவைஷ்ணவ உலகின் யோகக்ஷேமத்திற்கும் ஆத்மோஜ்ஜீவனத்திற்கும் மறுபடியும் ஓர் வேதாந்ததேசிக அவதாரம் வேண்டுமென்று திருவுள்ளம்பற்றி தன் திவ்யாஸ்தானத்தைவிட்டு நித்யவிபூதிக்கு எழுந்தருளிவிட்டார்.

நிரபாயதேசிகநிதர்சிதாமிமாம்
கமலாஸஹாயகருணாதிரோஹிணீம் ।
க்ரமசோ திருஹ்ய க்ருதிநஸ்ஸமிந்ததே
பரிசுத்தஸத்வபரிகர்மிதே பதே ॥

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்

[ஸ்ரீ. உப. ப்ரஹ்மதேசம், தூப்புல், நரஸிம்ஹாசார்யஸ்வாமி.]

ஸ்ரிய:பதியான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனால் அலங்கரிக்கப்பட்ட அஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த 43-வது பட்டம் ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திடீரென்று நைமிசாரண்யம் என்கிற திவ்யதேசத்தில் திருவிண்ணகர் எய்தின செய்தியைக் கேட்டு எல்லோரும் மஹத்தான சோகக் கடலில் மூழ்கியுள்ளனர். கலியின் கொடுமைகளில் இதொன்று. இவ்வருஷத்தில் பெரிய மஹநீயர்களையெல்லாம் கலி பொறுக்கி எடுத்துவிட்டது. காலத்திற்கெல்லாம் அதிபதியான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன்கூட இப்பூமண்டலத்தில் காலத்திற்குட்பட்டே இருக்க வேண்டியவனாக நிற்கிறான். ஸத்யஸங்கல்பனாகையால் தம் ஸங்கல்பத்தை அழியவிடானிறே. அல்லது ஸ்ரீ அழகியசிங்கரின் யாத்திரைக்கு த்ருஷ்டி வந்து அதனாலே இப்படி வந்ததென்றும் கூறலாம். மனத்திற்கும் எட்டவரிதான பதரிநாதனை ஸகல பரிவாரங்களோடு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு புனிதமான கங்கையில் நீராடி மங்களாசாஸனம் பண்ணின பெருமைக்கு ஒரு த்ருஷ்டி வந்துவிட்டதென்றே சொல்லலாம். ஸ்ரீ அஹோபிலமடத்தின் சரித்ரத்திலேயே இதுவரை காணாததோர் அதிசயம் இது. நைமிசாரண்யத்தில் ஏற்கனவே ஸித்தமாக்கப்பட்டிருந்த இடத்தில் ஸ்ரீஸ்வாமிக்கு நிர்யாணம் ஏற்பட்டதை நினைத்தால் வடதேசத்திலும் ஓர் அழகியசிங்கரின் ப்ருந்தாவனம் இருக்க சரண்யன் திருவுள்ளம்பற்றினான் போலும். நாமெல்லோரும் ஸ்ரீ அழகியசிங்கரின் விச்லேஷத்தால் துடிதுடிக்க ஸர்வேச்வரன் திருமாமணி மண்டபத்தில் நித்யஸூரிகளின் திருவோலக்கத்தில் ஓர் உயர்ந்ததான ஜீவரத்னம் கிடைத்ததென்று ஆனந்தஸாகரத்தில் மூழ்கிக்கொண்டிருப்பன். இன்னும் அநேக வருஷங்கள் ஸ்ரீ அழகியசிங்கரை மண்மேல் நிறுத்தி அநேக ஸஹஸ்ர ஜீவரத்னங்களைத் தான் அடையப்பெற்று ஸந்தோஷித்திருக்கலாம். அவனுடைய ஸ்வாதந்த்ரியம் ஒருவர் கேட்கத்தக்கதன்று. அவன் திருவுள்ளமாகில் நாமும் 'ஓம்' என்று இசையவேண்டியவர்களிறே.

பருத்திப்பட்டு ஸ்ரீ. உப. திருவேங்கடாசாரியர் என்கிற ஒரு மஹான் திருவயிற்றில் அவதரித்து ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியர் என்று திருநாமம் சூட்டப்பெற்று விளங்கினார். ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் பால்யத்திலேயே வேதாத்யயனம் பண்ணி, சாஸ்த்ரங்களைக் கற்று மிகவும் அனுஷ்டானபரராய் எழுந்தருளியிருந்தபடி. எப்படி எம்பெருமானாரும், ஸ்ரீ தேசிகனும் பால்யத்திலேயே தங்களுடைய ப்ராசார்யர்களின் அநுக்ரஹத்தைப் பெற்று பிறகு தங்கள் ஆசார்யனின் க்ருபைக்குப் பாத்ரமானார்களோ அது போல் இவரும் ஸ்ரீரங்கநாதசடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் அனுக்ரஹத்தைப் பெற்று பிறகு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் க்ருபைக்குப் பாத்ரமானார். அதிகப்படியாக ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் கடாக்ஷத்திற்கும் விஷயமானார். ஆகையினால் இவருக்கு ஸத்வம்சப்ராப்தியும், ஸதாசார்ய அநுக்ரஹமும், ஸத்ஸம்ப்ரதாயஸித்தியும் கிடைக்கப்பெற்றது ஓர் பாக்ய விசேஷமே. பூர்வாச்ரமத்தில் எழுந்தருளியிருந்தபோதே பஞ்சகாலபராயணராய் இருந்தபடி. இப்படி மூன்று அழகியசிங்கர்கள் க்ருபைக்குப் பாத்ரமானபடியால் இவருடைய ஜ்ஞாந, அநுஷ்டான, வைராக்யங்கள் பரிபூர்ணமாயின.

பூர்வாச்ரமத்தில் பெரிய தனவந்தராய் எழுந்தருளியிருந்தும் 'என்னாவது எத்தனை நாளைக்குப் போதும் ... ... படைக்கும் பெரும் பொருள்' என்கிறபடி அந்த ஐச்வர்யத்தின் நிலையற்ற தன்மையை உணர்ந்து 'பித்ரு மாத்ரு ஸுத ப்ராத்ரு தாரமித்யாதயோऽபி வா । ஏகைகபலலாபாய ஸர்வலாபாய கேசவ: ॥' என்கிறபடி ஸர்வவித பந்துவாயுள்ளவன் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன்தான் என்று நிச்சயித்து ஸங்யாஸ ஆச்ரமத்தை இவர் ஸ்வீ

கரித்தார். ஸ்ரீ ஸ்வாமிக்கு திவ்யப்ரபந்தத்தில் அதிக நோக்காகையால் ‘தஞ்சமாகிய தந்தை தாயொடு ……… நீன் கடல் வண்ணனே’ என்கிறபடி திவ்யதேசத்து அர்ச்சா எம்பெருமானாகிய ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸர்வவித பந்துவாக எண்ணி அவனை ஆராத்யதேவதையாக அடைந்தார். இதுவன்றோ வைராக்யத்தின் ப்ரகாரமும், ஸந்யாஸ ஆச்ரமத்தின் அதிகாரமும்.

ஆச்ரமஸ்வீகாரம் செய்து பட்டத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் திருவாராதனத்தை நடத்திவைத்த ரீதி மிகவும் அழகு. தன் திருமேனி ஸௌகர்யத்தைக் கொஞ்சமும் பேணமல் உதயோபஸ்தானம் செய்தருளி விச்வரூபத்தைதையும், அபிகமன ஆராதனத்தையும் உரிய காலத்தில் நடத்தி இஜ்யா திருவாராதனத்தையும் உச்சிகாலத்தில் பூர்த்தி செய்து ஸ்ரீபாகவத ததீயாராதனத்தை யதாகாலத்தில் நடத்தியாயிற்று. ஆராதகஸ்வாமிகள் யாருக்காவது அஸௌகர்யம் ஏற்பட்டால் ‘அஹம் ஸர்வம் கரிஷ்யாமி’ என்கிற கணக்கில் நமக்குக்கிடைத்ததே’ என்று போர உகந்து ஸகல காரியங்களையும் தாமே செய்தருளியாவது வழக்கம். தம் வாய்ச் சோற்றை அவர்கள்பங்கிட்டுகொள்கிறார்களே என்றுகூட ப்ரதிதினம் எண்ணியாயிருக்கும் என்று அடியேன் அபிப்ராயம். இது அதிசயோக்தி அல்ல. த்வாதசி காலங்களில் இதற்கு முன் அபிகமன இஜ்யா ஆராதனங்கள் ஒன்றாக நடைபெறும். இந்த அழகிடசிங்கர் எழுந்தருளினதும் ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு அஸாதாரணமான அபிகமன ஆராதனத்தைமற்றொருவர்க்குக்கொடுக்காமல்துவாதசியன்றும் தாமேஅநுஷ்டித்தாகும். ஆகையால் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் திருவாராதனம் தவறினால் ‘ஸா ஹாநி:’ என்கிறபடி மஹத்தான ஹாநி என்று திருவுள்ளப்பற்றியிருந்தபடி. ஆச்ரமஸ்வீகாரம் பண்ணின பிறகு ஆச்ரமத்திற்கேற்ற தர்மங்களையே அநுஷ்டித்து அதிலே மிகவும் உறுதியான நிலையுடன் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவுள்ளத்தையும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருவுள்ளத்தையும் பரிபூர்ணமாக நடத்திவைத்த அழகியசிங்கர் இவர் ஒருவரே என்று சொல்லலாம். அவர் இருவரின் திருவுள்ளமாவது:- சேதனர்கள் எந்த மூலையிலிருந்தாலும் அவர்களிடம் சென்று அவர்களை உஜ்ஜீவிக்கச் செய்வதே. அதேபோல் ஸ்ரீ அழகியசிங்கர் பட்டாபிஷேகம் ஆன உடனேயே யாத்ரைக்கு ஸங்கல்பித்துக்கொண்டு கிராமந்தோறும் எழுந்தருளி அங்கங்கே உள்ள ஜீவராசிகளை வாரிப் பிடியாகப் பிடித்து எம்பெருமான் திருவடிகளில் அந்வயிக்கப் பண்ணினார். தாம் அழகியசிங்கராக எழுந்தருளியிருந்த காலம் முற்றும் இப்படியே கழிந்ததன்றோ! மேலும் இந்த லோகத்தில் இருக்கும் காலம் வரை புண்யதீர்த்தங்களில் நீராடி திவ்யதேசத்தெம்பெருமான்களைத் தரிசித்து மிச்சமுள்ள காலங்களில் எம்பெருமான் சீர் கலந்த சொல் நினைந்து போதைப் போக்கினவர்களில் ஸ்ரீ அழகியசிங்கர் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார் என்று சொல்லத் தட்டில்லை.

ஸ்ரீ அழகியசிங்கர் பட்டத்தில் எழுந்தருளியிருந்த காலத்திற்குள் அநேககாரியங்கள் செய்துள்ளார். அவற்றுள் பதரியாத்திரை முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. ஸ்ரீ தூப்புலில் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்குள் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸகல பரிவாரங்களுடன் எழுந்தருளப்பண்ணி திருவாராதனம் நடத்தி அங்கேயும் கிடைத்த சேதனர்களை அவன் திருவடிகளில் ஸமர்ப்பித்தது இரண்டாவதாகும். இவைகள் இரண்டும் ஸ்ரீ அஹோபிலமடத்து சரித்ரத்திலேயே இல்லாததொரு காரியங்கள்.

இப்படி ஸகல குணங்களுடன் கூடிய அழகியசிங்கர் இன்னும் அநேக காலங்கள் எழுந்தருளியிருக்கவேண்டியவர். ஆனால் நம்முடைய தௌர்ப்பாக்யத்தால் அதிசீக்கிரம் அவரை இழந்துவிட்டோம். ஸர்வேச்வரனான பரமபதநாதன் அதிசீக்கிரம் பெற்றான். ‘ஒரு மகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்தபுகழால் திருமகள் போல் வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்’ என்று அஸ்மத் ஸ்வாமி ஸ்ரீ ஸுந்தரஸிம்ஹநாராயணார்யமஹாதேசிகன் (ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி) பரமபதித்தபோது ஸ்ரீ இஞ்சிமேட்டு அழகியசிங்கர் ஸாதித்த பாசுரத்தைச்சொல்லி அடியேன் நிற்கிறேன்.

ஸ்ரீ:

மாலுகந்த மஹான்

[ஸ்ரீ. உ.வே. வித்வான், வேளியநல்லூர், வரதராஜ ஐயங்கார் ஸ்வாமீ, வெம்பாக்கம்.]

ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன் நித்யவிபூதியில் உபயவிபூதிநாதனாய் தமது தேவீபூஷண பரிஜனாயுதஸ்தானவிசிஷ்டனாய் நிரதிசயாநந்தயுக்தனாய் இருக்கச்செய்தேயும், நித்யமுக்தர்களைப்போல் ஸம்ஸாரிசேதனர்களும் இதைப் பெறவேண்டியிருக்க, அதை இழந்து 'சுரிகுழல் மடந்தையர் திறத்து காதலே மிகுத்து' என்கிறபடி மாபாவம் செய்து 'எரியெழுகின்ற செம்பினாலியன்ற பாவையைப் பாவீ தழுவென' என்னும்படி படாதன பட்டு, பவக்கடலைக் கடக்கமாட்டாத இவர்கள் தசையைக் கண்டு 'स एकाकी नरमेत' தனியரே போல் மிகவும் நொந்து இவர்களுக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து சாஸ்த்ரம் கை விளக்காக்கியும், ஆற்றைக் கடக்கக் கொடுத்த ஓடத்தைக் கொண்டு கரை ஏறாதே நீர்வாய்க்காலே ஒழுகி கடலில் புகுவாரைப் போல் பிறவிக் கடலில் புகுந்து அனர்த்தப்படுவதைக் கண்டு நாமே போய் இவர்களைத் திரட்டிக்கொண்டு வரவேணும் என்று 'மீனோடாமை கேழல் கோளரியாய்' என்கிறபடியும் 'राघवत्वेभवत्सीतारुक्मिणी कृष्णजन्मनि' என்னும்படியும் தான் திருவுடனே நானாவுருவம் கொண்டு ஆஸுரப்ரக்ருதிகளாய் தன்னைக் கிட்டாதே எதிர்த்திட்டு அதமமான கதிகளில் விழுவதைக் கண்டு மிருகங்களை தன் ஸஜாதீய வஸ்துக்களைக்கொண்டு பிடிக்குமாப் போலே ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் முதல் பல மஹான்களை அநுப்ரவேசித்தும் சிலரே அந்தமிலாப் பேரின்பமடைந்ததைக்கண்டு அபூர்ணமனோரதனாய், ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருநாமத்தாலும் குணங்களாலும் தனக்கு ஸத்ருசரான ஒரு மஹானை 'अनुप्रविश्य कुरुते यत्सन्निहितमच्युतः' என்று அநுப்ரவேசித்து ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி வீராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகனாய் அவதரித்தருளினபிறகே பூர்ண மனோரதனானான்.

திருவாய்ப்பாடியிலே கண்ணனாய் வந்து தன்னுடைய ரூபௌதார்யகுணங்களால் துர்விஷயப்ரவணரையும் வாரிப்பிடியாகப்பிடிக்கத் திருவுள்ளம் பற்றியதை அறிந்த அங்குள்ள ஐந்து லக்ஷம் குடியிலுள்ள பெண்கள் நோம்பு என்கிற வ்யாஜத்தால் முற்படவுணர்ந்தார் தனித்தனியே சென்று உறங்குகிறவர்களை எழுப்பி எல்லோரும் கூடி நந்தகோபர் வாசலிலே சென்று கண்ணனையும் எழுப்பி அபேக்ஷித்ததையறிவித்து க்ருஷ்ணனையும் கூட்டிக்கொண்டு ஸ்வாபிமதங்களைப் பெறுகிறார்கள்.

அவர்களை யநுகரித்து ஆண்டாளும் தான் மனோரதம் பெற்றதை அநுஸந்தித்து தன்னைச் சேர்ந்தவர்களும் தன்னைப்போல் பலனை அடைய திருப்பாவையை ப்ரவர்த்திப்பித்தாள்.

நம் ஸ்ரீ அழகியசிங்கர் மாலோலனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஒவ்வொரு இடமும் (மூலை முடுக்கு உள்பட) எழுந்தருளி மாயையால் மயங்கிக் கிடப்பவர்களை எழுப்பி கோபஸ்த்ரீகளையும், ஆண்டாளையும் போல் இந்த சேதனர்களை பெருமாள் எழுந்தருளி இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வது முடியாதென்று அவர்கள் இருக்கும் இடத்திலேயே பெருமாளை ஸேவிக்கும்படிச் செய்து ஆளவந்தாருக்கு அழகிய மணவாளனைக் காண்பித்தது போல் இவர் திருவடிகளை உங்களுக்குக் குலதனம், குலதைவதம் என்று உபதேசித்து அவர்கள் மனத்திலுள்ள ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் வெளிப்படுத்தி ஸத்வத்தை வ்ருத்தி செய்து, போய பிழையும், புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசாக்கி அவர்களின் பாரத்தை மாலோலனின் திருவடிகளில் ஸமர்ப்பித்து நிர்ப்பரர்களாக்கினார்.

ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளும் ஒவ்வொரு இடத்திலும் பரீக்ஷித்து மஹாராஜன் தன் ராஜ்யத்தில் கலியை வென்று தர்மத்தை நான்கு கால்களையும் பதியவைத்து நிற்கச் செய்ததுபோல் ஒவ்வொருவரும் சிகையும், வெண்மையான முப்புரிநூலும், பன்னிரண்டு திருமண்ணும், பஞ்சகச்சவேஷ்டியும் 'ये बाहुमूलपरिचिह्नितशङ्खचक्राः' என்னும்படி விஷ்ணுசின்னமும், பகவதாராதனத்தில் பரந்த ஆசையும்

'**कलौ कृतयुगं तस्य**' என்கிறபடி க்ருதயுகமோ என்று ஸந்தேஹப்படும்படி இருந்தது.

ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் ஸகல ஸம்பத்ஸம்ருத்தராய் ஸர்வ போகங்களுடன் '**सात्विकस्स हि विजयः**' என்கிறபடி ஸாத்விகாக்ரேஸரராய் எழுந்தருளியிருந்ததையும், மாலோலன் ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் நியமனத்தை சிரஸாவஹித்த நாள் முதல் தாம் க்ராமைகராத்ரமாய் ஒவ்வொரு கார்யமும் (பகவதாராதனம், பாகவதாராதனம், ஸமாச்ரயணம், ப்ரபதானம் முதலியவை) அந்தந்தகாலங்களில் நடக்க வேணும் என்று திருவுள்ளத்தினால், தம் தேஹத்தில் அபிமானத்தை விட்டு குளிர், பனி, வெய்யில, மழை, தாதுவைஷம்யத்தால் திருமேனியில ஏற்படும் சிரமம் (ஜ்வரம் முதலியவை) எதையும் லக்ஷ்யம் செய்யாமல் கைங்கர்யபரர்கள் தங்கள் தேஹசக்திக் குறைவால் ஏதாவது விளம்பித்தாலும் அதையும் தாமே நடத்தி எப்படிப்பட்ட இடமாக இருந்தாலும் (வண்டி முதலியது போக முடியாத இடம்) அங்கும் பெருமாள் எழுந்தருளாமலிருக்கக் கூடாதென்று பரம க்ருபையால் தம் ஸகல ச்ரமங்களையும் மறந்து எழுந்தருளினதையும் இதைப் போன்ற பல விஷயங்களையும் அறிந்தவர்களுக்கு இந்த மஹான் ஸ்தானவிசேஷத்திற்கு எழுந்தருளியதற்கு பரமப்ரயோஜனம் ஸர்வசேதநஸம்ரக்ஷணமும், தர்மஸம்ஸ்தாபனமுமே என்பதில் விப்ரதிபத்தி (ஸம்சயம்) வர ப்ரஸக்தி இல்லை. பதரிகாச்ரமத்திற்கு எழுந்தருளுவதில் பலச்ரமங்கள் இருந்தும் '**यश्च रामं न पश्येत्तु यञ्च रामो न पश्यति**' என்னும்படி மாலோலன் கடாக்ஷம் பெற்றாலும் போரும் என்று மிகவும் த்வரையுடன் எழுந்தருளித் திரும்பி எழுந்தருளியாச்சுது.

சக்ரவர்த்தித் திருமகன் அன்று அயோத்தியிலுள்ள சராசரங்களை க்ருதார்த்தனாக்கினான்' இன்று ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸேதுஹிமாசலம் உள்ள சராசரங்களை க்ருதார்த்தர்களாக்கினார்.

இப்படி '**चतुरङ्गुलमात्रोऽपि नावकाशस्स विद्यते**' என்கிறபடி தம் திருவடி ஸம்பந்தத்தால் பரிசுத்தமாகாத இடமில்லாமல் செய்து தம் ஆஸ்தானபரிக்ரஹம் ஸபலமானதையும் திருவுள்ளம் பற்றி அடிச்சூடு பிறந்து 'திருவாணை நின்னாணை' என்று ஆர்த்தராய் 'வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்' என்று பத்து பாசுரங்களால் சரணம் புகுந்து அடுத்த திருமொழி சிங்கவேழ்க்குன்றததான் விஷயமாதலால் உடனே அவன் திருவடிகளில் '**सायुज्य समवाप्य नन्दति समं तेनैव धन्यः पुमान्**' என்கிறபடி நிரதிசயாநந்தபரிதராய் '**सोऽश्नुते सर्वान् कामान्**' என்று ஸர்வகாமஸம்ருத்தனாய் இருந்தாலும் தன்னைப் பிரிந்த ஒவ்வொருவரும் பலபடி மனத்தில் கலங்குவார்கள் என்று பௌர்ணமி தினத்தில் ஸூர்யன் தன் அஸ்தமிக்கும் ஸமயம் தன் தேஜஸ்ஸை சந்த்ரனிடம் கொடுத்து தமஸ்ஸை வராமல் செய்து உலகத்தை வாழ்விக்குமாப்போல் இந்த ஸ்தான நிர்வஹணஸமர்த்தராய் எழுந்தருளியிருக்கும் ஒரு மஹானை நியமித்து சேதநரக்ஷணமும் தர்மமும் நிலைகுலையாதிருக்கச் செய்த இம்மஹோபகாரம் யாராலும் மறக்கமுடியாது.

இப்படிப்பட்ட வஸ்துவைப் பிரிந்த நாம் சக்ரவர்த்தித்திருமகன் காட்டிற்கெழுந்தருளிய போது ஜனங்கள் பட்ட பாடு படுவது தவிர ஸத்யஸங்கல்பன் செய்த கார்யத்தில் நாம் செய்வதற்கு வேறு இல்லையாகிலும் '**बिम्बाकृत्य**' என்னும்படி ஸ்வாமியின் அர்ச்சாரூப திருமேனியை ஸேவித்து 'இன்னுமொரு நூற்றாண்டிரும்' என்று பல்லாண்டு பாடி ஸ்வாமி செய்தருளிய மஹோபகாரத்தை மறக்காமலிருத்தல் ப்ராப்தம். ஸ்வயம் புருஷார்த்தம்.

ஸ்ரீ:

ஆசார்யப்ரபாவம்

[ஸ்ரீ. உப. V ஸ்ரீநிவாஸஐயங்கார், சார்ங்கிவிஹார், மாலாட், பம்பாய்]

श्रीप्रह्लादसुरक्षणाय जनकं तस्यैव हत्वा जगत्
रक्षार्थं बभ्रोऽनसूरिनृहरिर्भूत्वा मलेऽहोबिले ।
आदिश्रीशठजियतीन्द्रगुरवे यः प्रेषमन्त्रं ददौ
श्रीलक्ष्मीनरसिंह एष दिशतात्तत्पादभक्त्यादि नः ॥

‘அந்யோஹ்பந்யச்சிந்தபதி ஸ்வச்சந்தம் விததாம்யஹம்’ என்று தாமேயருளியபடி பலரும் பற்பலவிதமான முறைகளில் ஸ்ரீ அழகியசிங்கர் திக்விஜயத்தின் பெருமையைச் சொல்லி அது பலவிதங்களிலும் யாராலும் தற்காலங்களில் சிந்திக்கக்கூட முடியாத நிலையில் விசேஷ ஜய பேரியுடன் பூர்த்தியாகப்போகிறதென்று பல விதமாக மனோராஜ்யம் செய்துகொண்டிருக்கும் ஸமயம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் திருவுள்ளம் அந்யதாவாகப் போனதால் எண்ணற்ற ஜீவராசிகளுக்கேற்பட்ட க்லேசத்தை என்னென்று சொல்வது?

அஹோ! பத! மஹத்துக்கம்! நமது அழகியசிங்கர் நித்யவிபூதிக்கெழுந்தருளிவிட்டார் என்பதை நினைத்தால் நமக்கே இது நிஜம்தானா? அல்லது ஸ்வப்னமா? என்று தோன்றுகிறது. ஸ்ரீ அழகியசிங்கரின் அந்தரங்க ப்ரீதிபாத்ரர்களான அஸ்மதாதிகளுக்கும், இதரர்களுக்கும் இதையும்விட சோககரமான விஷயமுண்டோ? ஹே! சரண்யா! ஜகத்திற்கே ஸூர்யோதயமானாற்போல் ஒரு தேஜஸ்ஸைக் கொடுத்து அதை ஒருமின்னொளி தோற்றும் அவகாசமே இருந்து மறையச் செய்து ஜகத்தை ஒரே இருளில் மூழ்கச் செய்தது என்ன முறையோ?

பூர்வாச்ரமத்தில்

ஸ்ரீ அழகியசிங்கர் கடாக்ஷத்திற்கு பால்யத்திலிருந்தே அடியேன் பாத்ரமானவன் என்பது அடியேனுடைய உபநயநமே திருக்குடந்தையில் அடியேன் க்ருஹத்தில் ஏற்பட்ட சில அஸந்தர்ப்பத்தினால் 39-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்தின் பேரில் தேவனார் விளாகத்தில் ஸ்ரீ. உப. திருவேங்கடாசாரியர் ஸ்வாமி திருமாளிகையில் நடந்ததிலேயே தெரிகிறது. ஸ்ரீ அழகியசிங்கரும் இது விஷயத்தை ஞாபகத்துடன் ஸாதித்ததுண்டு.

ஸ்ரீ அழகியசிங்கர் 40-வது பட்டம் காரக்குரிச்சி ஸ்ரீ அழகியசிங்கரிடம் ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் செய்யுங்கால் ஸ்வாமிக்கு ஜந்மாத்யதிகரணம் நடக்கும் ஸமயம் அடியேனுக்குப் புதுக்கோட்டையில் தானாதிகாரி ஸ்வாமி திருவடிவாரத்தில் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் ஸப்தவித அநுபபத்திப்ரகரணம் நடந்துகொண்டிருந்தது. அடியேன் அடிக்கடி திருக்குடந்தை வந்து அமுதனை ஸேவித்துப் போகும் ஸமயம் அதே ரயிலில் ஸ்ரீ அழகியசிங்கரும் (பூர்வாச்ரமத்தில்) எழுந்தருளுவதுண்டு. அப்பொழுது வேதாந்தவிஷயமாக பேசிக்கொண்டு போகும் ஸமயம் ஸப்தவித அநுபபத்தியைப் பற்றி பேச்சு வரும் ஸமயம் அடியேனுடைய ஸ்வாமி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தவத்தில் ஸாதித்த:—

आश्रयस्य स्वरूपस्य तिरोधानप्रमाणयोः ।
निवर्तकस्यापि तथा निवृत्तेश्वरमापते ॥
अनिर्वाच्यस्योपपत्तिः वक्तुं न युज्यते तथा ॥
अविद्या त्वां नावृणोति चिदचिद्भ्यां प्रकाशसे ॥

என்கிற ச்லோகத்தைச் சொன்னேன். மறுபடி அதை நிதானமாகச் சொல்லச் சொல்லி அதை உபபாதித்து ஒரு மணி ஸாவகாசம் திருச்சி போகும்வரை மந்தகதியான அடியேனுக்கு ஸாதித்த அழகை என்னென்று சொல்வது? ஒவ்வொரு அநுபபத்திக்கும் மித்யாவாதிகளின் பக்ஷத்தை எடுத்துச் சொல்லி நம் பாஷ்யகாரரின் திருவுள்ளத்தை எடுத்துச் சொன்னதின் ரஸாநுபவம் மிற்பட்டு வேதார்த்தஸங்க்ரஹம் ஸேவிக்குங்கால் பரிபூர்ணமாக அநுபவித்தேன்.

பூர்வாசார்யர்களின் வ்ருத்தாந்தத்தில் விசேஷ ப்ரதிபத்தி

ஸ்ரீ அழகியசிங்கர் கெடுங்தெருவில் சாதுர்மாஸ்யத்திற்கு எழுந்தருளியிருக்கும் ஸமயம் முதலே உத்தரதேச யாத்ரையாக எழுந்தருளும் விஷயம் அடியேனுக்கு லேகபூர்வம் தெரிவித்ததில் ஹைதராபாத் எழுந்தருளிய ஸமயம் அடியேனை நியமித்தபடி தெண்டன் ஸமர்ப்பிக்கப் போயிருந்தேன். அச்சமயம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு அடியேனிடமிருந்த க்ருபையும் அடியேனுக்கு ஸ்ரீ அழகியசிங்கரிடம் பக்தி புரஸ்ஸரம் ஏற்பட்ட ப்ரேமையும் 'ஹ்ருதயந்தேவ விஜாநாதி'. அதுகால் மத்யாஹ்னகாலங்களில் விச்ரமித்துக்கொள்ளும் ஸமயம் அடியேனைக் கூப்பிட்டுக் கீழே உட்கார நியமித்தஸமயம் திருக்குடந்தை ஸ்ரீ அழகியசிங்கரின் விசேஷ க்ருபைக்குப் பாத்ரமான அடியேனுடைய திருத்தகப்பனருக்கும் இதே மாதிரி அந்த அழகியசிங்கருடன் ஏகாந்தத்தில் ஸம்பாஷணத்திற்கு அநேக அவகாசங்கள் ஏற்படுவதுண்டென்று சொல்லி திருக்குடந்தை அழகியசிங்கரின் நிர்யாணகாலத்தில் உயில் மூலம் அடியேன் திருத்தகப்பனரிடம் உத்தரக்ரியைகளை நடத்திவைக்கும்படி எழுதிவைத்த அஸாதாரணமான பெருமையைச் சொல்லி உயிலை ஸமர்ப்பித்தேன். பூர்வாசார்யர்களிடமுள்ள பக்தியின் அதிசயத்தால் உடனே எழுந்து உட்கார்ந்து ஸ்ரீ அழகியசிங்கரின் திருவக்ஷரத்தைப் பல தடவை கடாக்ஷித்து அதை ஆமூலாக்ரம் ஸேவித்த உடனே பழைய ரிகார்டுகளைக் கொண்டுவரச் சொல்லி ஸௌம்ய வருஷம் சித்திரைமீ 29வ யிட்ட இந்த உயிலுக்கப்புறம் இரண்டு நாளில் ஸ்வாமி பரமபதித்ததாக ஸாதித்தாச்சு. திருக்குடந்தை அழகியசிங்கர் ஸந்நிதிக்கு ஸ்ரீ. உப. பெருகவாழ்ந்தான் ரங்காசாரியர் ஸ்வாமி எழுந்தருளி வாக்யார்த்தம் நடத்தினதும் டோலோத்ஸவம் நடக்கும் வ்ருத்தாந்தமும் தமக்கு ஜ்ஞாபகம் வருவதாகச் சொல்லித் தாம் விச்ராந்தி செய்துகொள்ளும் ஸமயம் இதை அம்ருதபானமாக அநுபவித்த ரஸம்தானென்னென்பது?

ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம்

மேலும் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் நடத்தும் அழகே அழகு. பங்க்தி ஸேவிக்கும் விதம் அந்யாத்ருசமானது. அந்த ஸமயம் பாஷ்யத்தில் பரிசயமுள்ளவர்களுக்கு ஒருதரம் ஸ்ரீகோசம் ஸேவித்தமாதிரி இருக்கும் உடனே அதை அப்படியே தமிழில் ஸங்கதியைச் சொல்லி முன் சொன்ன விஷயத்திலிருந்து ப்ரக்ருதம் விஷயம் எப்படி எழுந்தது என்பதைச் சொல்லி பிறகு இந்த பங்க்தியின் சுருக்கத்தைச் சொல்லி பூர்வபக்ஷஸித்தாந்தங்களையும் விசேஷமாகச் சொல்லித் தன் அநுபவத்தில் வாக்யார்த்தகாலங்களில் ஏற்பட்ட வாதங்களையும் அவச்யமாக உள்ள இடங்களில் சொல்லும் அழகும் ஸ்ரீ அழகியசிங்கர் தவிர யாருக்குத்தான் உண்டு?

ஹைதராபாத்தில் நான் போயிருக்கும் ஸமயம் ஸமந்வயாதிகரணத்தில் பேதாபேதவாத பக்ஷத்தை எடுத்துக்கொண்ட ஸமயம் பாஷ்ய பங்க்தி 'अथोच्येत । सर्वं हि वस्तुजातं प्रतीतिव्यवस्थाप्यम् । सर्वं च भिन्नाभिन्नञ्च प्रतीयते । कारणात्मना जात्यात्मना चाभिन्नम् । कार्यात्मना व्यक्त्यात्मना च भिन्नम् । ... ... कार्यकारणयोः जातिव्यक्त्योश्च तदुभयमपि नोपलभ्यते ॥ என்கிற ப்ரகரணத்தை ஸேவித்து உபபாதிக்குங்கால் ஸ்ரீ. எஸ் ஆராவமுதய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீ. ஜட்ஜ், ஏ ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமி, ஸ்ரீ. ஆர். நரஸிம்ஹ ஐயங்கார் ஸ்வாமி முதலான ந்யாயவாதிகள் வந்திருந்தஸமயம் அடியேனுக்கொஞ்சம் வ்யவஹிதமாக உட்கார்ந்திருந்தவனை கிட்டக் கூப்பிட்டு பிறகு அங்கிருந்த லௌகிகர்களுக்கு 'ஸ்ரீபாஷ்யமென்றால் ஏதோவென்று எண்ணவேண்டாம்; ந்யாயவாதிகள் ஒவ்வொருவரும் ப்ரதிபத்தியுடன் ஸேவித்தால் ஸுலபமாகப் புரிவதுடன் ஐஹிகாமுஷ்மிகபலமும் உண்டென்று, ஸாதித்தாயிற்று. பிறகு பாஷ்யபங்க்தியை எடுத்துக்கொண்டு 'ஒரே வஸ்து பிந்நமாயும், அபிந்நமாயுமிருக்கும்; எப்படி என்றால் மண் காரணவஸ்து; மண் ஜாதியைச் சேர்ந்தது; அங்கு காரணாவஸ்தையில் அபிந்நம்; பிறகு அதுவே கடம், சராவம்,

சட்டி, பானை முதலியதாக ஆகுங்கால் அது காரியாவஸ்தையில் பிந்நமாகிறது’ என்று அதைப் பலவிதமாக பூர்வபக்ஷியின் பக்ஷத்தை கோஷ்டியில் எழுந்தருளியிருந்தவர்களுக்குப் புரியும்படி ஸாதித்ததைக் கேட்டவர்களின் பாக்யம்தானென்ன! எந்தப் பெருமையைச் சொன்னால் மனதில் ஆறுதலேற்படும்.

பிறகு பய்யாயில் காலக்ஷேப கோஷ்டியில் தொடர்ந்து ஸுமார் இரண்டு மாஸம் அங்வயிக்கும் பாக்யம் அடியேனுக்குக் கிடைத்தது. அதில் எவ்வளவோ லௌகிக வைதிக விஷயங்கள் ஸாதிப்பதுண்டு. அதில் பலவற்றை சென்ற ஸஞ்சிகைகளிலும் எழுதியிருக்கிறேன். குறிப்பாக உத்பத்யதிகரணத்தை எடுத்து உபபாதிக்கும் ஸமயம் ‘वासुदेवात्संयर्षणो नाम जायते; संकर्षणात्प्रद्युम्नसंज्ञं मनः’ इत्यादि பாஞ்சராத்ரவாக்யங்களுக்கு ஸங்கர்ஷண ப்ரத்யும்ந சப்தப்ரதிபாத்யமான வஸ்து பரமகாரணபூதமான பரமாத்மாவே ‘अजायमानो बहुधा विजायते’ இத்யாதி ஸ்வேச்சாக்ருதசரீரவிசேஷபரிக்ரஹமான அவதாரங்களையே வாஸுதேவாத் ஸங்கர்ஷணோ ஜாயதே என்கிற பாஞ்சராத்ர வாக்யங்கள்சொல்கின்றனவேயொழியச்ருதிக்கு விரோதமான ஜீவோத்பத்தியைச் சொன்னதல்ல மேலும் மனஸ்ஸாகிய இந்த்ரியத்திற்கு ஜீவனிலிருந்து உத்பத்தி ஏற்படுகிறது என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. ஆனதால் ஸங்கர்ஷணசப்தத்தால் ஸங்கர்ஷணனென்கிற சரீரவிசேஷவிசிஷ்டனான பரமாத்மா சொல்லப்படுகிறார். அவருக்கே ஜீவசப்தஸாமாநாதிகரண்யத்தால் ஆக்ருத்யதிகரணரீதியில் ‘जीवशरीरकत्वपर्यवसितं जीवतत्वाभिमानित्वं मुच्यते என்று ஸாதித்து இப்படியே ப்ரத்யும்நஸம்ஜ்ஞம் மந: இத்யாதிகளுக்கும் நயநம் பண்ண வேண்டுமென்று சாஸ்த்ரபரிசயமில்லாதவர்களுக்கும் புரியும்படி ஸாதித்தாயிற்று.

பிறகு ‘विज्ञानादिभावे वा तदप्रतिषेधः’ என்கிற ஸூத்ரத்தை எடுத்துக்கொண்டு ‘विज्ञानं च आदि च परब्रह्मविज्ञानादि’ என்று பாஷ்யத்தை யொட்டி ஸாதித்துவிட்டு अद भक्षणे என்று अत्ताचराचरग्रहणात् என்கிற ஸூத்ரப்படி ஆதிசப்தத்திற்கு நிர்வாஹம் சொல்லி பிறகு விஜ்ஞானசப்தத்தாலேயே பரப்ரஹ்மப்ரபாவம் ப்ராப்தமாயிருக்க ஆதிசப்தத்திற்கு அவகாசமென்ன என்று கேட்டுக்கொண்டு நீலோத்பலவத் ஜீவனையிட்டு வ்யாவ்ருத்தி தெரிவிப்பதற்காக ஸாதித்தாயிற்று. மேலும் விஜ்ஞாநாதி பாவே வா என்று ஸூத்ரகாரர் எடுத்ததும் பாஞ்சராத்ரத்தில் ‘सर्वे चैतन्यरूपिणः என்று எல்லா வ்யூஹங்களுக்கும் ஜ்ஞானஸ்வரூபத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ‘वासुदेवः परा प्रकृतिः’ என்று வாஸுதேவசரீரகனான பரமாத்மாவுக்கே பரமகாரணத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் பாஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்ட பரமாத்மாவின் ஜ்ஞானஸ்வரூபத்வம், ‚பரமகாரணத்வம்’ இரண்டையும் ஜ்ஞாபிப்பதற்காகவே ஸூத்ரகாரர் ‚விஜ்ஞாநாதி பாவே வா’ என்று ஸாதித்தார் என்று உபபாதித்துக் கேழ்க்கப் பெற்ற பாக்யத்தை என்றென்றும் மறக்கமுடியுமா?

हे त्रिविक्रम! जनार्दन! त्रियुगनाथ! नारायण! உன் செயல் இப்படியுமுளதோ! உபயவிபூதியும் உன்னுடையதாகவிருக்க லீலாவிபூதியை எழ்மைப்படுத்தி நித்யவிபூதியை செழிக்கச் செய்வது என்ன நியாயமோவென்று சாஸ்த்ர பரிசயமில்லாதவர்கள் கேழ்க்கும் கேள்விக்கு சிரமப்பட்டு ‘वैषम्यनैर्घृण्ये न सापेक्षत्वात्’ என்கிற ஸூத்ரார்த்தத்தைச் சொல்லி இது கர்மவச்யர்களுக்கேற்பட்ட விபூதி; நித்யவிபூதியோ ஸ்வரூபோபந்நர்களெல்லாருக்கும் ஏற்பட்டதென்று ஸமாதானம் சொல்லும்படி வைப்பதும் உனதுளமோ? இது முறையோ? இது தகுமோ?

ஸ்ரீ:

எழுதுவித்த சோகம்

[ஸ்ரீ. உப. வித்வான், வில்லிவலம், P. N. கிருஷ்ணமாசார்யஸ்வாமி, சிரோமணி, செங்கற்பட்டு]

அன்று உள்ளத்தின் அடியில் மிக ஆழ்ந்த யோசனை ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. மறுநாள் பொழுது புலர்ந்தால் ஸ்ரீமதழகியசிங்கரின் திருவவதாரத் திருநன்னாள். பூராடம் திருநக்ஷத்ரம். உலகமெங்கும் கொண்டாடப்படும் உயர் திருநாள். செல்வர்களும், வறியவர்களும் தங்களுக்கு ஏற்ற வகையில் போற்றும் பொன்னாள். ஆன்றோர்களும், அறிவிலிகளும் ஆவலுடன் எதிர்பார்க்கும் அரும் பெருநாள். அடியேனை ஆட்கொண்ட ஆசார்யவள்ளலின் திருத்தோன்றல் திருநாள். இப்பெரு நன்னாளைப் பெரும் பொருட்செலவில் போற்ற ஆற்றாதவனாயிருக்கும் என்னிலையை நோக்கி என் நெஞ்சம் நெகிழ்ந்தது முடிவில் ஓர் முடிவெய்தினேன். பக்திப் பெருக்குடன் ஆடம்பரமின்றிச் செய்யும் பூசனையேயன்றோ வேண்டுவது. தூயதும் அதுவே; ஸ்ரீ அழகியசிங்கரை உகப்பிப்பதும் அதுவே' என்று.

நாடு துறந்து கங்கைக்கரையெய்திய ஸ்ரீராமனைக் குகன் காணச் செல்கிறான். வெற்றுக் கரங்களுடனா? இல்லை. சீரிய பொருள்கொண்டு செவ்வியோர் போற்றும் செம்மல் இராமபிரானுக்குத் தேனையும், மீனையும் பச்சையிடுகிறான். பொருள்கள் புல்லியனவே. காடுவாழ் சாதியினருக்குக் கிடைக்கும் பொருள்களே. ஆயினும் அவன் உள்ளத்தே ஓடும் பக்திப் பெருக்கினால் அவை சிறப்புறுகின்றன. ஸ்ரீராமனும் மறுக்கமாட்டாது தவிக்கிறான். தன் திருவுள்ளத்தைத் தெள்ளெனத் தெரிவிக்கிறான். '... ... ... உள்ளத்தன்பினால் அமைந்த காதல் தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே! பரிவினால் தழீஇய என்னில் பவித்திரம் எம்மனோர்க்கும் உரியன' என்கின்றான். செல்வச்செருக்கு புலப்பட நூறு பொற்காசு கொடுத்து ஒரு முழம் சண்பகமாலை வாங்கி பத்மநாபனுக்குச் சூட்டும் அரசகுமாரன் போலன்றிக்கே அன்பின் மிகுதியினால் காதல் எனப்படும் பக்தி வெளிப்பட அளிக்கும் பொருள் யாதாயினும் அஃதே அமுதத்தினும் இனிதாகும். என் போன்றோர்களுக்கும் மிகத்தூயதாம் அன்றோ என்கிறான். இவ்வழகன் திருவுள்ளம் போலன்றோ ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுள்ளமும்.

ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரதினத்தன்று ஸ்ரீ அழகியசிங்கர் பரமபதித்த செய்தியை ஆப்தரின் மூலம் அறிந்தேன். அந்திமத் திருமேனியையும் தர்சனம் செய்யமுடியாதவாறு மிகச் சேய்மையில் பரமபதித்தது மேலும் துன்பத்தைப் பன்மடங்காகப் பெருக்கிற்று. எதிர்பாராத இச்செய்தி செயலிழக்கச் செய்தது. உடனே மதுராந்தகம் சென்று ஸ்ரீசூர்ணபரிபாலனச் சடங்கில் தொடர்பு கொண்டேன். அப் பெரியவர் கைக் கடிதம் மூலம் உணர்த்தியிராவிடின் இப் பேற்றையும் இழந்திருப்பேன். அந்தத் திருவிருத்தம் ஸேவிக்கும்பொழுது அதில் ஒருபாட்டு நிகழ்ந்தமைக்கு மிகப் பொருந்தியதாய் மனதைத் தன்பால் ஈர்த்தது. அப்பாட்டு பின் வருமாறு:-

சீரரசாண்டு தன் செங்கோல் சில நாள் செலீ
இக்கழிந்த
பாரரசொத்துமறைந்ததுநாயிறு, பாரளந்த
பேரரசே பெம்விசும்பரசே எம்மைநீத்து
வஞ்சித்த
வோரரசேயருளாய் இருளாய்வந்துகுகின்றதே

இப்பாடல் 'பிரிவாற்றாத் தலைவி மாலைப்பொழுது கண்டு இரங்கல்' எனுந்துறையில் அமைந்துள்ளது. 'சிறப்பாக இராச்சியத்தை ஆட்சி செய்து தனது நீதி தவறாத ஆஜ்ஞையைச் சில காலம் உலகில் செலுத்தி பின்பு இறந்த, உலக முழுவதுங்காத்த சக்ரவர்த்தியைப் போன்று சூரியன் மறைந்தது. உலகளந்த உத்தமனே வைகுந்த விண்ணகரின் தலைவனே! எம்மைத் தனியே பிரித்து வைத்து வஞ்சனை செய்த

ஒப்பற்ற நாதனே! இவ்வாறு பிரிவு நிகழா வண்ணம் அருள் செய்வாய். இருள் முன்னினும் மிக்கதாய் வந்து வருத்துகின்றது' என்பது இதன் வெளிப்படைப் பொருள்.

ஸ்ரீ அழகியசிங்கரும் 'ஜ்ஞாநபாஸ்கரர் அறிவுக் கதிரவன்' என்று போற்றத் தக்கவர். ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த நாட்களோ மிகச் சில. அந்த நாட்களிலும் தன் அறவாழியைச் சீரிய முறையில் செலுத்தியாயிற்று. அந்நாட்களில் செய்தருளிய செயல்களை பிறரால் பல நூற்றாண்டுகளிலும் நிறைவேற்றமுடியாதன. இப்படி ஞாயிறு போன்ற ஸ்ரீ அழகியசிங்கர் ஞாயிற்றுக்கிழமை நம்மை வஞ்சித்துப் பரமபதம் எழுந்தருளியாயிற்று. இப்படிப்பட்ட ஆசார்யோத்தமனை அடியொற்றிய பலபெரியோர்களை ப்ரஸாதித்தருளுமாறு ச்ரிய:பதியை வேண்டுவதல்லால் செய்யவடுப்பது ஒன்றுமில்லை. உத்தம ஆசார்யர்களை இழந்தால் கலியின் கொடுமை தாங்கவொண்ணாது மோஹாந்தகாரத்தில் யாவரும் நலிவுறுவர் என்பதையே 'இருளாய் வந்துறுகின்றதே' என்று குறித்துள்ளார்.

நம் பூர்வாசார்யர்கள் யாவரும் தம் புகழினால் ஸர்வபூமியையும் தங்களதாக்கிக்கொண்டு ஸார்வபௌமர் என்று பெயர் பெற்றனர். இந்த ஸ்ரீ அழகியசிங்கரோ புகழினால் மட்டுமின்றி சீரியஈரடிகளைக்கொண்டே ஸஞ்சரித்து குமரி முதல் இமயம் வரையுள்ள ஸர்வபூமியையும் தமதாக்கிக்கொண்டு ஸார்வபௌமர் என்று சிறப்பாகப் பெயர் பெற்றார். ஸ்ரீ அழகியசிங்கரின் வாழ்க்கையை உற்று நோக்கும்பொழுது கர்மாநுஷ்டானத்தில் உள்ள மிகுந்த ச்ரத்தை நன்கு புலனாகும். இந்த ச்ரத்தையினாலே உடல் நலம் குன்றி சீக்ரமே பரமபதிக்க நேர்ந்தது என்றாலும் மிகையாது. தம்மைத்தாமே கட்டுப்படுத்தி அறநெறி ஒழுகிய அறவோராவார். 'सन्तः सच्चरितोदयव्यसनिनः' உலகில் பலர் உடல் நலம் பேணுவதிலும் பொருள் ஈட்டுவதிலும் ஈடுபடாநிற்க நல்லோர் நல்லொழுக்க வளர்ச்சியிலே நாட்டமுடையராயிருப்பர். நல்லொழுக்கத்தை வளர்ப்பது எளிதன்று. பொருள்களை வெறுத்துப் பொறிகளை வென்று தம்மைத் தாமே கட்டுப்படுத்துவர். 'प्रादुर्भवयन्त्रणाः' ஆம்! மார்கழித் திங்களிலும் வைகறை 3மணிக்குத் துயிலுணர்ந்து மிக தூரத்திலுள்ள சீதளமான ஏரியில் சென்று நீராடி வந்ததைத் திருவுள்ளூரில் அனுபவிக்கவில்லையா? இவையனைத்தும் பிறர்க்காகவா நிகழ்ந்தன? தம்மைத்தாமே நியமித்துக்கொண்டதன்றி வேறோர் காரணம் உண்டா? இப்படி எதிலும் குற்றமில்லாதவாறு நடக்கும் நல்லோரையும் பழி கூறும் பாவமாக்கள் பலர் நிறைந்துள்ளனர் இன்றைய உலகில். அவர்களையும் கண்டு அஞ்சி தம் வாழ்நாளைத் துன்பத்துடனே போக்குகின்றனர். 'सर्वत्रैव जनापवादचकिताः जीवन्ति दुःखं सदा.' இனி கவிஞன் இவருக்கு நேர்மாறான சிலரையும் எண்ணிப்பார்க்கிறான். மனம் பொருமுகிறான். இவர்களுள் யாரை உயர்ந்தவர் என்று சொல்வது? என ஆராய்கிறான், அறநூல் அறிவு அற்றவர்கள் மிக பாக்பசாலிகள்; பகுத்தறிவையும், மனச்சாட்சியையும் இழந்துவிடுகின்றனர்; நல்லன செய்தோம் என்று மகிழ்வும், தீயன செய்தோம் என்று கவலையும் கொள்ளார். 'இவர்கள் அன்றோ தங்யர் ஆவர்? என்று இகழ்ச்சிபடப் புகழ்கிறான். 'अव्युत्पन्नमतिः कृतेन न सता नैवासता व्याकुलः युक्तायुक्तविवेकशून्यहृदयो धन्यो जनः प्राकृतः.' பெரியோர் துக்கஜீவனத்தை வெறுக்கமாட்டார்கள். ஸுகஜீவனத்தை விரும்பி கர்மாநுஷ்டானங்களைக் கைவிடார். அதிலும் ஸ்ரீ அழகியசிங்கர் துறவுள்ளத்தால் சரீரத்தையும் பேணாதிருந்தார்.

இத்துணை இன்னல்களுக்கும் ஸ்ரீ அழகியசிங்கரின் தடையற்ற ஸ்வாதந்த்ரியமே காரணமென்று அதை வெறுக்கவும் தோன்றுகிறது. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனாருக்கும், பிராட்டிக்கும் நேர்ந்த இன்னல்கள் பலவற்றிற்கும் அவர்களது தடையற்ற ஸ்வாதந்த்ரியமே காரணம் என்று அதை நிந்திக்கிறார் ஸ்ரீ பட்டர். தன் ஹிதம் விரும்பும் மற்றொருவர் சொற்படி நடந்திருந்தால் இவ்வாறு நேர்ந்திருக்குமா? என்கிறார்.

இங்கு என் மனம் பலவருஷம் கீழ்நோக்கி விரைகின்றது. இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களும் எழுந்தருளியிருந்த ஸமயம் ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் ஸ்ரீ சின்ன அழகியசிங்கரின் திருமேனி நலத்தை நாடோறும் உசாவுவது வழக்கம். ஒரு நாள் அவ்வாறு விசாரித்து விட்டு திருமேனி நலத்திலும் முக்யமாகக் கருத்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் நியமித்தாயிற்று. ஸ்ரீ சின்ன அழகியசிங்கர் பற்றற்ற திருவுள்ளப் பாங்கினால் ‘உடல் நலம் பேணுவதைத் தலையாகக் கொள்வது நம்மனோர்க்குப் பொருந்துமோ?’ என்று விஜ்ஞாபித்தாயிற்று. ஸ்ரீ பெரிய அழகியசிங்கரும் புன்னகை புரிந்து யுக்திகளைக்கொண்டு தாம் நியமித்ததை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியாயிற்று.

महता पुण्यपण्येन क्रीतेयं कायनौस्त्वया ।
प्राप्तु दुःखोदधेः पारं त्वर यावन्न भिद्यते ॥

இந்தச்லோகத்தையாவரும்எடுத்தாள்வதுண்டு. ‘இம்மானுட உடல் மாபெரும் புண்ணியம் எனும் பெரும் பொருள் கொண்டு வாங்கப்பட்டுள்ளது. அது சிதையுமுன் இடர்கடலைக் கடக்க விரைவாயாக’ என்பதே இதன் பொருள்.

ஆனால் ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் இதன் முதற்பகுதியை மட்டும் மேற்கூறிய ஸந்தர்ப்பத்திற்கேற்ற பொருளில் செலுத்தியாயிற்று.

‘தாம் செய்தருளிய அரும் பெரும் திருப்பணிகள் யாவும் சிறப்புற வேண்டுமாயின் தமக்கு அடுத்து ஆஸ்தான நிர்வாஹத்திற்கு எல்லாவற்றாலும் தகுதியுடைய ஒரு ஸ்வாமியை நியமிக்கவேண்டுமே அத்தகைய ஸ்வாமி ஒருவராயினும் கிடைப்பதரிதாயிருக்கின்றதே’ என்ற கவலை பல ஆண்டுகளாக ஸ்ரீ பெரிய அழகியசிங்கரின் திருவுள்ளத்தை வாட்டி வந்தது. அக்கவலையெல்லாம் தீருமாறு ஸ்ரீசின்ன அழகியசிங்கர் ஸ்தானத்திற்கு எழுந்தருளியாயிற்று. இதை ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் தமது பெரும் பேறாகக் கருதியாயிற்று. உண்மையில் இது சிஷ்யர்களின் பேறேயாகும். இவர்களது ப்ரயோஜனமே தமது ப்ரயோஜனம் என்று கருதுவது ஸ்ரீ அழகியசிங்கரின் நல்லியல்பு. ஆகவே தான் செய்த புண்ணியங்கள் அனைத்தையுங்கொடுத்து ஸ்ரீ சின்ன அழகிய சிங்கரை வாங்கிவிட்டதாகத் திருவுள்ளம். ஆம்! புண்ணியத்தால் அன்றிப் பொற்காசுகளால் பெறத் தக்கவரா இந்த அவதாரபுருஷர்? வாங்கிய பொருள் வாங்கினவருக்கே சொந்தம் அல்லவா? இதை வெளியிட்ட விதத்தில்தான் எவ்வளவு ப்ரேமாதிசயம் ததும்பிற்று. ‘தேவரீர்களது இத்திருமேனியை நான் என் புண்ணியப் பொருள்கள் கொண்டு வாங்கியிருக்கிறேன். அது எனக்கே உரியது. அதைப் போற்றவேண்டிய பொறுப்பு தேவர்களுடையது. அதை உபேக்ஷிக்க தேவரீர்களுக்கும் உரிமையில்லை. महता पुण्यपण्येन क्रीतेयं कायनौर्मया’ என்று त्वया என்பதை மாற்றி ஸ்ரீ சின்ன அழகியசிங்கரை நோக்கி ஸாதித்தாயிற்று. இப்பொழுது நினைத்துப் பார்க்கலாம். ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் எழுந்தருளியிருந்தால் இத்தகைய துர்தசை நேர்ந்திருக்குமா? இன்னமும் பல்லாண்டுகள் திருமேனி ஸேவை கிடைத்திருக்குமே! செவிக்கினிய சொற்களைக் கேட்கலாமே. பாகவதபாரதந்த்ரியத்தை விரும்புகின்ற ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளப்படி இது மற்றைய பாரதந்த்ரியம் போலவும் ஆகாதே! இவ்வாறு அவ்விடத்திலுள்ள ப்ரதிபத்தியின் மிகுதியினால் பல்லாண்டு எழுந்தருளியிருக்கவேண்டும் என்ற பேராவினால் திருமேனிக்கு நலிவு தந்த ஸ்வாதந்த்ரியத்தை முன்னோர்கள் வழியில் சிறிது வெறுக்கத் தோன்றுகிறது.

என்ன செய்யலாம்? கலியின் கோலாஹலம் நல்லவர்களை ஒடுக்குகின்றது. ஓர் உயிருக்கும் துரோஹம் செய்யாத, செய்ய எண்ணாத பெரியவர்களுக்கும் துரோகி எனும் பட்டம் கொடுக்கிறான் கலிபுருஷன். பலகாலும் பொய்யே சொல்லி சூதே புரிந்து தீய ஒழுக்கங்களைக் கொள்பவர் யாவர் அவர்களுக்கே தான் துணை செய்து அவரையே நீடூழி வாழச் செய்கிறான் கலிராஜன். ‘கலியும் கெடும் கண்டு கொண்

மின்' என்ற முறையில் தாங்கள் செல்லுமிடங்களில் எல்லாம் க்ருதயுகதருமத்தை நிலைநாட்டி வந்த இம் மா புருஷர்களை ஸ்வாமி துரோகி இக் கலிக்கு யஜமானனாகிய தனக்கு துரோகம் இழைப்பவர் என்று கருதி வைகுந்த விண்ணவர் ஏற்றிவிடுகிறான். இதையேயன்றோ

'कलौ कार्तयुगं धर्मं योनुष्ठातुमिहेच्छति ।
स्वामिद्रोहीति तं मत्वा कलिर्धर्षितुमिच्छति ॥

என்ற நீதியும் கூறுகின்றது.

ஸ்ரீ அழகியசிங்கரிடம் உள்ள நற்குணங்கள் பலவற்றுள்ளும் நாம் அண்டி உய்வதற்குரிய ஸௌலப்யம் (எளிமை) ஸௌசீல்யம் (நல்லியல்பு) இவ்விரண்டும் முக்யமாகக் குறிப்பிடத்தக்கன. எவ்வாறு ஸ்ரீராமனது ஸௌசீல்யமும், ஸௌலப்யமும் குகன்பால் கொண்ட நட்பினால் உலகிற்கு வெளிப்படையாயிற்றோ அவ்வாறே ஏழை ஏதலன் கீழ்மகன் ஆகிய என்பால் கொண்ட வாத்ஸல்யத்தினால் ஸ்ரீ அழகியசிங்கரின் இவ்விரு குணங்களும் உலகிற்கு வெளிப்படையாம்.

இவ்வாண்டு ஸங்கல்பஉத்ஸவகாலத்தில் ரிஷிகேசத்தில் நடைபெற்றமாலோலவித்வத்ஸதஸ்ஸுக்கு அடியேனும் என் சிற்றறிவிற்கேற்ற வகையில் ஸ்ரீபாஷ்யத்தில் ஒரு அதிகரணத்தைப்பற்றி எழுதி விண்ணப்பித்திருந்தேன். அதற்குப் பின்னர் வந்த ஸ்ரீமுகத்தில் 'உன் விண்ணப்பம் கிடைத்தது. திருவுள்ளம் உகந்தாயிற்று; அனுக்ரஹத்தைப் பெற்றுக்கொள்ளவும்' என்று எழுதியிருந்தது. இதுவே அவ் விபவதசையில் கடைசியான அனுக்ரஹம் என்பதை அப்போது நான் உணரவில்லை. புல்லியனான அடியேனும் அனுக்ரஹம் பெற்றேன் என்றால் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸௌலப்யத்தை என்னென்றுரைப்பது?

'दुर्मोचोद्भटकर्मकोटिनिबिडोऽपि' என்ற அறுக்கலுறாப் பொல்லா வாக்கையின் புணர்வினையினால் பிணிப்புண்டவனாயினும் அடியேன் 'सुकृत परिपाकेन महता' ஸ்ரீ அழகியசிங்கர் திருவடியை சரண் அடைந்து க்ருதக்ருத்யனானேன். முன்னமேயே அத்யாத்மசாஸ்த்ரங்களைப் பயிலும் பாக்யம் பெற்றவன்.

இப்படி வீட்டின்ப இறுதியான செல்வமனைத்தும் நல்கிக் காத்தருளிய ஸ்ரீமதாசார்ய ஸார்வபௌமனை விபவதசையிலே (ஜீவிததசையிலே) போற்றியுரைத்துப் புந்தியிற்கொள்ளவில்லை. பிரிந்த பின்னர் உண்டான சோகமே ஏதோ சில வார்த்தைகளை எழுதுவித்தது.

'मुक्तानुभूतिमिह मे प्रददौ नृसिंहः' இவ்விருள்தரு மாநிலத்தே ஸ்ரீ ந்ருஸிம்ஹன் தனக்கு விசேஷித்து மோக்ஷத்தில் அனுபவிக்கக்கடவ பரிபூர்ண ப்ரஹ்மானுபவத்தைக் கொடுத்தருளினான்' என்று அனுஸந்திக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் எதற்கு வைகுந்தம் எய்தினார் என்பதே விளங்கவில்லை.

ஆண்டுகள் தோறும் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் அணித்தானவாறே ஸஞ்சாரக்ரமத்தில் ஆங்காங்கு உள்ள நகரவாஸிகள் தங்கள் தங்கள் நகரங்களுக்கு முதல் நாளே ப்ரார்த்தித்து எழுந்தருளப்பண்ணிக்கொண்டு செல்வது வழக்கம். அவ்வாறே இவ்வருஷம் நித்யஸூரிகளும் தங்கள் திருநகரில் திருநக்ஷத்ரம் கொண்டாடக் கருதி முதல் நாளே ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்றுவிட்டனர் போலும்! எப்படியாயினும் ஏற்பட்ட துக்கம் போக்கவரிதே.

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் மஹிமை

[ஸ்ரீ. உப. மாடபூஷி, புராணம், விஜயராகவாசாரியர் ஸ்வாமி, வடுவூர்.]

ஸ்ரீ அழகியசிங்கர் என்றால் நம் சிங்கப்பிரான் என்பது உலகப் பிரசித்தம். 'அங்கண் ஞாலம்' என்று தொடங்கும் ஸ்ரீகலியனின் ஸூக்திப்படிக்கு பிடரி மயிர் படபடத்தும் தலை மயிர் சிலிர்த்தும் இருக்கும் ஸமயம் அவுணன் அந்த ஸ்வருபத்தைக்கண்டு அஞ்சநேரிட்டதும் அந்த ஸமயத்தில் ப்ரஹ்லாதாழ்வானுக்கு திருக்கண் கடாக்ஷம் ஏற்பட்டதும் நம் சிங்கப்பிரானின் மேன்மையைக் குறிக்கும். அவதாரத்தின் விளைவு தெரியாமல் தற்சமயம் கூட நரசிம்ஹம் என்ற பெயர் சொன்னாலே சிலர் அஞ்சுகிறார்கள். இது அஜ்ஞான க்ருத்யம். இவன் கடகேஸரியாகிலும் கிருபைக்கு இவனே உறைவிடம். கேவலம் ஒரு தானவசிசுபரிபாலனத்திற்காக ஒரு தனி அவதாரம் எடுத்தும் ப்ரஹ்லாதனுக்கு ப்ரதிஜ்ஞை பண்ணியவிடத்தே எழுந்தருளி ஸந்நிதி செய்து ஆச்ரிதனான ப்ரஹ்லாதனுடைய விரோதியை ஸம்ஹரித்து அந்த உபகாரத்துடன் நில்லாது பிற்காலத்து ஸாது ஜனங்களும் ஸேவித்து உஜ்ஜீவிக்கும்படிக்கு சிங்கவேழ்க்குன்றிலே வந்து ஆச்ரிதர்கள் கிட்டி அனுபவிக்கப் பேருபகாரம் செய்தவன். 'லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகாராப்' சடகோபதத்துவமாகிற பாதுகையுடன் அலங்க்ருதனாக இருக்கும் இவன் ஸஞ்சாரத்திலே நோக்கு கொண்டு ஸஞ்சாரம் செய்து ஸர்வஜனங்களையும் உஜ்ஜீவிப்பிக்கும் நோக்குடையவன் என்பது ஸர்வ ப்ரகாரத்தாலும் விளங்குகிறது. இப்படிப்பட்ட குலதனத்தை தேடிக்கொடுத்த பெருமை ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனையே சாரும்.

மேல் சொன்னபடி சிங்கப்பிரானை ஆராத்ய தேவதையாகக் கொண்டதும் ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகனால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதுமான நம் மடத்தின் பெருமையை என்னென்று சொல்லுவது! நம் மடத்திலே நூற்றெட்டு திருப்பதிகளுடைய திவ்ய தேசத்து எம்பெருமான்கள் பூராவும் எழுந்தருளியிருக்கிறார்கள். ஸ்ரீராமானுஜஸித்தாந்தத்தை அவலம்பித்துள்ள வைஷ்ணவஸாமாந்யம் ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் மந்த்ர மந்த்ரார்த்தங்களைப் பெற்று அவன் திருவடிகளில் பரந்யாஸாதிகளைச் செய்யும்படியான ஆசார்ய ஸந்நிதியும் ஆகிறது. உபயவேதாந்தம் முதலான ஸகல சாஸ்த்ரக்ரந்தங்களையும் உபதேசிக்க வல்லதான ஒரு வித்யாஸ்தானமாகவும் விளங்குகிறது. இப்படிப்பட்ட ஒரு வைதிக ஸாம்ராஜ்யத்தை ஆளுபவர் ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய அம்சபூதர்களாய் அவன் ஸங்கல்பத்தினாலே அவன் ஆராதனத்தைச் செய்து அவன் நியமித்த லோகோஜ்ஜீவனமாகிற வியாபாரங்களை நடத்திவைப்பதான பாக்யம் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் பரம்பரையைச் சாரும் என்றாலும் ப்ரத்யக்ஷமாக நடத்திக் காண்பித்த நம் அழகியசிங்கரையே சாரும்.

நம் அழகியசிங்கருக்குப் பூர்வாச்ரமத்தில் அபரிமிதமான லௌகிகஸம்பத்திகள் இருந்தும் அதை திரஸ்கரித்துவிட்டு வைராக்யத்துடன் ஸ்ரீமாலோலனுடைய ஆராதனமே மேல் சொன்னபடிக்கு லோகோஜ்ஜீவனோபாயமாக நிச்சயித்து நம்மடத்தில் 43-வது பட்டத்திற்கு எழுந்தருளி ஸ்தானத்தை அலங்கரித்தாயிற்று. எழுந்தருளினது முதல் சிஷ்யகோடிகள் பட்டி மேய்ந்து கட்டுண்டுழலாமல் திருவஷ்டாக்ஷர உபதேசமும், முன் அழகியசிங்கர்களால் பாரம்பர்யமாக ஸம்ஸ்கரித்துவருகிற சங்காழியைக்கொண்டு பஞ்சஸம்ஸ்காரமும், ஸ்ரீபாஷ்யம் முதலான க்ரந்தசதுஷ்டயங்களைக் கொண்டு காலக்ஷேபங்களும் பிறவிப் பிணி தீர ஸேவித்தவர்களுக்கு பரகதியைத் தந்தருளும் பரஸமர்ப்பணமும் சிற்றின்பத்திருப்பவர்களை பேரின்பவெள்ளத்தில் திளைக்கவைத்தும் ஸ்ரீராமானுஜஸித்தாந்தத்தைப் பரிஷ்கரித்தருளிய ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அடிச்சுவட்டைப் பின்பற்றி உலகமெல்லாம் கோஷித்துக் குதூஹலப்படுத்திய பெருமையை நாம் என்னாளும் மறக்கமுடியாது. ஸஞ்சாரகாலத்தில் ஒவ்வொரு திவ்ய தேசத்து எம்பெருமானையும் விசேஷமான பீதாம்பரம் முதலான உபகாரங்கள் ஸமர்ப்பி

வித்து ஸேவித்து மங்களாசாஸனம் செய்து வந்த நேர்த்தியை கண் கொள்ளாமல் ஸேவிக்கும் பாக்யம் சேர, சோழ, பாண்டிய நாட்டு சிஷ்யகோடிகளுக்கு கிடைத்ததோடல்லாமல் ஆஸேது முதல் ஹிமாசலம் பர்யந்தம் உள்ள நாநாவித சிஷ்யபக்தகோடிகளுக்கும் கிடைத்தது மாபெரும் பாக்யமே.

ஆஸ்தானத்திற்கு எழுந்தருளியது முதல் விடியற்காலையில் எழுந்திருந்து அதிவிலக்ஷணமாக அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிஷ்யர்களின் பிருது கீதங்களுடனும், விச்வரூப ஆராதனத்திற்கு எழுந்தருளுவது பெருமாளுக்கு மங்களஹாரத்தி முதலான உபகாரங்கள் ஸமர்ப்பிவிப்பதும் திருதண்டத்துடன் பெருமாளை தெண்டன் ஸமர்ப்பிப்பதும் பிறகு சிஷ்யகோடிகள் ஸேவிக்கும் ஸமயம் பீடத்தில் கம்பீரமாக அமர்ந்திருப்பதும், அதே ஸமயம் வேதபாராயண கோஷ்டியில் தாமும் அந்வயித்து திருவுள்ளம் பூரிப்பதும் நம் கண் முன்னே நிற்கிறது. ஸ்ரீசடாரி ஸாதிக்கும் காலத்தில் சிகை வைத்திருப்பவர்களுக்கு ஸ்ரீசடாரி ஸாதித்தும், சிகை இல்லாதவர்களை பணக்காரர், ஏழை என்ற அந்தஸ்து பாகுபாடில்லாமல் எல்லோரையும் சிகை வைத்துக் கொள்ளும்படி உபதேசித்தும், அப்படிக்கு சிகையுடன் வந்து பெருமாளை ஸேவித்தால் சடாரி ஸாதிக்கலாம் என்றும் நிர்தாக்ஷிண்யமாக ஸாதித்தாகும். ஸ்ரீஸந்நிதி ஸ்தாவர ஜங்கம ஸொத்து பராமரிப்பு போன்ற லௌகிக கார்யங்களை சரிவர பராமர்சித்து ரக்ஷித்து வந்ததில் நம் அழகியசிங்கருக்கு ஸத்ருசமாக யாருமே கிடையாது.

நம் அழகியசிங்கர் ஸர்வ ப்ரஜைகளையும் ஏழை பணக்காரன் என்ற பேதமில்லாமல் ஸமமாகப் பாவித்து அனுக்ரஹம் செய்துவந்ததை, இந்த ஆசார்யன் திருவடி ஸ்பர்சத்தாலே ஸர்வரையும் புனிதமாக்கவல்ல புண்ணியன் என்று சொல்லலாம்.

'இங்கே திரிந்தேற்கு இழிற்குற்றம்' என்கிற ஆழ்வார் திவ்யஸூக்திப்படிக்கு இவ்வாசார்யன் செய்த திவ்யதேசயாத்திரை அங்கங்கே செய்த கைங்கர்யங்கள் முதலியவைகளை அனுபவித்தவர்கள் இவ்வாசார்யனை கலியனுடைய அம்சம் என்று சொல்லுவார்கள்.

'दानानामुत्तमं दानं विद्यादानं प्रकीर्तितम्' என்கிறபடிக்கு ஆங்காங்கே வித்யாசாலைகளை நிறுவி அதற்காக த்ரவ்யங்களை யதேஷ்டமாகச் செலவிட்டு சாஸ்த்ரோக்தமானதும் காலத்திற்கு அனுகுணமானதுமான வித்யாதானம் பண்ணின நம் அழகியசிங்கருக்கு ஸமானம் யாரும் இல்லை என்று சொல்லலாம்.

முக்யமான ஆசாரங்களை சிஷ்யர்களுக்கு உபதேசித்தும் கண்டித்து நடக்கும்படிக்கும் உபதேசிக்கும் காலங்களில் ஸேவிக்கும் எல்லோரது மனதை உருக்கும்படியான ஆசார்ய ரத்னத்தை இழந்துவிட்டோம்.

நம் அழகியசிங்கரை நேரில் ஸேவித்தவர்கள் 'रूपमेवास्यैतन्महिमानम्, என்கிறபடிக்கு அழகியசிங்கரை ஆச்ரயித்தவர்களும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹானுக்ரஹம் பெற்றுவிட்டோமென்று நினைத்து ஸந்தோஷப்படும்படியான திருமேனி ஸௌந்தர்யத்தை உடைய நாயகரத்னத்தை இழந்துவிட்டோம்.

'कर्मण्येवाधिकारस्ते' என்கிறபடிக்கு எல்லாம் பகவத்ஸங்கல்பாதீனம் என்று நம் ஸித்தாந்தத்தின் அடிப்படையான கொள்கையில் நம்பிக்கை வைத்து நடத்திக் காட்டின யோகிரத்னத்தை இழந்துவிட்டோம்.

இப்படிப்பட்ட ஜ்ஞாநாநுஷ்டான வைராக்ய ஸம்பந்நரான நம் அழகியசிங்கர் இன்னமும் கொஞ்ச காலம் எழுந்தருளியிருந்து பாபாத்மாக்களின் க்ருத்யங்களால் ஹீனதசையை அடைந்துவரும் நமது ஸ்ரீவைஷ்ணவஸமூஹத்தை ஆவச்யகமான வர்ணாச்ரமதர்மங்களை உபதேசித்தும், த்ருடமாக ஸ்தாபித்தும் நம்மை அனுக்ரஹித்துவரும் பாக்யம் நமக்கு நீடிக்காமற்போனது நம் மாபெரும் துரதிர்ஷ்டமேயாகும்.

ஸ்ரீ:

மஹானின் மறைவு

[ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர், ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஆஸ்தானத்தில் 43-வது ஸ்தானத்தை அலங்கரித்துவந்த மஹான் மறைந்தார். இம்மஹானின் அவதாரம் முதல் நித்யவிபூதிக்கு எழுந்தருளினவரையிலுள்ள சரித்ரவிசேஷம் அநுஸந்திப்போருக்கு மிகவும் ஆச்சரியத்தைத் தரும். உலகில் மஹான்கள் அஸாதாரணமாகவே தோன்றி வருகிறார்கள். பால்யத்தில் விளையாட்டு முதலியவைகளில் ஈடுபட்டு '**कामचारः कामवादः कामभक्षः**' என்கிறபடியிருந்து யௌவனத்தில் விஷயைஷிகளாய் (சிற்றின்பஸுகமநுபவிப்பவர்களாயும்) வார்த்தகம் வந்தபோது '**उत्तमे वयसि साधुवृत्तः**' என்கிற ரீதியில் நல்ல நடவடிக்கை உடையவர்களாயிருக்கிறார்கள் என்பது பெரும்பாலும் அநுபவஸித்தம். இம்மஹானோவெனில் திருத்துழாய் அங்குரிக்கும்போதே பரிமளத்துடன் வெளிவருவதுபோல் தன்னுடைய பால்யத்திலேயே '**न्यस्तक्रीडनकं बालः**' என்கிறபடி மற்ற விளையாட்டு ஸாமான்களை அறவே விட்டு ப்ரஹ்லாதாழ்வானைப்போல பகவத்விஷயமான விளையாட்டையே (அதாவது- பெருமாள் பொம்மையை வைத்துக்கொண்டு அதற்குத் திருமஞ்சனம் நிவேதனம் முதலியவைகளைச்) செய்துகொண்டு பகவத்பக்தியிலேயே ஈடுபட்டிருந்தார்.

ஸத்குலப்ரஸூதி

இவர் அவதரித்த திருவம்சமோ '**नास्याब्रह्मवित्कुले भवति, नास्यापरपुरुषाः क्षीयन्ते**' (ப்ரஹ்மவித்யையின் பலனாக குலத்தில் உள்ளவர்கள் எல்லோரும் ப்ரஹ்மவித்துக்களாகவே இருப்பார்களே தவிர வேறுவிதமாயிருக்கமாட்டார்கள்) என்கிற உபநிஷத்தின்படி ப்ரஹ்மவித்துக்களால் விளங்கினதாயுமிருக்கிறபடியால் ஆஜாநசுத்தராய் விளங்கியவர் இம் மஹான்.

ஜ்ஞாநஸம்பாதநமும், பஞ்சகாலாநுஷ்டாந ப்ரக்ரியையும்.

யதாகாலத்தில் சௌளம், உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களை அடைந்து '**ब्राह्मणेन निष्कारणः धर्मः षडङ्गो वेदोऽध्येयो ज्ञेयश्च**' (ப்ராஹ்மணன் ஒருவித த்ருஷ்டபலனை எதிர்பாராமல் சிக்ஷை, வ்யாகரணம் முதலிய ஆறு அங்கங்களுடன் கூடின வேதத்தை அத்யயனம்செய்து அர்த்தத்தையும் அறிய வேண்டும்) என்கிற ச்ருதியின்படி ஸாங்கமாய் வேதாத்யயனம் செய்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆவச்யகமான திவ்யப்ரபந்தங்களையும் அத்யயனம் செய்தார். பிறகு மஹாவித்வான்களிடம் ந்யாயம் முதலிய ஸாமாந்யசாஸ்த்ரங்களை அப்யஸித்து ஆசார்யோத்தமர்களிடம் திருவிலச்சினை, ஸ்ரீபாஷ்யாதிவேதாந்தக்ரந்தங்களை ஸம்பூர்ணமாய் அதிகரித்து ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணத்தையும் பூர்த்தி செய்துக்கொண்டார். ப்ரதிதினமும் ப்ராத:காலத்தில் நித்யகர்மாநுஷ்டானம் முடிந்ததும் 'மாலோலபவநம்' என்கிற ப்ரஸித்தி பெற்ற தம் திருமாளிகையில் ஔபாஸனம்செய்து '**स्वार्जितैःगन्धपुष्पाद्यैः**' (தன்னாலே ஸம்பாதிக்கப்பட்ட சந்தன புஷ்பாதிகளால்) என்கிறபடி தாமே '**स्वारामे**' என்கிறபடி தம் நந்தவனத்தில்பகவத்கைங்கர்யார்த்தம் வைத்து ஸ்வநிர்விசேஷமாக (தன் குழந்தையைப் போல்) வளர்க்கப்பட்ட செடிகளிலிருந்து ஸுகந்தியான நாநாவிதமான புஷ்பங்களை திருக்குடலையில் எடுத்துக்கொண்டு அபிகமன ஆராதனம் செய்து பிறகு சிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்வதும், ஸ்வயமாக வேதாந்தக்ரந்தபரிசீலனம் செய்வதும் வழக்கம். பிறகு இஜ்யை, வைச்வதேவங்களைச் செய்து பாகவதாராதனபுரஸ்ஸரமாக அத்தர்யாம்யாராதனத்தை முடித்துக்கொண்டு ஸ்ரீமத்ராமாயணாதி இதிஹாஸபுராணங்களைப் பரிசீலனை செய்து கொஞ்சகாலம் லௌகிக க்ருஷி முதலிய நிர்வாஹங்களைக் கவனித்து மறுபடியும் க்ரந்தகாலக்ஷேபம், ஸாயங்கால அநுஷ்டானங்களைப் பூர்த்தி செய்து ராத்ரி திருவாராதனம் முடிந்தபிறகு லௌகிக கார்யங்களை விசாரித்துவிட்டு யோகத்திற்குஎழுந்தருளுவதும் வழக்கமாயிருப்பதையும் அடியேன் ப்ரத்யக்ஷமாய் அநுபவித்து அதைக்

கொஞ்சமும் அதிசயோக்தி இல்லாமல் இங்கு விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன். ஸ்ரீமதஹோபிலமடத்தின் நித்யக்ரமங்களை அனுபவித்த பெரியோர்கள் இந்த வைகரியைப் பார்த்து இதைச் 'சின்ன மடம்' என்றே வ்யவஹரிப்பார்கள். இம்மாதிரி இம்மஹான் தம்வாழ்நாளில் விஷயாஸக்தி (சிற்றின்ப வாஞ்சை) சிறிதுகூட இல்லாமல் பகவதாராதனங்களிலேயே ஈடுபட்டு எழுந்தருளியிருந்தார்.

தீரசித்தத்வம்

அடியேன் சேவனூர்விளாகத்தில் இம்மஹானிடம் கொஞ்சகாலம் கீதாபாஷ்யாதிக்ரந்த காலக்ஷேபம் செய்யும்படி இருந்தது. திருமாளிகைக்குப் பின்னால் இருக்கும் பந்தலுடன் கூடின மேடையில் காலக்ஷேபம் நடப்பது வழக்கம். ஒரு நாள் கீதாபாஷ்யகாலக்ஷேபம் நடந்துகொண்டிருக்கையில் ஒரு பெரிய ஸர்ப்பம் ஸமீபத்தில் தன் படத்தை விரித்து கொஞ்சகாலம் இருந்துவிட்டுப் பிறகு தானுகப் போய்விட்டது. அதைப் பார்த்த அடியோங்கள் பதறினபோது இம்மஹான் 'ஒன்றும் பதறவேண்டாம். ஸ்ரீபாஷ்யகாரர் காலக்ஷேபப்ரக்ரியையை கடாக்ஷித்துவிட்டு எழுந்தருளுகிறார்' என்று கொஞ்சம்கூட பதட்டமில்லாமல் ஸாதித்த விஷடம் இப்போதும் அடியேனுடைய அகக்கண் முன் நின்றுகொண்டேயிருக்கிறது.

ஆசார்யபக்தி

பிறகு இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கரால் ஆஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார். ப்ரதிதினமும் இரண்டு வேளைகளிலும் அவ்வழகிய சிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து அருளிப்பாடிட்டு அபிகமனாராதனத்திற்குமுன்னதாக எழுந்தருளப்பண்ணுவித்து தாம் அநுயாத்ரையாய் எழுந்தருளும் அழகை ஸேவிப்பவர்களுக்கு கண் கொள்ளாக் காக்ஷியாக மஹாநந்தத்தைக் கொடுப்பதாக இருக்கும். காலக்ஷேபகோஷ்டியில் இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கர் முதலில் உபக்ரமித்துக் கொஞ்சம் ஸாதித்துவிட்டுப் பிறகு 'இங்கு ஸாதிக்கலாம்' என்று நியமிப்பதும்; 'அடியேன்' என்று அந்நியமனத்தை சிரஸா வஹித்து அத்யாச்சர்யமான ரீதியில் காலக்ஷேபம் ஸாதிக்கும் சௌசலத்தைக் கண்டு அவ்வழகியசிங்கரே பூரித்துப் போவதையும் ப்ரத்யக்ஷமாக அனுபவித்தவர்களுக்கு இவ்வுலகின் ஸ்மரணமே இல்லாமல் 'பரமபதத்திலேயே இருக்கிறோமோ' என்னும் எண்ணத்தையும் உண்டாக்கியது.

ஸ்ரீந்ருஸிம்ஹனிடம் அபார பக்தி

எந்தக் காரியத்திலும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் பாரத்தைப் போட்டு நம் கடமையைத் தவறாமல் செய்துகொண்டிருந்தால் அவன் இந்தக் காரியத்தைக் சட்டாயம் தலைக்கட்டுவான் என்று ஸ்திரமான ஒரு நம்பிக்கையுடன் இதரர்களுக்கு அடிக்கடி உபதேசிப்பதுடன் தன்னுடைய வாழ்க்கையிலும் அதையே கடைபிடித்து அனுஷ்டித்து வந்ததும் அதற்கநுகுணமாக எப்படிப்பட்ட கஷ்டமான காரியங்களும் வெகு எளிதில் கைகூடிவந்ததும் கண்கூடு.

திவ்யதேசயாத்திரை

இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கர் தாம் பதரீபர்யந்தமாக யாத்ரையை ஸங்கல்பித்தும் காலக்ஷேபத்தினால் கொஞ்சதூரத்திலிருந்தே திரும்பிவிடநேர்ந்த குறையை அறிவித்து அந்த ஸங்கல்பத்தைப் பூர்த்தி பண்ணவேணும் என்று நியமித்தபடியை 'धन्योऽस्मि' என்று இம்மஹான் சிரஸா வஹித்து யாத்ரையைத் தொடங்கினார். ஸஞ்சாரத்தில் அடியேன் கிராமத்தின் ஸமீபமுள்ள கிராமத்தில் எழுந்தருளப்பண்ணுவதற்காக ப்ரார்த்திக்க வந்த ஸ்வாமிகள் பூர்ணமாக ஆராதிக்கத் தங்கள் அசக்தியை விஜ்ஞாபனம் செய்து பெருமாளுக்குக் கட்டவேண்டிய சட்டணத்தையும் கட்டிவிட்டு ததீயாராதனத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனால் யானை, குதிரை, மாடுகள் முதலியவைகளுக்கும், போகிகளுக்கும் வேண்டிய கொள்ளு, பருத்திக்கொட்டை படியரிசி முதலியவைகளை ஸ்ரீஸந்நிதியிலேயே தான் போட்டுக்கொள்ளவேணும்' என்று ப்ரார்த்தித்தார்கள். அப்போது இம்மஹான் 'यावद्भिर्वै राजाऽनुचरै रागच्छति सर्वेभ्यो वै तेभ्य

आतिथ्यं क्रियते' என்கிற ச்ருதியின் அர்த்தத்தை வெகு அழகாக உபபாதித்து உங்களுக்கு பூர்ணமாக ஆராதிக்க சக்தியில்லாவிட்டாலும் யதாசக்தி தேவாதிராஜனை ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸபரிவாரமாக ஆராதிப்பது தான் விசேஷம்' என்று ஸாதித்தவுடன் அவர்களும் மனமுவந்து யதாசக்தி அப்படியே ஆராதித்தார்கள். இப்படி நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்யம் செய்ததே' என்கிறபடியே ஸ்ரீந்ருஸிம்ஹனையாராதித்துக்கொண்டு ஒரு கிராமமும் விடாமல் ஸஞ்சாரம் செய்து இப்புவனியைப் பரிசுத்தம் செய்து அதித்வரையுடன் கோதாவரீ, யமுனை முதலிய புண்யதீர்த்தங்களில் அவகாஹநம் செய்து பிறகு கங்கா தீர்த்தஸ்நாநம் செய்து பதரீ நாராயணனை மங்களாசாஸனம் செய்து அழகியசிங்கரின் நியமனத்தைப் பூர்த்தி செய்தோம்' என்று உள்ளம் பூரித்து இரண்டு மாதகாலம் ஹ்ருஷீகேசத்தில் கங்கையிலேயே த்ரிகாலஸ்நாநங்களையும் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் நியமங்களை அநுஷ்டிப்பதில் தீவ்ரமான ச்ரத்தை பால்யம் முதல் இம்மஹானுக்கு ஸுப்ரஸித்தமானது. ஏகாதசியன்று சுத்த உபவாஸமும், ச்ரவண த்வாதசி ஸம்பவிக்கும்போது இரண்டு நாளும் பூர்ணமான உபவாஸமும் இதுபோன்ற நியமங்களை அநுஷ்டிக்கும்போது:-

'ब्राह्मणानां शरीरं तु नोपभोगाय कल्पते ।
इह क्लेशाय महते प्रेत्यानन्तसुखाय च ॥

என்கிற மனுவசனத்தின்படி தம் திருமேனியை த்ருணமாக நினைத்து இருப்பதும் வழக்கம். ஹ்ருஷீகேசத்தில் அந்த ஸ்தலபுராணத்தின்படி இரண்டு மாதகாலமும் மிதமான சஞ்சியையே ஒரு வேளை ஆஹாரமாக ஸ்வீகரித்துவந்தது ஸமீபத்திலுள்ளோர்களை மிகவும் வியக்கச் செய்தது. இப்படி இம்மஹானின் புனிதமான ஸஞ்சாரம் நைமிசாரண்யம் வரை நடந்தது. ஸ்ரீ நைமிசாரண்யத்தின், வ்யாஸர், ஸூதர் முதலிய மஹர்ஷிகளின் மூலமாய் புராணங்கள் அவதரித்த திவ்ய க்ஷேத்ரமாக ப்ரஸித்தி பெற்றதாயும் நித்யபகவத் ஸாந்நித்யம் பெற்றதாயும், திருமங்கையாழ்வாரால் 'வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரண்யத்துள் எந்தாய்' என்று சரணாகதி செய்யப்பட்டதாயுமுள்ள விசேஷங்களை அனுஸந்தித்து இந்த திவ்யதேசத்திலேயே தம் அவதாரத்தை உபஸம்ஹரித்துக்கொண்டு நித்ய விபூதிக்கு எழுந்தருளிவிட்டார் போலும். இப்படி இம்மஹானின் அஸாதாரணமான ஜ்ஞான, அனுஷ்டான, வைராக்யங்களை அநுஸந்திக்க அநுஸந்திக்க நமது மனது ஆறுதலை அடையவே இல்லை. உலகில் வேதாத்யயனம் பரிபூர்ணமாகச் செய்தவர்களுக்கு திவ்யப்ரபந்தவாஸனையே இல்லாமலும், திவ்யப்ரபந்தம் அப்யஸித்தவர்களுக்கு வேதாக்ஷரம் தெரியாததும் இரண்டும் தெரிந்தவர்களுக்கு சாஸ்த்ரவாஸனை இல்லாததும் சாஸ்த்ரமறிந்தவர்களுக்கு அவைகளில்லாததும் இவைகளிருந்தாலும் அனுஷ்டானமில்லாமலும் இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வோரிடத்தில் தனித்தனியாகக் காணுநின்றோமேயொழிய ஒரே இடத்தில் கண்டதில்லை. ஒரே வ்யக்தியிடத்தில் எல்லாம் சேர்ந்து ஒன்றோடொன்று அஹமஹமிகயா போட்டியிட்டுக்கொண்டு இம்மஹானிடத்தில் விளங்கியதும் இப்படிப்பட்ட மஹானை ஆசார்யராகப் பெற்ற நாம் மிகவும் பாக்யத்தைப் பெற்றோம் என்று அஹங்காரப்படும்படி இருந்தது. வெகுகாலம் இம்மஹான் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்து நமக்கு ஸேவை ஸாதித்து இனிய ஸ்ரீஸூக்திகளை அநுக்ரஹித்துக்கொண்டருளப் போகிறார் என்று விச்வஸித்திருந்து இப்போது இவ்வுத்தமான ரத்னத்தை இழந்த நாம் நம் தௌர்ப்பாக்யத்தைத்தான் நினைத்து வருந்தவேண்டியிருக்கிறது. 'वाक्यानि तानि श्रोष्यामि कुतः कर्णसुखान्यहं' என்கிற ரீதியில் மிகுந்த க்லேசம் மனதிற்கு ஏற்பட்டிருந்தபோதிலும்

'दवीमृद्धिमनुप्राप्तः ब्रह्मलोकविहारिणीम् ।
तन्तुनैवं विधः कश्चित्प्राज्ञः शोचितुमर्हति ॥

என்கிற ஸ்ரீராமனின் ஸ்ரீஸூக்தியைத் தஞ்சமாகக்கொண்டு ஆறுதலடையவேண்டியிருக்கிறது. இம்மஹான் உபதேசரூபமாயும் க்ரந்தரூபமாயும் அநுக்ரஹித்த அபூர்வார்த்தங்கள் நமக்கு சிறந்த பொக்கிஷமாகும்.

ஸ்ரீ:

அரண்யத்தில் மறைந்த சிங்கம்

[ஸ்ரீ. உப. வித்வான், வ. கூத்தப்பாக்கம், கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

காஞ்சியில் எங்கு பார்த்தாலும் கார்த்திகை 10ந்தேதி காலையில் பரபரப்பும் திகைப்புமாகவிருந்தது. வீதியில் ஆங்காங்கு சிறு சிறு கூட்டமும் குழுமியிருந்தது. பத்திரிகை தாங்கிய கரங்களுடன் குழுமியிருந்த குழுவினரின் குரலில் குமுறலும் த்வனித்துக்கொண்டிருந்தது. நடுநடுவில் பெருமூச்சு விடும் ஒலியும் ஒலித்துக்கொண்டிருந்தன. முகங்களில் சோபையோ குன்றிப் போயிருந்தது. தலை கட்டப்பட்ட நாகம் போல் ஒன்றிலும் புத்தி செல்லாது காணப்பட்டனரனேகர். இவ்வளவிற்கும் காரணம் ஸ்ரீந்ருஸிம்ஹாஸ்தானத்தில் 43-வது பட்டத்தை அலங்கரித்துவந்த நம் வைணவசமயச் சிங்கம் நைமிசாரண்யத்தில் மறைந்ததாகப் பத்திரிகையில் ப்ரசுரித்திருப்பதென்பது சிறிது காலங்கழித்துதான் நமக்குப் புலனாயிற்று. அந்தோ! இவ்விஷயங்கேள்வியுற்று அதிர்ச்சியடையாதார் யாரிருப்பர்? கதிரவனுமன்றோ கானகத்தில் மறைந்த சிங்கத்தைக் காண ஸஹிக்காமல் தன் கதிர்களை யடக்கிக்கொண்டு மேகபடலங்களில் மறைந்து ஒளிந்து வசித்தான் போலும் கார்த்திகை ஒன்பதாந்தேதியன்று. என்னவாச்சரியம்! இச்சிங்கத்தின் க்ருத்யங்களோ அமானுஷம். சரித்திரமும் அமானுஷம். நிர்யாணமுமதி விசித்ரம். அழகே வடிவு எடுத்தாற்போல் அமைந்திருந்தது திருமேனியும். சிங்கம் போல் நினைத்ததை திறமையுடன் சாதிக்குந் துணிபு வெகு அழகு. அழகியசிங்கர் என்ற வ்யவஹாரம் பொருத்தமாகவேயமைந்திருந்தது நம் சிங்கத்திற்கு. பூர்வாச்ரமத் திருநாமமும் வெகு பொருத்தம். இதன் ஆராத்ய தேவனிடம் நரரூபமும், சிங்கவடிவமும் ஒருங்கேயமைந்திருந்தது போல் இச்சிங்கத்தினிடமும் ஐச்வர்யமும், பாண்டித்யமும் அகடிதகடனமாகச் சேர்ந்திருந்ததென்பது அத்யத்புதம். ஸந்யஸித்தும் 'விடேன்' என்று கடைசிவரையில் தன்னையே தொடர்ந்து பெருகிக்கொண்டிருந்த லக்ஷ்மீகடாக்ஷஸரிதையுமல்லவோ த்யஜித்துவிட்டது நைமிசத்தில். இதை த்யஜிக்கத்தான் தன் தேஹத்தில் அபிமானத்தையுந் துறந்ததோ நைமிசத்தில்! அந்தோ! இப்படிப்பட்ட துறவியையினி கிடைக்கப் பெறுமாவிப்புவனம். ஆச்ரமஸ்வீகாரத்திலிருந்து சாதுர்மாஸ்யஸங்கல்பகாலந்தவிர்த்து ஸஞ்சாரமிராத நாளிருந்திருக்கமுடியுமா? சிறிதேனும் சரீரத்தில் ச்ரமத்தைப் பாராட்டினதுண்டா? என்னவத்புதசக்தி! ப்ரபன்னனனுஷ்டிக்கவேண்டிய உத்தரக்ருத்யங்களையனுஷ்டித்துக் காண்பித்த வைகரீதான் என்ன விலக்ஷணமானது! வருஷத்திலொரு முறையாவது ஸ்ரீபாஷ்யபடனம் பண்ணுவிக்க பாஷ்யாதிகாரிகளிடம் எடுத்துக்கொண்ட ப்ரயாஸந்தான் என்ன விநோதமானது! இராப்பகல் என்று தரம் பாராமல் எந்த ஸமயத்திலும் ப்ரவசனம் செய்விக்க காஞ்சீ போன்றவிடங்களில் ஸகல ஸௌகர்யங்களையுஞ் செய்து கொடுத்து அத்யாபகரை நியமித்தது போன்றவைகளால் அருளிச்செயலில் காட்டிய ஆதரத்தின் அதிசயந்தான் என்னே! பகவந்நிலயங்களிலும் பக்தநிலயங்களிலும் செய்துள்ள பணிதானென்ன ரமணீயம்! பெரியோர்களின் உள்ளங்களை அப்படியே கொள்ளைகொண்ட பெருமைதானென்னவொப்பற்றது! பகவத்ஸ்மரணத்திற்குத் தான் ஓய்வு இருந்திருக்குமா?

பெரிய ஆஸ்தானத்தில் ஸம்ப்ரதாயதீபத்திற்கு மாலின்யம் விளைந்துவிடாதபடி புதிய ஒளி உண்டாக்கியிருப்பதும் என்ன விலக்ஷண தீர்க்கதர்சியின் க்ருத்யம்!

இப்படிப் பலபடியாக ஸம்ப்ரதாயத்திற்கு ஸேவை செய்துள்ள நம் ந்ருஸிம்ஹாஸ்தான சிங்கத்தை எப்படி மறந்திருப்பது? எப்படி துணியும்? என் செய்வது? விதியை விலக்க முடியுமா? 'போற்றியுகப்பதும் புந்தியிற்கொள்வதும்' என்ற முறையில் பின்பற்றி நடப்பது தான் பக்தஜனங்களின் க்ருத்யம் என்பது நமது தேர்வு.

ஸ்ரீ:

ஈடுபாடு

[வத்திராயிருப்பு செல்லம்மாள், ஸ்ரீவில்லிபுத்தூர்.]

ஸ்ரிய:பதியாய் ஸ்ரீவைகுண்டநிகேதனனாய் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரன் அந்த நித்யஸூரிகளோபாதி தன்னை அனுபவிக்க ப்ராப்தராயிருக்க அத்தை இழந்து உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணனென்கிற அனுபவத்தை விட்டு சோறும் தண்ணீரும் தாரகமாகத் திரியும் ஸம்ஸாரிகளைக் கண்டு துக்காக்ராந்தனாய் நான்கு வேதங்களும் தேடிக் காணாத பரம்பொருளை இவர்கள் அறிந்து அனுபவிக்கும் மார்க்கம் ஏதென்று யோஜித்து ஸகல சாஸ்த்ரதாத்பர்யமான ரஹஸ்யத்ரயத்தை ஆசார்யனாய் நின்று ஸாதித்தருளினான். திருமந்த்ரத்தை ஸ்ரீபதரிகாச்ரமத்திலும் த்வயத்தை ஸ்ரீவிஷ்ணுலோகத்திலும் அர்ஜுனன் வ்யாஜமாக சரமச்லோகத்தைக் குருக்ஷேத்ரத்திலும் ஸகலரும் அறியும்படி உபதேசித்தும் அந்த அர்த்தங்களை எல்லாம் யாவரும் அறியும்படியாக ஸ்ரீ அஹோபிலத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோபஸ்வாமியாய் எழுந்தருளி அஹோபிலநரஸிம்ஹனை ஆராதித்து லக்ஷ்மீநரஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு திருநகரி முதலான திவ்யதேசங்களில் எழுந்தருளி ஆச்ரிதர்களுக்குத் திருவிலச்சினை, பரந்யாஸம் செய்வித்தும் ரஹஸ்யத்ரயத்தை உபதேசித்தும் உபயவேதாந்தப்ரவசனம் பண்ணிவைத்தும் எழுந்தருளியிருக்கும்போது அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகர் லக்ஷ்மீநரஸிம்ஹனை ஆராதிக்க ஆராவமுதன் எழுந்தருளியிருக்கும் திவ்யதேசத்தை அடுத்த தேவனார்விளாகம் என்னும் திவ்யதேசத்தில் அவதரித்து ஏழு திருநக்ஷத்ரத்திற்குள்ளே ஸ்ரீ ஆளவந்தாரைப்போல ஸகலசாஸ்திரத்தையும் அதிகரித்து தர்சனப்ரவர்த்தகராய் எழுந்தருளி ஆஸ்திகரான ஸச்சிஷ்டர்களுக்கு ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம், ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம், பகவத்விஷயம் ஸ்ரீராமாயணமாகிற பக்தியை இளைய பெருமாளாகிற நெஞ்சில் தேக்கி இராமானுஜனுடைய ஹ்ருதயத்தில் சூடி கொண்டு நம் ஆசார்யனாகிற மடைவழியாகப் பாய்ந்து ஸகல சேதனர்களும் உஜ்ஜீவிக்கும்படியாக கர்ப்பஸ்ரீமானாய் தேவனார்விளாகத்தில் எழுந்தருளியிருக்க 'சக்ரவர்த்தித்திருமகன் தன் முடி துறந்து வனத்திற்கு எழுந்தருளி சுக்ரீவன், விபீஷணாதிகளுக்கு முடிசூட்டி திரு அயோத்திக்கு எழுந்தருளினது போல் ஸந்நிதிக்கு எழுந்தருள 'ஆமுதல்வன் இவனென்று தத்தேத்தி' என்கிறபடியே ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகர் அருளிப்பாடிட்டழைத்து லக்ஷ்மீநரஸிம்ஹனை ஆராதிக்கத் தகுந்தவர் என்று அபிமானித்து 'பல்கலையோர் தாம்மன்னி வாழும் இராமானுஜனைப்போல எழுந்தருளியிருக்கவேணுமென்று த்ரிதண்டகாஷாயங்களை ஸாதித்து மூர்த்தாபிஷிக்தராக்கி திருநாடு அலங்கரிக்க எழுந்தருளினார்.

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் ப்ரபாவத்தை ஆயிரம் வாயுடைய ஆதிசேஷனாலும் சொல்ல முடியாத வைபவத்தை யாரால் சொல்லமுடியும்? ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகர் மதுராந்தகத்தில் பாடசாலை நிர்மாணம் செய்தது ஆசார்யர்களுடைய உபதேசம் ஒரு தீபத்திலிருந்து அநேக தீபங்களை ஏற்றி ப்ரகாசிக்கவைப்பதுபோல் அநேக பாடசாலைகள் ஏற்படுத்தியும் இதிஹாஸம் புராணம் உபயவேதாந்தங்களையும் ஸகலமான பேர்களுக்கும் அவரவர்களுக்குத் தக்கபடி உபதேசம் செய்தும் ஜ்ஞாநாநுஷ்டானங்களில் ப்ரதாநராயும் ஸ்ரீவைஷ்ணவச் சிறுவர்கள் அனைவருக்கும் உபநயநம் செய்தும் வேதாத்யயனம் பண்ணிவைத்தும் தம்மை ஆச்ரயித்த சிஷ்யர்

கள் அனைவரையும் அழைத்து நம்முடைய வைஷ்ணவஸித்தாந்தத்தின்படி அனுஷ்டிக்க வேணுமென்று நியமித்து சிகை, யஜ்ஞோபவீதம் திருவிலச்சினையும் தரித்து நம்முடைய விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தின்படி இருக்க வேணுமென்று நியமிக்க ஆச்ரயித்த சிஷ்யர்கள் தந்யோஸ்மி என்று சிகையோடு கூடவும் யஜ்ஞோபவீதமும் திருவிலச்சினையும், த்வாதச ஊர்த்வபுண்ட்ரமும் தரித்து ஸச்சிஷ்யர்களாக ஆகிய கோடானுகோடி சிஷ்யர்கள் கோஷ்டியின் மத்தியில் எழுந்தருளியிருந்து ஸ்ரீராமானுஜனைப் போல் விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை ஸ்தாபனம் பண்ணி விண்ணுள்ளாரினும் சீரியான சிஷ்யர்களை அழைத்துக்கொண்டு திருவள்ளூரில் வீரராகவனை மங்களாசாஸனம் செய்துகொண்டு யாத்திரையாக எல்லா திவ்யதேசங்களுக்கும் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தும் உத்தரதேசங்களில் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தும் ஸ்ரீ பதரிகாச்ரமத்தில் பதரிநாராயணனை மங்களாசாஸனம் செய்து திருமந்திரத்தை ஸாக்ஷாத்கரித்து எழுந்தருளி அனேக திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்துகொண்டு திரும்பி எழுந்தருளி பிறர் பொருள், பிறர் தாரம் அபஹரிக்கும்படியான பாவிகளுக்குக்கூட 'ஆஜ்ஞாச்சேதி மம த்ரோஹி' என்று பகவான் 'க்ஷிபாமி' என்று கைவிட்டவர்களுக்குக்கூட நைமிசாரண்யம் என்கிற திவ்யதேசமானது 'ததாமி' என்று கிருபையுடன் இருக்கக்கூடியது என்று ஸ்ரீ திருமங்கையாழ்வார் அருளிச்செய்திருக்க அப்பொழுது கலியுகம் ஆரம்பமாகையினால் அநேக ஜ்ஞாநவான்கள் இருந்திருப்பார்கள். இப்பொழுது கலியுகம் அதிக்ரமித்தபடியால் ஆசார்யன் எழுந்தருளினாலொழிய சேதனர்கள் உஜ்ஜீவிக்க வழியில்லை என்று திருவுள்ளம்பற்றி 'தெக்கா நெறியைப்போக்கி வைக்கும் செல்வன் பொன்மலை, அக்கா நெறியை மாற்றும் தண் திருமாலிருஞ்சோலை' என்கிறபடியே தண்டதரனான ஈச்வரன் போலன்றிக்கே க்ருபையையே வடிவாக இருக்கும்படியான ஆசார்யனாகையாலே நைமிசாரண்யத்தில் ஸ்திரப்ரதிஷ்டமாக எழுந்தருளியிருந்து அனைவர்களையும் திருவடியில் சேர்த்துக்கொள்ளவேணும் என்று விபவத்தில் எழுந்தருளியிருந்தால் அந்த திவ்ய தேசத்தில் இருக்க ஸௌகர்யப்படாது என்று அர்ச்சாரூபியாய் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளினார். தன் திருவடியில் ஆச்ரயித்த சிஷ்யர்களை நித்யஸூரிகளோடு ஒரு கோவையாக்கி நித்யாநந்தத்தை அனுபவிக்க நித்யவிபூதிக்கு எழுந்தருளினார்.

* * * *

ஸ்ரீ அத்திகிரி திவ்யதேசத்தை அடுத்த தேசமான முக்கூரில் நாவீருடையவராய் அவதரித்து பால்யத்திலேயே ஸகலசாஸ்த்ரங்களை அறிந்து உபயவேதாந்த ப்ரவர்த்தகராய் இதிஹாஸம், புராணம், ஸ்ரீராமாயணம் ஸகலசரித்ரங்களையும் எல்லா திவ்யதேசத்திற்கும் எழுந்தருளி சாஸ்த்ரம் அறிந்தவர்கள், அறியாதவர்கள் அனைவருக்கும் ரஸிக்கும்படியாக அழகாக உபந்யாஸம் செய்தும் 'ஷட்விதசரணாகதிப்ரதானம்' என்று அனைவருக்கும் உபதேசம் செய்தும் த்வயார்த்தநிஷ்டராய் ஆஸ்தானவித்வானாக ஸந்நிதியில் வெகு காலமாக எழுந்தருளியிருந்து இப்பொழுது 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகர் அருளிப்பாடிட்டழைத்து த்ரிதண்டகாஷாயங்களை ப்ரஸாதித்து 44-வது பட்டத்தில் ஸ்ரீஸந்நிதியில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளப்பண்ணியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கருடைய வைபவத்தை ஸகலமான சிஷ்யர்களும் ஸந்தோஷிக்கும்படியாக திவ்யதேசங்களை எல்லாம் மங்களாசாஸனம் செய்துகொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் க்ருபையால் திருவள்ளூரில் எழுந்தருளி வீரராகவனை மங்களாசாஸனம் செய்து லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராதித்துக்கொண்டு பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கவேணுமென்று ஸகலமான சிஷ்யர்களும் ப்ரார்த்திக்கிறார்கள். அஜ்ஞானமாகிற அந்தகாரத்தைப் போக்கி பிராட்டியையும் எம்பெருமானையும் அறியும்படி உபதேசித்த ஆசாரியருக்கு ப்ரத்யுபகாரம் செய்ய ஒன்றும் முடியாததினால் 'மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்' என்கிறபடியே க்ருதஜ்ஞதையோடு போற்றுகிறது, உகக்கிறது. 'ராமானுசன் புகழ்பாடியல்லா வழியைக் கடத்தல் எனக்கினியாதும் வருத்தமன்றே' என்கிறபடியே லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் அழகியசிங்கர் வைபவத்தையும் ஸதா ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டு இருக்கும்படி க்ருபை செய்யவேண்டும் என்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்தித்துக்கொண்டு இருக்கிறோம்.

ஸ்ரீ:

அடியேனுடைய காணிக்கை

[ஸ்ரீ. உப. R. சேஷய்யங்கார் ஸ்வாமி, ஆராதகர், ஸ்ரீ அஹோபிலமடம், ஸ்ரீவில்லிபுத்தூர்]

ஶ்ரிய:பதியாய், ஸ்ரீவைகுண்டநிகேதநனாய், நித்யஸூரிஸேவிதனாய் இருக்கிற எம்பெருமான் 'अहोबिले गारुडशैलमध्ये कृपावशात्कल्पित सन्निधानम्' என்கிறபடியேபரமக்ருபையினாலே பூலோகத்தில் எழுந்தருளியும்கூட ஜீவாத்மாக்கள் தன்னை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்காமல் ஸம்ஸாரத்தில் கிடந்து உழல்வதைப் பார்த்தும் ஸிம்ஹ என்கிற திருநாமத்தாலே உபயலிங்கம் போல் சேர்ந்து நின்றுள்ள நிக்ரஹ அநுக்ரஹ கார்யமான சிக்ஷகத்வ ரக்ஷகத்வங்கள் அடியாக ஸஜாதீயராய் அவதரித்து திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமியாய் அவதரித்து அருளினான்.

ஸ்ரீராமாவதாரத்தில் ஸ்ரீரங்கவிமானத்தில் எழுந்தருளியிருக்கிற தன்னைத் தானே ஆராதித்துக்கொண்டாற்போல் இங்கும் ஆதிவண் சடகோபஸ்வாமியாகிற தன்னைக்கொண்டு அர்ச்சாரூபியாகிற தன்னை श्रीनृसिंहः प्रेषमन्त्रं स्वयं ददौ' என்கிறபடியே யதிரூபியாய் ஆராதித்துக்கொண்டு வருகிறான்.

விபீஷணாழ்வாரிடத்தில் ஸ்ரீரங்கவிமானத்தை ஒப்புவித்தாற்போல் ஒப்புவிக்காமல் நவநவமாக யதிரூபியாய் அவதரித்துக்கொண்டு 44 பட்டமாக எழுந்தருளியிருக்கிறான்.

'சென்று காண்டற்கரிய கோயில்' என்றும், 'தினைத்தனையும் செல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றமே' என்றும் இருக்கும் தன்இருப்பிடத்தை விட்டு பசு கன்றைத் தேடி ஓடுமாப்போலே இந்த சேதனவர்க்கத்தை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம் பற்றி கருடாரூடராயிருப்பதன்றிக்கே திருவடிகளில் பாதுகையையும் சாற்றிக்கொண்டு ஸேவை ஸாதிக்கிறான்.

அப்படி இருந்தும் பாரததேசம் பூராவாக ஸஞ்சரித்து ஆச்ரித ரக்ஷணம் பண்ணவில்லை என்ற குறையை நிவ்ருத்தி செய்ய உத்தேசித்து அழகியசிங்கருக்கும் தம்முடைய திருநாமமேயாகும்படியாக 41-வதுபட்டமாக அவதரித்தருளினான்.

அந்த தசையிலும் ஸங்கல்பம் பூர்த்தியாகாததாலும் 42-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரும் உத்தரதேசயாத்திரையாக எழுந்தருளியும் கலாபத்தால் ஹைதராபாத்திற்கு வடக்கே எழுந்தருளமுடியவில்லை.

தர்மமே குறைந்துகொண்டுவருகிறதைத் திருவுள்ளத்தில் கொண்டு சீக்கிரமே யாத்திரையைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று பூர்வாச்ரமத்தில் தம்முடைய திருநாமமே திருநாமமாக உடைய 43-வது பட்டம் ஸ்ரீஅழகிய சிங்கராக ஆவிர்ப்பவித்து அருளினான்.

தன்னுடைய திருநாமமுடைய 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரிடமே ஸகலசாஸ்த்ரங்களையும் அதிகரிக்கச்செய்து தன் திருவடிகளில் பரந்யாஸமும் செய்யும்படி செய்வித்தான். 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரும் அதைக்கணிசித்து ஆஸ்தானநிர்வாகத்தை ப்ரஸாதித்தருளினார்.

மூர்த்தாபிஷிக்தரான 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரும் 600வருஷங்களாகதலைக்கட்டமுடியாத கார்யத்தை அநாயாஸமாக ஆஸேதுஹிமாசலபர்யந்தம் என்று சொல்லும்படியான பாரததேசத்தில் ஒரு கிராமம் தப்பாமல் 108 திருப்பதிகள் என்ற ஸ்தலங்களில் பூலோகத்திலிருக்கிற ஸ்தலங்களை மங்களாசாஸனம்செய்தும் திருமந்த்ரம் அவதரித்த திவ்யதேசமான பதரியும் எழுந்தருளி 107-வதாக நைமிசாரண்யத்தில் தபோதனர்கள் புராணப்ரவசனம்பண்ணுவதில் தானும் கலந்துகொண்டு 108-வது திருப்பதியான பரமபதத்தில் ஸ்ரீமாலோலனுக்கு கைங்கர்யம் பண்ண எழுந்தருளினார்.

ஆச்ரிதரக்ஷணத்தில் இந்த ஸ்ரீ அழகியசிங்கருடைய ப்ரீதியை என்னென்றுசொல்லுவது 'आचारः प्रथमो (प्रभवो) धर्मः' என்று சொல்லுகிறபடியே ஆசாரம் இல்லாவிட்டால் நிக்ரஹம் ஏற்படும் என்று முதலாவதாகசிகை, யஜ்ஞோபவீதம், புண்ட்ரதாரணம் என்று சொல்லுகிற

ஸ்ரீ:

அவதார வைபவம்

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியர், B.A.L.T. ஹைஸ்கூல், ஸ்ரீரங்கம்]

பரமகாருணிகனான ஸ்ரீய:பதியாகிய ஸர்வேச்வரன், அநாதிகர்மவாஸனைக்குட்பட்டுத் தவிக்கும் சேதனர்களை உஜ்ஜீவிக்க தத்தத் காலங்களில் அவதரித்து ரக்ஷிக்கிறான். இந்த அவதாரம் அம்சாவதாரம், பூர்ணாவதாரம் என இருவகைப்படும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள் பூர்ணாவதாரங்கள். ஆழ்வார்கள் ஆசார்யர்கள் இவர்கள் அம்சாவதாரம். இவ்விரு அவதாரங்களில் பக்தர்களாகிய நமக்கு அம்சாவதாரம் சிறந்தது. ஏனெனில், ராமக்ருஷ்ணாதிகள் எப்பொழுதுமே அவதரிக்க முடியாது. அப்படி அவதரித்த காலங்களிலும் அவதார ரஹஸ்யம் சிலருக்கே ப்ரகாசிக்கும். ஆனபடியால் நம்மை உஜ்ஜீவிக்கச்செய்ய அம்சாவதாரம் தான் உபயோகமானபடி. இக்காரணம் பற்றியே ஸ்ரீபாஷ்யகாரர் ஆதிசேஷாம்சமென்பதும், ஸ்ரீதேசிகன் கண்டாம்சமென்பதும் நம் பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்டவை. நித்யஸூரிகளும் அவ்வப்போது எம்பெருமானின் திருவுள்ளத்திற்கிணங்க ஆழ்வார்கள், ஆசார்யர்கள் ரூபமாக அவதரித்து தர்மப்ரவர்த்தனம் நடந்து வருகிறது.

பூர்ணாவதாரங்களுள் ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் பக்தர்களை ரக்ஷிப்பதற்கென்றே அவதரித்த அவதாரம். தன்னையே நம்பி 'ஸ ஏவ விச்வம் பரம: ஸ்வசக்திபிஸ்ஸ்ருஜத்வத்யத்தி குணத்ரயேச:' எனத் தந்தைக்கு எடுத்துரைத்த பாகவதோத்தமனான ப்ரஹ்லாதாழ்வானை ரக்ஷித்து அவன் பிதாவை ஸம்ஹரித்து பிராட்டியைவிட பக்தர்களே தனக்கு முக்யமானவர்கள் என்றும், அவர்கள் ரக்ஷணமே தன்புருஷார்த்தமென்றும் ஸ்ரீய:பதி நமக்கு ஐயமறத் தெளிவுபடுத்தினான். அப்படி எடுத்துக்காட்டிய சிங்கப்பிரான் க்ருபையால் உவந்து வாஸம் செய்யும் திருப்பதி 'அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம்' என்கிறபடி அஹோபிலமாகும். அத்திருப்பதியை 'தெய்வமல்லாச்செல்லவொண்ணா சிங்கவேழ்குன்றம்' என நம் கலியன் பரக்கப் பேசியருளினான் அவ்வாறு பிறரால் ஸுலபமாக நெருங்கமுடியாத க்ஷேத்ரத்தில் அவன் ஸாந்நித்யம் பண்ணுவது ஸ்ரீவைகுண்டத்தில் தானிருப்பதற்குத் துல்யம் என்பதையுணர்ந்து தானே ப்ரதிதினம் க்ராமம் க்ராமமாகச் சென்று சேதனர்களையுஜ்ஜீவிக்கச் செய்யத் திருவுள்ளம் பற்றி, ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கு ஸ்வப்னத்தில் நியமித்து அதுமுதல் ஸஞ்சாரம் செய்து நாம் ரக்ஷிக்கப்பட்டு வருகிறோம். நித்யஸூரிகளே ஸ்ரீ அழகியசிங்கர்களாக அவதரித்து, அதனால் நாம் பகவானுடைய பரிபூர்ணகடாக்ஷத்திற்கு பாத்ரபூதர்களாகிறோம்.

கணக்கிலே எல்லோரையும் சிகை உள்ளவர்களாகச் செய்தும் கேவலம் ஸம்ஸ்க்ருதம் வ்ருத்திக்குக் காணாது என்று திருவுள்ளம் பற்றி அனேக பாடசாலைகளை ஏற்படுத்தி ஆசாரமும் போதிக்கும்படியான உபாத்தியாயர்களையும் நியமித்து அனேக வித்யார்த்திகளை உண்டுபண்ணினதும் திவ்யப்ரபந்தபாசுரங்களை ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் விஷயமாக ஏறிட்டு தாத்பர்யம் ஸாதிப்பதும் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும்படி ஸாதிப்பதும் இந்த ஸ்ரீ அழகியசிங்கரிடம் நாம் யாவரும் கண்டு கேட்டு அனுபவித்த விஷயம்.

நம் தௌர்ப்பாக்யத்தால் திருநாடு அலங்கரித்தாலும் நம்மைக் கைவிடாமல் இதாநீம் ஸ்ரீ அழகியசிங்கரை நியமித்தது நம் பாக்ய விசேஷமே.

இந்த ஸ்ரீ அழகியசிங்கரும் யாத்திரையைப் பூர்த்தி செய்துகொண்டு நம்மை அனுக்ரஹித்துக்கொண்டு பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கவேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திப்போமாக.

ஸ்ரீஸந்நிதியில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீ அழகியசிங்கர் பால்யத்தில் வர்சஸ்வியாகவும், தேஜஸ்வியாகவும் விளங்கிய உத்தமபுருஷர். மஹத்ஸந்ததியில் அவதரித்து சாஸ்த்ரீயமான காலங்களில் உபநயநாதி வைதிககர்மாக்கள் செய்யப்பட்டு ஸாரதமார்த்தங்களை ஸதாசார்ய ஸந்நிதிகளில் அப்யஸித்து தாம் க்ரஹித்தவைகளை அனுஷ்டாந பர்யந்தமாக்கி பகவத்கடாக்ஷம் பெற்றவரிவர். நித்ய நைமித்திக கர்மாக்களை தத்தத்காலங்களில் தவறாது பூர்வாச்ரமத்திலும் துரீயாச்ரமத்திலும் அனுஷ்டித்த மஹான். தான் ஸ்ரீந்ருஸிம்ஹனின் சொத்தானபடியால் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் அனுக்ரஹித்த சொத்துக்களை யதாசாஸ்த்ரம் ஸ்ரீந்ருஸிம்ஹனுக்கும் பாகவதாராதனத்திற்கும் உபயோகப்படுத்திவருவது வழக்கம். பூர்வாச்ரமத்திலும் சரி, துரீயாச்ரமத்திலும் சரி, தாமும் தம்முடையதாகக் கருதப்படுவதும் அவனுடையதே என்ற க்ரமத்தில் தம்மையும் தம்முடையதையும் உபயோகப்படுத்திவந்தபடியால் அவனுடையதை தன்னிஷ்டப்படி விநியோகிக்க பயந்து எழுந்தருளியிருந்தபடி. ஸ்ரீஸந்நிதியில் 42-வது பட்டத்தை அலங்கரித்த ஆசார்யரத்னமாகிய இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கர் இம்மஹானின் மேதையைக் கண்டு சிலரை இந்த ஸ்வாமியின் ஸந்நிதியில் காலக்ஷேபங்கள் செய்யும்படி நியமித்தாயிற்று. மதுராந்தகம் பாடசாலையில் ப்ரதான அத்யக்ஷராய் எழுந்தருளியிருந்த காலத்தில் க்ருதயுகத்தில் ஆசார்யன் ஸந்நிதியில் சிஷ்யர்களை வித்யாப்யாஸம் செய்த ப்ரகாரம், ஆசாரம், அநுஷ்டானம் முதலியவைகளுடன் கூடிய வித்யார்த்திகளைக் கண்ட கண்களுக்கு த்வபம்விளைந்த திருப்பதியின் ஏற்றம் நன்றாக விளங்கியது.

பூர்வாச்ரமத்தில் ஸ்ரீஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதிக்கு மாலைகள் ஸமர்ப்பிக்கும் நோக்கத்துடன் நந்தவனம் ஒன்று ஏற்படுத்தி திருமாலைக் கைங்கர்யத்தைத் துவக்கிவைத்த இந்த ஸ்வாமியின் திருத்தகப்பனாருடைய நியமனத்தை சிரஸா வஹித்து நடத்திவந்தாயிற்று. நந்தவனத்திலுள்ள சில புஷ்பங்களை மட்டும் ஸமர்ப்பிப்பது போதாதென்று, நந்தவனத்திலுள்ளது எல்லாவற்றையும் ஸமர்ப்பிக்கும் நோக்கத்துடன் ஒப்பிலியப்பனையும் பிராட்டியையும் நந்தவனத்திற்கு எழுந்தருள அழைத்து அனுபவித்த வைபவம் சொல்லிற்கடங்காது. தம்மை நந்தவனத்திற்கு அழைத்த ஸ்ரீஸ்வாமியைக் கண்டு உவந்து, எம்பெருமான் நைமிசாரண்யத்திற்கு ஸ்ரீஸ்வாமி எழுந்தருளுகையில் தன்னடிச்சோதிக்கு அழைத்துக்கொண்டார்போலும்.

42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருவிண்ணகர் எழுந்தருளும் காலம் வந்தவுடன் அர்ச்சாரூபியாய் அவதரித்த 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் தேரழுந்தூரிலிருந்து வடுவூருக்கு எழுந்தருளுகையில் இந்த ஸ்வாமியின் திருமாளிகைக்கு எழுந்தருளி ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய ஆராதனத்தை ஏற்றுக்கொள்ளும்படி தம்மை நியமித்த ப்ரபாவத்தை ஸ்ரீ அழகியசிங்கரே ஸாதிக்கும்படியாயிருந்தது.

பிறகு இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கர் இந்த ஸ்வாமியை ஆஸ்தானத்திற்கு எழுந்தருளும்படி நியமித்ததன்படி, இரு அழகியசிங்கர்களாலும் ஸ்ரீந்ருஸிம்ஹன் ஆராதிக்கப்பட்ட கோலாஹலம் மறக்கமுடியாதது. இவ்வழகியசிங்கர் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த குறுகிய காலத்தே, இதுவரை கட்டுண்ட சிங்கம் தாவுமாப்போல் தேசமெங்கும் ஸஞ்சரிக்கத் திருவுள்ளம் பற்றினான் நம் சரண்யன். ஸ்ரீ அழகியசிங்கரின் கைங்கர்யத்தில் திருப்தியடைந்து, இனி உயர்ந்ததான கைங்கர்யங்களைக் கொடுக்க நிச்சயித்து நைமிசாரண்யம் எழுந்தருளினவுடன் தன்னடிச்சோதிக்கு எம்பெருமான் அழைத்துக்கொண்டார்.

இவ்வழகியசிங்கர் ஓர் அவதாரவிசேஷம் என்பது தர்மத்தையனுஷ்டிப்பதில் ஸ்ரீஸ்வாமிக்கு இருந்த சுயநலமின்மை, தாம் அனுபவித்த பகவதாராதனமாகிற இன்பத்தை பிறரும் அனுபவிக்கச் செய்யவேண்டுமென்கிற நோக்கம், அந்நோக்கத்தை ஈடேறச் செய்ய

(தொடர்ச்சி 336-வது பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன்

[ஸ்ரீ. உப. வித்வான், பாதூர், தூப்பல், ராமபத்ராசாரியர் ஸ்வாமி, திருவுள்ளூர்.]

ஸ்ரீமதஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் நைமிசாரணியத்தில் பரமபதமெய்தியது கண்டும் கேட்டும் நாடடங்க நலிவடைந்துள்ளது. ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தை பலவிடங்களிலும் பலவிதமாக விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருந்த மக்களுக்கு ‘ஸ்ரீ அழகியசிங்கர் நித்யவிபூதிக்கு எழுந்தருளினா’ரென்று வந்த தந்தி. ரேடியோ செய்திகள் கானகத்தில் தன் அழகிய தோகையை நன்கு விரித்து ஆனந்தநடனம் செய்ய ஆரம்பித்த மயில் கூட்டத்தை எங்கிருந்தோ வந்த வேடுவனொருவன் செய்த தனுஷ்டங்காரம் சிதறச் செய்வது போல் பேரதிர்ச்சியைக் கொடுத்ததுடன் அளவற்ற துக்கத்தைக் கொடுத்துள்ளது. ஸர்வேச்வரன் அனைத்துலகும் வாழ்வதற்காக ஸ்ரீமதழகியசிங்கரைப்போன்ற ஆசார்யோத்தமர்களைப் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கச் செய்து தர்மஸம்ரக்ஷணம் செய்ய வேண்டுமென்று ஸங்கல்பத்துடன் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஆச்ரமஸ்வீகாரத்தையும் ஸஞ்சாரத்தையும் நடத்திவைத்தவன்; ஏன் இப்படி தன்னாட்டிற்கு அழைத்துக்கொள்ளவேண்டும்? ஶரண்யனுக்கு மிகவும் உகப்பான முறையில் ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வோ காலங்களில் பகவந்நியமனமறிந்து விலக்ஷணமாகத் திருவாராதனமும் உபசாரங்களும் செய்து வந்ததைக் கண்டு அநுபவித்த பல்லாயிரமக்களை வஞ்சித்துவிட்டு பரமபதத்திற்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டது பரமபதநாதனுக்குத் தகுமா? தர்மஸம்ரக்ஷணார்த்தமாக அவதரித்து, ஆங்காங்கு சிறிதும் தயக்கமின்றி ‘தர்மத்தை ரக்ஷித்தாலன்றி நாம் ஸுகமாக இருக்க முடியாது. நாம் தர்மத்தை ரக்ஷித்தால், தர்மம் நம்மை ரக்ஷிக்கும். வர்ணாச்ரமதர்மங்களை எல்லோரும் அவசியம் அநுஷ்டிக்கவேண்டும். பகவதாஜ்ஞையாகின்ற ச்ருதிஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட தர்மாநுஷ்டானத்தினால் பகவான் ப்ரீதனாகி ஸர்வவித க்ஷேமங்களையும் கொடுப்பான்’ என்று ஸமஸ்த ஜனங்களுக்கும் எளிதில் விளங்கும்படி மதுரமான உபதேசங்களைச் செய்தருளும் நம்பழகிய சிங்கர் தம் அவதாரத்தின் ப்ரயோஜனமான தர்மரக்ஷணம் பூர்த்தியடையுமுன் திருநாட்டுக்கெழுந்தருளியதுதான் யுக்தமா? இன்னும் எவ்வளவோ சேதனர்களைத் திருத்திப் பணி கொள்ள வேண்டாவோ? ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி ஸஞ்சாரம் செய்தருளின த்வரையைப் போலவே வைகுண்டயாத்திரையிலும் அதித்வரையை ஸங்கல்பித்ததுதானென்னே!

ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஆழ்வார்கள் அருளிச்செயல்களில் அளவிறந்த ஈடுபாடு உண்டு. தினந்தோறும் நிகழும் எந்த ஒரு சிறிய விஷயமானாலும் அதற்கநுகுணமாக ஓர் ஸ்ரீஸூக்தியைக் கையாண்டு ரஸிப்பதும், இதரர்களுக்கு மனதிற்படும்படி உபபாதித்து ரஸிக்கச் செய்வதும் வாசாமகோசரமானது. ஸ்ரீ அழகியசிங்கர் ஆச்ரமஸ்வீகாரமானவுடன் வந்து தண்டனிட்டு நின்ற பண்டிதர்களையும் லௌகிகர்களையும் கடாக்ஷித்து

‘யானொட்டி யென்னுள்ளிருத்துவமென்றிலன்
தானொட்டி வந்தென் தனிநெஞ்சை வஞ்சித்து
ஊனொட்டி நின்றென்னுயிரில் கலந்து
......ஒட்டுமோ இனி என்னை நெகிழ்க்கவே’

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தை ஸாதித்து ‘இப்படிக்குப் பெருமாள் நியமனமிருந்தபடி’ என்று ஸாதித்தாயிற்று. கைங்கர்யம் செய்யும் விஷயத்தில் சிலர் தமக்கு நியதமாக ஏற்பட்ட சில கைங்கர்யங்களைத் தவிர வேறு கார்யங்களைச் செய்யத் தயங்காமல் ‘ஏது ஏதென் பணியென்னாது அதுவே ஆட்செய்யுமீடே’ என்றன்றோ ஆழ்வார் அநுஸந்தித்திருப்பது! ஆதலால் கைங்கர்யங்களில் ப்ராப்தமானவைகளனைத்தும் உகந்து செய்யவேண்டியவைகளே என்று நியமித்தாகும். இவ்விதமாகத் தமது அநுபவங்களுக்கேற்ப ஆழ்வார்களின் அருளிச்செயல்களை ஸஹகாரியாக வைத்துக்கொண்டு

உபதேசித்துள்ளவைகள் அநேகமுள. மற்ற ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளைக் காட்டிலும் கலியனுரைகளே ஸ்ரீ அழகியசிங்கரின் கருத்தில் குடிகொண்டிருந்தன என்பது ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்யதேசமங்களாசாஸனத்தில் ஆரம்பித்துத் திருநாடு புகுந்தது வரையிலான அநுஷ்டானத்தினால் நன்கு வெளியாகிறது.

ஸ்ரீமதழகியசிங்கருக்கு ஆச்ரமஸ்வீகாரமானது வீக்ஷாரண்யமென்கிற திருஎவ்வுள்ளூரில். இத் திவ்யதேசத்து எம்பெருமானைக் கலியன், ‘தன்னடியார்க்கினியன்’ என்று மங்களாசாஸனம் செய்துள்ளார். ஸ்ரீ அழகியசிங்கரும் துரீயாச்ரமஸ்வீகாரம் ஆனவுடன் இவ்வெம்பெருமானது திருநாமத்தை தாஸ்யநாமாவாக ஏற்றுப் பட்டாபிஷேகமானவுடன் ‘எவ்வுள் பெருமலை’யை மங்களாசாஸனம் செய்தருளியது அவனடிமைப்பெயர் பூண்ட நாம் நமக்கு இனியனான அவனை முதலில் மங்களாசாஸனம் செய்யவேண்டும் என்று பேரவாவுடன் கலியனுரை குடிகொண்ட கருத்துடையராய் எழுந்தருளியிருந்தமைக்குச் சான்றாகும். இந்தத் திருப்பதிப் பாசுரக்கடைசியில் ‘அண்டமாள்வதானை ... ...’ என்ற பலச்ருதியும் ஆஸேதுஹிமாசலம் பெரும்புகழுடன் ஒப்பார் மிக்கார் எவருமில்லாதபடி ஸஞ்சாரம் செய்த நம் யதி ஸார்வபௌமராலேயே அன்வர்த்தமாயிற்று.

திருவுள்ளூரிலிருந்து ஸஞ்சாரம் தொடங்கி முதன்முதலில் மங்களாசாஸனம் செய்தருளியது சிங்கவேழ்குன்றத்து நம்பெருமானை. கலியனுடைய ‘நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் நம்முடை நம்பெருமான்’ ‘சென்றுகாண்டற்கரிய கோயில் சிங்கவேழ்குன்றமே’ என்ற பல பாசுரங்களும் திருவுளத்திற் குடிகொண்டிருந்தமையாலன்றோ அதித்வரையாக ஸ்ரீ அஹோபிலத்திற்கெழுந்தருளும்படி இருந்தது. மேலும் இவ்வாறு ஒவ்வொரு விஷயத்திலும் ஸ்ரீ அழகியசிங்கரைக் கலியனுரை குடிகொண்ட கருத்துடையோராய் நிரூபணம் செய்யலாம். ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்யதேசமங்களாசாஸனம் அஹோபிலத்தில் ஆரம்பித்து நைமிசத்தில் முடிவுற்றதை ஆழ்ந்து நோக்கினால் அது நன்கு விளங்கும். மங்கையர்கோன் திருமொழியில் ‘அங்கண்ஞால’மென்று துடங்கி அஹோபிலம் பெருமானை மங்களாசாஸனம் செய்த க்ரமத்தில் ஸ்ரீ அழகியசிங்கரும் மங்களாசாஸனம் செய்தாயிற்று. பெரிய திருமொழி பாசுரங்களில் ஸ்ரீமதழகியசிங்கர் மங்களாசாஸனம் செய்து வந்த க்ரமத்தில் பார்த்தால் ‘அங்கண்ஞால’மென்றது முதல் பாசுரமாயும் நைமிசாரண்ய மங்களாசாஸனப் பாசுரத்தில் கடைசியான ‘ஏதம் வந்தணுகா வண்ண’மென்பது இறுதியாகவுமுள்ளது. நைமிசாரண்யத்தில் கலியன் ‘நாடி நான் வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்’ ‘நாவினால் வந்துன் திருவடியடைந்தேன்’ ‘நானுடைத் தவத்தால் திருவடியடைந்தேன்’ என்றிப்படி பலகாலும் பாடிப்பாடி யுருகி சரணம் புகுந்தார். அப்போது ஸர்வேச்வரன் தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றம் முதலிய திருப்பதி எம்பெருமான்களுடைய மங்களாசாஸனமான பின்பு தான் அவரைத் திருவடி சேர்த்துக்கொள்ள விரும்பினான். ஸ்ரீ அழகியசிங்கருக்கோவெனில் ‘வந்துன் திருவடியடைந்தேன்’ என்றவுடன் மாற்றுரைக்கமுடியாமல் காடுமேடடையக் கடந்து வரலாயிற்றே என்று ‘தந்தோம்’ என்று திருவடிகளை அநுக்ரஹித்திருக்கிறான். ஸர்வேச்வரன் ஸ்ரீமதழகியசிங்கரைக் கொண்டு இவ்விபூதியில் இன்னுமநேக காலம் எவ்வளவோ சேதனோஜ்ஜீவனம் செய்ய வேண்டியிருக்க, ஸஞ்சாரமத்தியில் ஸ்ரீ அழகியசிங்கரைத் திருநாடேற ஸங்கல்பித்தது யுக்தமோவென்னில், ஸ்ரீமதழகியசிங்கருக்குக் கலியனுரைகளிலுள்ள ஈடுபாட்டையும் சிந்தையில் அகலாத அநுஸந்தானத்தையும் கண்ட ஶரண்யன், பரகாலனின் திருவாய்மொழியை பொய்யாமொழியாக்கவே அப்படிச் செய்தது என்று தோன்றுகிறது.

நைமிசாரணிக் கடைசிப் பாசுரத்தில்,

நைமிசாரணியத் தெந்தையைச் சிந்தையுள்
வைத்து, காதலே மிகுத்த கலியன் வாயொலி
செய்மாலை தான் கற்று வல்லார்கள் ஓதநீர்
வையகமாண்டு வெண்குடைக்கீழ், உம்பரு
மாகுவர் தாமே’ என்று பலச்ருதியாக கலியன் அநுஸந்தித்தது, ஸ்ரீ அழகியசிங்கர் உம்பரானதால் (நித்யஸூரியானதால்) பலித்தது. தன்னடியார்க்கினியனான எவ்வுள்கிடந்தானை மங்களாசாஸனம் செய்து அவனது இன்னருளைப்பெற்று ‘அண்டமாள்வதானை’ என்ற

கலியன் அநுஸந்தானம் ஆஸேதுஹிமாசலம் ஸஞ்சாரத்தினால் பலபர்யந்தமாகி விட்டது. அமருலகையும் ஆளவெண்ணி, நைமிசாரணியம் வந்தவாறே, ஓதநீர் வையகத்தை வெண்குடைக்கீழ் ஆண்டதெல்லாம் போதும்; இனி மாகவைகுந்தத்து ஆகம்சேர் நரசிங்கமதாகி உறையும் நின் திருவடிக்கீழ் குற்றேவல் புரிய கூவிக்கொள்ளவேணும்' என்று ஆர்த்தியுடன் இறைஞ்ச, கலியன் நைமிசாரணியத்துத் திருமொழியில் அருளிய பலச்ருதியையும் பலிக்கச் செய்தான் எம்பெருமான். கலியனுக்காவது சரணடைந்தேன் என்ற போது வீடு கொடுத்தால் திருமொழி பாடி இதர திவ்யதேசமங்களாசாஸனம் செய்யாத ஓர் குறை ஏற்படலாமென்று பரமபதப்பேற்றை அளிக்காததற்கு ஓர் காரணம் கூறலாம். ஸ்ரீ அழகியசிங்கருக்கு எவ்விதம் காரணம் கூற முடியும்? 'அதீதம் அத்யாபிதம் ஆர்ஜிதம் யஶ:' என்றபடி ஸர்வச்லாக்யமான திருவம்சத்தில் அவதரித்து ஸர்வோத்க்ருஷ்ட ஸதாசார்யர்கள் பக்கல் மேன்மையான ஜ்ஞானத்தையடைந்து தன்னையண்டிய ஸச்சிஷ்யர்களுக்கு ஜ்ஞானோபதேசங்களை செய்வித்து பிறவாதே பூமிதனில் பின்னைத்தும் உய்யவெண்ணி, ஆதிமறையுருவானவாதிப்புள் வெற்பதனில் சோதியென உலகெல்லாம் சுகம் பெறவே வந்துதித்த ஆதிநரசிங்கன் அருளாலே யோகியாகி, ஸ்ரீ மாலோலனுடன் ஒருவரும் செய்தறியாத முறையில் ஆஸேதுஹிமாசலம் ஸஞ்சரித்துப் பெரும்புகழை அடைந்தவரன்றோ நம்மழகியசிங்கர்?

கலியனைப் போலவே ஸ்ரீ அழகியசிங்கரும் 'ஏரார் முயல்விட்டுக் காக்கை பின் போவதே' என்றபடி பால்யந்தொடங்கியே அர்ச்சாவதாரத்தில் ஆழங்காற்பட்டு பகவத்ஸேவார்ச்சனாதிகளைப் பேருகப்புடன் செய்து வந்தது ஸர்வலோகவிதிதம். பூர்வாச்ரமத்தில் தேவனார்விளாகத்திற்கு திருவிண்ணகரப்பன் எழுந்தருளும்போது பூர்வாச்ரமத்திற்குச் சொந்தமாயுள்ள தோட்டத்திற்கு எழுந்தருளி உபயம் நடப்பதுண்டு. நடுவில் காலதோஷங்களால் ஒப்பிலியப்பன் எழுந்தருள ஸாத்யமில்லாது போகவே, ஸ்ரீ அழகியசிங்கர் அன்றைய தினம் வந்தவாறே ஸ்வாராத்யனான கண்ணனை அந்த உத்யானத்திற்குளெழுந்தருளப்பண்ணி அன்று முழுவதும் திருவாராதனங்களைப் பண்ணியும், உப்பில்லாத அமுதுகளைக் கண்டருளப்பண்ணி க்ரந்தகாலக்ஷேபாதிகளை சிஷ்யர்களுக்கு ஸாதித்தாகுமாம். கலியன் ஸ்ரீரங்கத்தில் திருவத்யயனோத்ஸவத்தை நடத்திவைத்தது போலவே ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீ ஸந்நிதியில் அத்யயனோத்ஸவத்தை நடத்திக்கொண்டு எழுந்தருளியிருந்தாயிற்று. கலியன் ஸ்ரீரங்கநாதனுக்குத் தங்கவிமானகைங்கர்யம் செய்ய ஆசைப்பட்டார். நம்மழகியசிங்கரோ தூபக்கால் தீபக்கால் கடதீபம் முதலிய ஸர்வோபகரணங்களையும் தங்கமயமாக்கியாயிற்று. கலியனுரைகள் பிற்காலத்திலுள்ள நம்போலிகளது உஜ்ஜீவனத்துக்கு உடலாகவாயின. கலியனுரை குடிகொண்ட ஸ்ரீமதழகியசிங்கர் சென்றவிடங்களிலெல்லாம் மதுரமான மொழிகளால் உபதேசங்களைப்பண்ணியும், ஆத்மோஜ்ஜீவன வ்யாபாரங்களைப் பண்ணிவைத்தும் தத்காலத்திலேயே ஸர்வபூதஹிதகாரியாக விளங்கி வந்தாயிற்று. மேலும் ஆழ்வார் திவ்யதேசங்களுக்கு மட்டில் சென்று மங்களாசாஸனம் செய்தவர். ஸ்ரீமதழகியசிங்கர் தேசகாலவிபாகமின்றி காடுமேடு என்று கூடப் பாராது சிறிய கிராமங்களுக்கும் மாபெரும் நகரங்களுக்கும் வாசியில்லாதபடி ஸ்ரீ மாலோலனுடன் எழுந்தருளி அநுக்ரஹம் செய்தருளியாயிற்று.

ஸர்வேச்வரன் நமது ஸம்ப்ரதாயரக்ஷணத்திற்கு அபிநவவேதாந்ததேசிகாவதாரம் செய்யத் திருவுள்ளங்கொண்டு மங்கையர்கோன் வழிவந்த மாபுருடனுக்கு மஹர்ஷிகள் மனங்கவர் ஸ்ரீ நைமிசாரணியத்துள் பரமபதமருளினான். ஸ்ரீமதழகியசிங்கரது பிருந்தாவனச் சேர்க்கையால் நைமிசவனமும் புதுச் சிறப்புற்றது. ஸ்ரீமதழகியசிங்கரது விரஹத்தால் நலிவுற்ற நாம் 'प्रलापैरवधार्यते' என்று போற்றியுகந்து புந்தியுட்கொண்டு தேறியிருக்க ப்ராப்தம்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் சரம கைங்கர்யம்

[ஸ்ரீ. உப. வித்வான், தையார், ஜோஸ்யம், மாடபூஷி, ரங்காசார்ய ஸ்வாமி,
ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம்.]

ஸ்ரீ அஹோபிலமடத்து குருபரம்பரையில் பொன்னெழுத்தால் அச்சடிக்கக் கூடிய வகையில் நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸேதுஹிமாசல பர்யந்தம் ஸஞ்சாரம் செய்தது மன்னியில் அதித்வரையாகவும் செய்தருளியாயிற்று என்பதை பாரதபூமியில் வஸிக்கும் பண்டித பாமரர்கள் யாவருமறிந்ததே. இவ்விதம் அதிக வேகமாக க்ராமைகராத்ரமாக ஸஞ்சரித்து எழுந்தருளிவந்ததால் திருமேனி மிகவும் க்ருசமாயிருந்ததுடன் பலஹீனமாகவும் இருந்து வந்தது. ஆகிலும் ஸ்ரீ அழகியசிங்கரின் மனோதைர்யத்தினால் குறிப்பிட்ட காலங்களில் திருவாராதநாதிகள் நடைபெற்று வந்தன. பரேலியில் எழுந்தருளியிருக்கும்போதே ஜ்வரமடிக்கலாயிற்று. அவ்விடத்தில் திருமுடிவிலக்கமும் க்ரஹண புண்யகால ஸ்நாநமும் நடைபெற்றது. ப்ராக்ருதம் ஸ்ரீ அழகியசிங்கரும் அடியேனும் பலபடியாக ப்ரார்த்தித்தும் அடியோங்களுடைய ப்ரார்த்தனையை கொஞ்சமும் செவிசாய்க்காமல் மேற்கூறியவைகளை செய்து முடித்தாயிற்று. அதிலிருந்து ஜ்வரமும் தணியாமல் வருத்திக்கொண்டேயிருந்தது. ஔஷதமேதாவது திருவுள்ளம் பற்றும்படி ப்ரார்த்தித்தோம். 'ஸ்ரீவிஷ்ணுபாதோதகத்தைத் தவிர்த்து பற்றொன்று வேண்டாம்' என்று மறுத்தாயிற்று. நமக்கு சரீர அஸௌகர்யமென்று ஏகாந்தத்திலும் ஒருவரும் கூடமாகக்கூட வெளியில் தெரிவிக்கக்கூடாது. தெரிவித்தால் .... சபதம் பண்ணியாயிற்று. நாங்களும் மிகவும் பொறுத்தோம். கடைசியில் பல உயர்ந்த சிகித்ஸகர்களை வரவழைத்தோம். அப்பொழுதும் எங்களுக்கு பயமே குடிகொண்டிருந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் நிஷேதிக்கவோ அனுமதிக்கவோ முடியாத நிலையில் எழுந்தருளியிருந்தாயிற்று. சிகித்ஸகர்களை நன்கு விசாரித்து மந்த்ராக்ஷதையையும் அனுக்ரஹித்தாயிற்று. பிறகு ஸ்வச்சந்தனான ஸர்வேச்வரன் எங்களுடைய எண்ணங்களைத் தகர்த்தெரிந்து சிலதினங்களில தன் திருவடிக்கீழ் அமர்த்தி புகுத்திக்கொண்டான். ஆகையால் கடைசிபர்யந்தம் இவ்விதம் நேர்ந்துவிடுமென்று ஒருவரும் ஒருக்ஷணமும் எதிர்பாராததோடு, ஸ்ரீநியமனத்தையும் எள்ளளவும் மீராமல் இருந்ததாலேயே வெளியிலுள்ளாருக்கு 15 தினங்கட்குமுன்பே திருமேனியின் அஸௌகர்யத்தைத் தெரிவிக்கவியலவில்லை.

ஸ்ரீ அழகியசிங்கரின் சரமகைங்கர்யம் நைமிசாரண்யத்தில் மிகவும் விமர்சையாக நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரமத் தம்பியான ஸ்ரீ.உப. வித்வான் ப. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸதேசிகாசார்ய ஸ்வாமி இருந்து நடத்திவைத்தார். கைங்கர்யத்திற்கு தென் தேசத்திலிருந்து வேத, ப்ரபந்த, க்ரந்தசதுஷ்டய பாராயணங்கள் பண்ணுவதற்கு நூற்றுக்கணக்கான ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். தென்னிந்தியாவில் அனேக இடங்களிலிருந்தும், பம்பாய், டில்லிமுதலிய ப்ரதான நகரங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கில் லௌகிக ப்ரமுகர்களும் வந்திருந்தார்கள். பாராயணம் பண்ணிய ஸ்வாமிகளுக்கு சார்ஜூம் 100 ரூபாயும், பண்டிதர்களுக்கு சார்ஜூம் 150 ரூபாயும், லௌகிகர்களுக்கு சார்ஜூம் விலையுயர்ந்த சால்வையும் ஸ்ரீ அழகியசிங்கர் அனுக்ரஹித்தாயிற்று. ஸ்ரீ ஸன்னிதி கைங்கர்யபரர்களுக்கும் அதிகாராநுகுணமாக இம்மாதிரியே அநுக்ரஹித்தாயிற்று. பதினாயிரக்கணக்கில் ரூபாய் செலவு செய்து ப்ருந்தாவனம் மிகவும் ஆச்சர்யமாகக் கட்டி அதில் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்யமங்களவிக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்தாயிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் கண்களில் நீர் பெருக ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளிய மஹோபகாரங்களுக்கு இவ்வளவு செய்வது போதாது என்று லக்ஷக்கணக்கில் ரூபாய்களை செலவழித்து கைங்கர்யத்தை இதுவரை

கண்டும் கேட்டுமில்லாத வகையில் ஸ்ரீ அழகிய சிங்கர் நடத்திவைத்தாயிற்று. ஸ்ரீ அழகிய சிங்கரின் திருக்குமாரன் தேவனார்விளாகத்திலேயே கைங்கர்யத்தைப் பண்ணியதால் அதற்கு வேண்டியஸௌகர்யங்களையும் செய்து கொடுத்தாயிற்று.

ஸ்ரீஸந்நிதியில் ஸ்ரீ அழகியசிங்கரின் கைங்கர்யத்தில் அந்வயித்த ஸ்வாமிகளின் திருநாமங்கள்:—

பதினேழாவது நாள்

1. ஸ்ரீ. பனமுகை நரஸிம்ஹாசாரியர், ஆராதகர். 2. ஸ்ரீ. தையார் ஸ்ரீநிவாஸாசாரியர், ஆராதகர், 3 ஸ்ரீ. தையார் ஜே. ரங்காசாரியர், ஸ்ரீகார்யம்.

த்வாதசாராதனத்தன்று

1. ஸ்ரீ. புரிசை கிருஷ்ணமாசாரியர், (42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் தௌஹித்ரர்)

2. ஸ்ரீ. தையார் தேவநாதாசாரியர் ஆராதகர்,
3. ,, சேட்லூர் ராஜகோபாலாசாரியர் ,,
4. ,, குரிச்சி ராமபத்ராசாரியர் ,,
5. ,, பழவேரி நரஸிம்ஹாசாரியர் ,,
6. ,, திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசாரியர்,
7. ,, கோஷ்டிபுரம் தாமோதராசாரியர்,
8. ,, ராமஸ்வாமி ஐயங்கார், ப்ரின்ஸிபால்
9. ,, மேல்பாக்கம் நரஸிம்ஹாசாரியர்,
10. ,, ஹஸ்தாந்தரம் ரங்காசாரியர்,
11. ,, சிலுக்கூர் வெங்கடராகவாசாரியர்,
12. ,, சொக்கனூர் வெங்கடரங்காசாரியர்,
13. ,, நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசாரியர்,

ப்ரஹ்மா

ஸ்ரீ. பாதூர் ராகவாசாரியர்,
,, கே. பி. நரஸிம்ஹாசாரியர்,
(அண்ணாவய்யங்கார்)

331-வது பக்கத்தொடர்ச்சி

வேண்டி ஸ்ரீஸ்வாமி அடிக்கடி கூறிவந்த உபதேசமொழிகள் இவை மூலமாக நன்கு புலனாகும். மேலும் தான் அர்த்தகாமங்களை முற்றும் துறந்து மோக்ஷமே புருஷார்த்தமென்பதை அனுஷ்டித்துக்காட்டியதன் மூலம் விளக்கி பிறரையும் அவ்வழியில் இழியுமாறு செய்ய அரும்பாடுபட்ட இந்த ஸ்வாமியை நாம் மறக்கமுடியாது. ஸ்ரீஸந்நிதியில் தான் கைங்கர்யமேற்ற காலம்முதல் வேதபாராயணம் முதலியவைகளில் தாமே அந்வயித்ததுடன், அத்யயன உத்ஸவத்தை ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் நடத்தி அனுபவிக்கும்படியிருந்தது. செல்வதற்கே தெய்வத்தன்மை வேண்டுமென்றிருக்கும் அஹோபில க்ஷேத்ரத்தில் இரண்டு மாதங்களுக்குமேல் தங்கி புனருத்தாரணங்கள் செய்து ஸ்ரீந்ருஸிம்ஹனின் பலப்ரகாரமான ரூபலாவண்யத்தை எளியோர் வழிபட வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த இவ்வழகியசிங்கரின் ப்ரபாவத்தை என்னென்பது.

மேலும் ஸ்ரீ அழகியசிங்கர் செய்திருக்கும் பல ஜீர்ணோத்தாரண கைங்கர்யங்கள் ஸ்ரீ அழகியசிங்கரின் பெருமையை நமக்கு நன்கு கூறும். இவையெல்லாவற்றையும்விட ஸ்ரீ அழகியசிங்கர் செய்த உத்தமமான கைங்கர்யம் தமக்குப்பின் ஆஸ்தானத்தில் தகுந்த வ்யக்தியான ஸ்ரீமுக்கூர் ஸ்வாமியை பல்லாண்டு பல்லாண்டாக ஸ்ரீஸம்ப்ரதாய அபிவ்ருத்தி பண்ணும்படி செய்ததாகும்.

சரமச்லோகங்கள்-3 (தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. வித்வான், மதத்ரயநிரூபக, காளி, ரங்காசாரியர் ஸ்வாமி, புது டில்லி]

श्रीमान् वीररघूत्तमाख्ययतिराट् श्री नैमिशारण्यके
स्वीयं श्रीनरसिंहराज्यमखिलं त्यक्त्वा शरीरं तथा ।
लब्ध्वा नित्यविभूतिराज्यमखिलं सेनापतित्वं ययौ
ज्ञानी शुद्धमहात्मनां च स महान् वैराग्यमूर्तिर्बभौ ॥ १

श्रीवीरराघवशठारियतीश्वरोऽयं श्रीनैमिशाख्यविपिने प्रविसृज्य देहम् ।
स्वाराधितं नरहरिं मनसा विचिन्त्य वैकुण्ठशेषगरुडादिसमो बभूव ॥ २

असंख्याता लोके बहुमनुजवृद्धा नरहरेः पदि न्यस्तस्वीयात्मभरसुभक्ताः स्वकरुणया ।
परं धाम प्राप्ता इति खिल विभूतिद्वयवहे गुरुं मत्वा विष्णुः स्वनिकटमनैषीत् द्रुतमहो ॥

श्रीमान् श्रीवैनतेयो दिवि हरिनिकटे गर्ववाक्यं समूचे
तस्मात्तत्राधिकारे निगममयमिमं सद्गुरुं स्थापयित्वा ।
गर्वं तस्याद्य मोक्तुं स्वमनसि भगवानाह्वयामास चार्यं
नान्यः कश्चित्समर्थो गरुडपदवहे केचिदेवं जगुस्तम् ॥ [इति शेषः]

पापिष्ठप्राणिजातप्रवहणकरणान्मच्छिरो भग्नमासीत्
श्रुत्वा शेषस्य वाक्यं विहरसुखमहो शेष इत्थं समुच्य ।
क्षिप्रं श्रीवीररघ्वीड्यतिवरसुगुरो! प्रेहि वैकुण्ठलोकं
शेषस्थानं वहेस्त्वंत्विति हरिवचनान्नित्यभूतिं ययौ सः ॥ ५

श्रीमान् श्रीप्रतनापतिर्विहरते श्रीवेत्रवत्या सह
स्वीयं कार्यमसंख्यमावलयितुं शक्तोऽपि शक्नोति न ।
श्रीमान् वीररघूत्तमाख्ययतिराट् संत्यक्तदारेषणः
तस्मादेनमनीकनीपतिमहो चक्रे नु किं श्रीहरिः ॥ ३

समोऽहं वैनतेयेन विष्वक्सेनेन वा समः । आदिशेषेण सदृशो भवेयमिति चिन्तया ॥
नृहरौ तपसा भक्त्या नित्यकैङ्कर्यवानभूत् । यथाक्रतुनयात्स्वामी तेषामन्यतमोऽभवत् ॥

இன்னும் பல ஸ்வாமிகள் ச்லோகங்கள் அனுப்பியுள்ளார்கள். தமிழில் அர்த்தமின்றி எல்லோருக்கும் எளிதில் விளங்காததலாலும், பத்திரிகையில் இடமின்மையாலும் அவைகளை வெளியிட முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 17 } ஹேவிளம்பி ஞு தை மீ { ஸஞ்சிகை 1

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டாபிஷேக மஹோத்ஸவம்

[ஸ்ரீ. உப. வித்வான், பு ந. கிருஷ்ணமாசார்யஸ்வாமி, ந்யாயசிரோமணி, திருவள்ளூர்]

நாளது ஹேமலம்பி௵ கார்த்திகை௴ 22௳ ஞாயிற்றுக்கிழமைகாலையில் கோமதீ, சக்ரதீர்த்தம் முதலிய புண்ய தீர்த்தங்களிலிருந்து ஸ்வர்ணகடங்களில் புண்யதீர்த்தங்களை யானையின்மேல் வைத்து ஊர்வலமாகக் கொண்டு வந்தார்கள். காலையிலிருந்து மிக ஸம்ப்ரமமாக கார்யங்கள் நடந்து வந்தன. அபிகமன ஆராதனமானதும் ஜபிதது ஸ்வர்ணகடங்களிலுள்ள தீர்த்தத்தை ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரோக்ஷித்துக்கொண்டாயிற்று. பிறகு பட்டாபிஷேக ஸ்ரீமுகங்களில் ஹம்ஸமுத்ரையுடன் திருவக்ஷரம் சாற்றும்படியிருந்தது. இவைகள் நடந்தபின் மாலோலனின் மாலை பரியட்டம் முதலியவைகள் அருளப்பாடுடன் ஸமர்ப்பிக்கப்பட்டன. பிறகு ஸ்ரீ வீரராகவன், புள்ளபூதங்குடி, ஆதனூர் முதலிய திவ்யதேசத்தெம்பெருமான் ஸந்நிதிகளிலிருந்தும், மற்றும் பலவிடங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட மரியாதைகள் ஸ்ரீ அழகியசிங்கருக்குச் சாத்தப்பட்டன. நான்கு தினங்களாகக் கூடவே இருந்து ஸ்ரீ ஸந்நிதியில் நடக்கும் வைகரிகளைக் கண்டு களித்துவரும் ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யராயும் உத்தர அஹோபிலஜாலரியாபீடாதிபதி என்று வழங்கிவருபவருமான ஸ்ரீவீரராகவாசாரியர் ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கருக்கு விலையுயர்ந்த இரண்டு சால்வைகளை ஸமர்ப்பித்து 501 ரூபாயும் ஸம்பாவனைச் செய்தார். அன்று ததீயாராதனத்தையும் கோஷ்டிக்குப் பூரியையும் அந்த ஸ்வாமியே ஸமர்ப்பித்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் அவருக்கு பட்டாபிஷேக ஸ்ரீமுகத்தைத் தந்தருளி பெரியதோர் சால்வையையும் அனுக்ரஹித்தாயிற்று. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அமுது செய்த சித்ரான்னங்கள் கோஷ்டி விநியோகமானவுடன் கர்னாடகபல்லக்கில் ஊர்வலமாக எழுந்தருளியாயிற்று. அவ்வமயம் ஸ்ரீ வீரராகவாசார்யர் ஸ்வாமியும் ஸ்ரீ அழகியசிங்கருடன் ஸம்பாஷித்தவண்ணம் பல்லக்கின் ஸமீபத்தில் வந்துகொண்டிருந்தார். இதைப் பார்த்ததும் **'पूर्वं यस्तु मुकुन्ददेवविभुना स्कन्दे धृतान्दोलिकः'** என்கிற ச்லோகம் ஞாபகத்திற்கு வந்தது. **'यत्कटाक्षेण सर्वेऽपि यत्स्थाना गतयोगिनः । ते नृसिंहदयापूर्णाः'** என்கிறபடியே ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் கடாக்ஷவிசேஷத்தால் ஸ்ரீஸந்நிதி ஆஸ்தானத்தை அலங்கரிப்பவர்கள் எல்லோரும் ஸ்ரீந்ருஸிம்ஹனின் தயைக்குப் பாத்ரமானவர்கள் என்பதுடன் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுகவே நாம் போற்றியும் வருகிறோம். அதிலும் இவ்வழகியசிங்கர் விஷயத்தில் அனேக பீடாதிபதிகள் கர்னாடக பல்லக்கின் ஸமீபத்தில் செல்வதைக் கண்ணுற்றவர்கள் அந்வர்த்தமானதே என்று சொல்லிவந்தார்கள். 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் பலகாலும் ஸ்ரீ சின்ன அழகியசிங்கரிடம் ஸாதிக்கும் விஷயம் ஒன்றுண்டு. அதாவது ஸ்ரீஸந்நிதி சிஷ்யர்களில் பல கோடி பேர்கள் இருக்கின்றார்கள். அதிலும் பல பண்டிதர்கள் இருக்கின்றார்கள். இருந்தார்கள்; இருக்கப் போகிறார்கள். ஆகிலும் ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷம் 43 பேர்களிடத்தில்தான் பூர்ணமாக விழுந்திருக்கின்றது என்று. அவ்விதமே ஸ்ரீ அழகியசிங்கரிடம் ஏற்பட்ட கடாக்ஷவிசேஷத்தால் 44-வது பட்டத்திற்கு எழுந்தருளக் கூடியதான ஸந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கும் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் பலவிதத்திலும் ஸாம்யமுண்டு. ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் 20-வது திருநக்ஷத்ரத்தில் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். ஸ்ரீ அழகியசிங்கர் 20-வது வயது முதற்கொண்டு ஸ்தானத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளாமல் மற்ற ஸ்ரீஸன்னிதியின் அபிவிருத்தமான கார்யங்களைச் செய்துவந்தார். அம்மஹான்

ஸ்தானம் ஏற்றுக்கொண்டவிடம் நூற்றெட்டு திருப்பதிகளில் சுனையும் மலையும் நிறைந்த நிபிடமான ஒரு காடே. இவ்வழகியசிங்கரும் நூற்றெட்டில் ஒன்றான தீர்த்தங்கள் நிறைந்த ஓர் அரண்யமே. ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸ்வப்னம் ஸாதிக்க ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். ஸ்வப்னமானாலும் நம் ஸித்தாந்தப்படி அது ஸத்யமானாலும் இக்காலத்தை யனுஸரித்து ஸ்வப்னத்தைவிட நேரில் அநுக்ரஹிப்போம் என்று திருவுள்ளம்பற்றி 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் மூலம் பல தடவைகள் சொல்லிவைத்தார். அம்மஹானும் ஸன்னிதியை ஸ்தாபித்தார் இம்மஹான் இப்பொழுது இந்த ஸ்தானத்தை அலங்கரிக்காவிட்டால் ஸ்ரீஸன்னிதி எம்மாதிரி நடந்திருக்குமென்று எண்ணக்கூட மனம் துணியவில்லை. ஒரே ஒருவிதத்தில்தான் மாறுபட்டுவிட்டது. ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் நியமனமானவுடன் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மனமுவந்து ஜடிதி ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார் அதிபால்யமாகையால். இவ்வழகியசிங்கர் வ்ருத்தராகையால் பல தடவைகள் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்தும் உடனே ஏற்றுக்கொள்ளாமல் சிஷ்யர்களின் நிர்பந்தத்தின்பேரில் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தை சிரஸா வஹித்து ஏற்றுக்கொண்டார் என்பதுதான் அம்மாறுபாடு. முகுந்ததேவராயப்ராயர்களாக அனேக ஆஸ்திக தநாட்யர்கள் வந்திருந்து தந்தப்பல்லக்கில் ஸ்ரீ அழகியசிங்கரின் ஊர்வலத்தை நடத்திவைத்தார்கள். ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் 'रचितवान् भक्तप्रतिष्ठापनम्' என்று அனேக இடங்களில் தம்முடைய பூர்வாசார்யர்களை ப்ரதிஷ்டை செய்துவைத்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் தம்முடைய பட்டாபிஷேகமஹோத்ஸவத்தன்று தாம் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளும்போதே தமக்கு முன் மூர்த்தாபிஷிக்தர்களாய் எழுந்தருளியிருந்த 42, 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்களை வெள்ளிமண்டபத்தில் ப்ரதிஷ்டை செய்துவைத்தாயிற்று. ஸ்ரீ குரிச்சி ஸந்தானமய்யங்கார் தமக்கு இந்த பாக்யம் ஏற்பட்டதைப்பற்றி உள்ளடங்காத மகிழ்ச்சி கொண்டார். 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ அஹோபிலத்தில் முதல் ஸங்கல்ப மஹோத்ஸவத்தை நடத்திய ஸமயம் ஸ்ரீஸந்தானமய்யங்கார் திருக்குடந்தையிலிருந்து அஹோபிலத்திற்குச் சென்றாராம். ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் தெண்டனிட்டு 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரை வெள்ளிமண்டபத்தில் ப்ரதிஷ்டை செய்யவேணுமென்று ப்ரார்த்தித்தாராம். அதற்கு ஸ்ரீ அழகியசிங்கர் 'பிறகு பார்த்துக்கொள்ளலாம், இந்த ஸமயம் வேண்டாம்' என்று ஸாதிக்கும்படியிருந்ததாம். பிறகு பல தடவைகள் ப்ரார்த்தித்தாராம். அப்பொழுதும் இதேமாதிரியாக ஸாதிக்கும்படியாக இருந்ததாம். ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திற்காக நைமிசாரண்யம் சென்ற அந்த ஸ்வாமி மார்க்கத்திலேயே அதிதுஸ்ஸஹமான செய்தியைக் கேட்டு பரிதபித்தாராம். பிறகு முதல் நாள் கைங்கர்யங்கள் முடிந்தவுடன் மறுநாள் ஊருக்கு புறப்படும் ஸமயம் 44-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர், ஸ்ரீஸந்தானமய்யங்காரிடம் சில லௌகிக கார்யங்களை நியமித்துவிட்டு 'அனேக வருஷங்களாக நீர் ப்ரார்த்தித்தபடி சீக்ரத்திலேயே ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரதிஷ்டைசெய்ய விக்ரஹங்களை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வரவும் என்றும் நியமித்துவிட்டு सूक्ष्मः परम दुर्ज्ञेयः' ஸ்ரீ அழகியசிங்கர் முன்பு ஸாதித்ததின் தாத்பர்யத்தை யறிந்தீரா? தேவரீர் இரண்டு அழகியசிங்கர்களிடத்திலும் அதிகபக்தியுடையவராகையாலும் இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களுடையவும் திருவுள்ளங்கள் உள்ளும் புறமும் ஒத்திருந்ததால் அவிநாபூதர்களாக ஸேவை ஸாதித்துவந்ததால் சரீரத்தைவிட்டு ஆத்மப்ரஷ்டை பண்ணினால் போதாது என்கிற திருவுள்ளத்தால் தம்முடனேயே ப்ரதிஷ்டை செய்வதற்காகவே அம்மாதிரி ஸாதிக்கும்படியிருந்தது' என்று ஸாதித்தாயிற்றாம். இவரும் அதிஸந்துஷ்டராய் முன் நேர்ந்த சோகம் மறந்து புளகீக்ருத காத்ரராய் இனி தூமசகட மார்க்கத்தில் செல்ல அவகாசமில்லை என தீர்மானித்து ஆகாயமார்கத்தில் அதிவேகமாக சென்னை வந்துசேர்ந்தார். சென்னையில் விசா

ரித்ததில் குறிப்பிட்ட காலத்தில் முடியாது என்று சொல்லிவிட்டார்களாம். உடனே திருக்குடந்தைக்குப் பறந்து சென்றார். இவருடைய ஆஸ்தாவிசேஷத்தை அறிந்த ஆச்சாரியும் ஆசார்யரத்னங்களின் அர்ச்சைகளை அதிவிலக்ஷணமாக அதித்வரையுடன் செய்து கொடுத்தார். வெள்ளியினால் செய்து ஸ்வர்ணாபிஷேகம் பண்ணிவைத்து நைமிசாரண்யத்தில் ஸ்ரீ அழகியசிங்கரிடம் ஸமர்ப்பித்துத் தம்முடைய ஆத்மஸாபல்யத்தை எண்ணி ஆனந்த பாஷ்பம் பெருக நின்றார். ஸ்ரீ அழகியசிங்கரும் அவ்விக்ரஹங்களைக் கையிலெடுத்து கடாக்ஷித்து கண்கலங்கியாயிற்று. பிறகு திருவுள்ளூர் வீரராகவஸ்வாமி தேவஸ்தானத்தில் அர்ச்சககைங்கர்யம் பார்த்துவரும் ஸ்ரீ அத்திவித்வான் நரஸிம்ஹாசார்யரைக்கொண்டு ப்ரதிஷ்டை செய்துவைத்தாயிற்று. இவ்விதம் ஆதியிலேயே ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் ஸாம்யம் பூர்ணமாக இருக்கின்றது என்பதை விஜ்ஞாபித்தேன். மற்றவைகளை ஊஹித்தறியலாம்.

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் சரம கைங்கர்யத்தை அதிவிலக்ஷணமான முறையில் நடத்திவைத்தாயிற்று. கைங்கர்யபரர்களுக்கும், கைங்கர்யத்தில் அந்வயித்தவர்களுக்கும் வாரி வாரி வழங்கியாயிற்று. அப்பொழுது ரகுமஹாராஜனின் 'விச்வஜித்' யாகம் நினைவிற்கு வந்தது. ஆனால் மாலோலன் கொள்ளக்குறைவிலன், வேண்டிற்றெல்லாம் தரும் பெரும் வள்ளலல்லவா!! ஆயிரக்கணக்கில் என்பதில்லாமல் லக்ஷக்கணக்கில் ரூபாய்கள் செலவழித்து தமக்கு அந்த ஸ்ரீ அழகியசிங்கரிடத்திலுள்ள பக்தியை வெளியிட்டாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து ஸ்ரீ ஸன்னிதியின் ச்ரேயஸ்ஸை மேன்மேலும் வ்ருத்திசெய்தருளவேணுமாய் ஸர்வலோகசரண்யனை ப்ரார்த்திக்கிறேன்.

ஓர் விண்ணப்பம்

நாங்கள் எதிர்பார்த்தபடி நைமிசாரண்யத்திலிருந்து வந்ததும் மார்கழி மாதத்திய ஸஞ்சிகையை வெளியிடமுடியாததைப்பற்றி மிகவும் வருந்துகிறோம். பலவித இடையூறுகளினால் ஸஞ்சிகைகள் வெளிவர விளம்பமேற்பட்டது. இதை வாசகமஹாசயர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என நம்புகின்றோம். அடுத்த ஸஞ்சிகையிலிருந்து முன்போல் வெளிவருவதுடன் மேலும் பல அம்சங்களில் அபிவிருத்திகள் செய்யவேணுமென்றும் உத்தேசித்துள்ளோம். சந்தாதாரர்களின் ஆதரவைக் கோருகின்றோம்.

ஸ்ரீ அழகியசிங்கர் விஷயமாக பலர், வியாஸங்களும் ச்லோகங்களும், செய்திகளும் அனுப்பியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் இந்த ஸஞ்சிகையிலேயே போடமுடியாமல் போனதைப்பற்றி க்ஷமிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ஸம்பாதகர்

ஸ்ரீ:

சோகந்தவிர்த்த சுருதிமுடியாசிரியன்

[ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல், ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்]

ஸ்ரீ அஹோபிலமடம் 44-வது பட்டத்தில்
மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீ அழகியசிங்கரின்
பட்டாபிஷேக ஸமயத்தில் ஸ்ரீபாதுகாஸஹஸ்
ரத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்த

> रामे वनं व्रजति पङ्क्तिरथे प्रसुप्ते
> राज्यापवादचकिते भरते तदानीम् ।
> आश्वासयेत्क इव कोसलवासिनस्तान्
> सीतेव चेत्वमपि साहसवृत्तिरासीः ॥

என்கிற ச்லோகம் நினைவுக்கு வந்தது. பற்பல
ஒற்றுமைகளைக் கணிசித்துப் பார்த்தால் இது
மிகவும் பொருத்தமுள்ளதாகவே தோன்
றிற்று. மேலும் அடியேனுடைய மனதிற்
றோன்றிய சில விஷயங்களையும் விஜ்ஞாபித்
துக்கொள்ளுகிறேன்.

அன்று ஸ்ரீ ராகவன் வநமேற எழுந்தருளி
விட்டார். இன்று ஸ்ரீவீரராகவயதிபதி நைமி
சவனத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளிவிட்
டார். அன்று தசரதசக்ரவர்த்தியோ அமர
ராகிவிட்டார். இன்று ஸர்வஜகத்ரக்ஷகனான
ஸ்ரீ மாலோலன் ஸ்ரீ அழகியசிங்கரது பிரிவி
னால் மற்றோர் அழகியசிங்கரை ஏற்படுத்தி
ஜகத்தை உஜ்ஜீவிக்கவேண்டி வெள்ளி மண்ட
பத்தில் எழுந்தருளியிருந்தபடி. அன்று பர
தாழ்வான் ராஜ்யமக்கள் நம்மை எவ்வாறு தூற்
றுவார்களோ என்றுநடுநடுங்கிபயந்திருந்தான்.
இன்று பரதாழ்வானைப்போன்ற கைங்கர்ய
பரர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை நைமிசத்தில்பரம
பதமேறப்பண்ணித் திருப்பிச் சென்றால் உல
கத்தோர் நம் ஸ்ரீ அழகியசிங்கர் எங்கே?
என்று கேட்டால் பதில் கூற வேண்டுமே?
மற்றும் நாதனை இழந்துவிட்டதால் எவ்வித
மான அபவாதங்களும் ஏற்படலாமே? என்று
பயந்திருந்தார்கள். அன்று கோஸலதேச
வாஸிகளான ஜனங்களுக்கு ராஜ்யம் நாதனை
இழந்திருப்பதாலும் சக்ரவர்த்தி ஸ்வர்க்கத்
திற்குப் போனபடியாலும் ராமனைக் காட்டிற்
கனுப்பியதாலும் ஏற்பட்ட துக்கம் அளவற்று
இருந்தது. அப்போது ஆறுதல் கூற வேறு
மனிதர்கள் இல்லை. இன்றும் அதே நிலை
ஸ்ரீ அழகியசிங்கர் பரமபதித்துவிட்டார். ஸ்ரீ
மாலோலன் தனக்கு ஆராதகரான அழகியசிங்
கர் பிரிவால் மௌனியாகிவிட்டான். கைங்
கர்யபரர்கள் பயந்து என் செய்வது என்று
தெரியாது வருத்தமுற்றிருக்கிறார்கள். இந்த
நிலையில் ஆறுதல் தெரிவிக்கக்கூட கதியில்லை.
ஸ்ரீராமபாதுகையானது அன்று எல்லோரு
டைய சோகத்தைப் போக்கவே அபிஷேகம்
பண்ணப்பட்டு ஸ்ரீராமனின் ஸ்தானத்திலி
ருந்து கோஸலஜனங்களை மகிழ்வித்து ராஜ்யத்
திற்கு நாதனாக ஆயிற்று. இன்று ஸ்ரீ அழ
கியசிங்கர் ஸ்ரீ ஸந்நிதியின் க்ஷேமத்தையும்
கைங்கர்யபரர்களுக்கு அபவாதம் நேரிடாமலி
ருக்கவும் ஸ்ரீமாலோலனுக்கு ஓர் குறைவின்றி
ஸகல ஆராதனங்களும் நடைபெறவும் துரீயா
ச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டு நம் போன்ற
அனைத்துலகும் வாழ வந்த ஆதிநரசிங்கனடி
பணிந்து வரத் திருவுள்ளம்பற்றியாயிற்று.
ஸ்ரீ அழகியசிங்கர் தன்னால் இந்த ஆஸ்தான
நிர்வாஹம் செய்தருள முடியாதென்று ஔதா
ஸீந்யத்தை அவலம்பித்திருந்தால் ஸ்ரீ மாலோ
லன் நமக்கேது? இவ்வளவு காலமாக நம் பெரி
யோர்களால் ரக்ஷிக்கப்பட்டுவந்த ஸ்ரீமதஹோ
பிலமடத்தின் திவ்யாஸ்தானமேது? மற்ற எல்
லாவிதமான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் பரிக
ரங்களின் கதியென்ன? தற்காலம் ராஜ்யத்தில்
நடக்கும் தார்மிகமஹாஜனங்களுக்கு ஏற்பட்
டுள்ள அநீதியைக் கண்கூடாக அனுபவிக்கும்
நமக்கு இம்மாதிரியான தர்மஸ்தாபனங்களும்
ஆசார்யர்களும் கூட இல்லாமற்போனால் உல
கமே நரகமாகிவிடும் என்பதில் ஐயமில்லை.
அரசாளும் கூட்டத்தினிடமிருந்து தார்மிகர்
கள் ஏதாவது ஆனுகூல்யமடைய இடமுண்டா?

இப்படிப் பலவிதத்திலும் நமக்கு நேரவி
ருந்த இன்னல்களை பயநாசகனான ஸ்ரீ மாலோ

லன், அன்று ஸ்ரீ ராமபிரான் பரதாழ்வானுக்குத் திருவடிநிலைகளை அனுக்ரஹித்ததுபோல் இன்று கைங்கர்யபரர்களுக்கு (சிஷ்யர்களுக்கு) நம் ஸ்ரீ அழகியசிங்கரை நியமித்திருக்கிறான். ஸ்ரீ அழகியசிங்கர் க்யாதிலாபபூஜைகளில் நோக்கின்றி ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியையும், க்ஷேமத்தையும் கருதியே ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டமை நமது பாக்யமாகும்.

ஸ்ரீ அழகியசிங்கரின் திருநாமத்தைக்கொண்டும் ஓர் பொருத்தமுண்டென்று விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன். திருவுள்ளூர் ஸ்ரீவீரராகவன் மங்களாசாஸனப் பாசுரத்தில் 'முன்னோர் தூது ... ...' என்னும் பாசுரத்திற்கு விசேஷ உரை கூறுங்கால், ஸ்ரீராமாவதாரத்தில் திருவடியை தூதனுப்பிய பெருமாள். தூத்யரஸம் வெகு ரஸமுள்ளதென்று, அக்காலம் தன்னையொருவரும் தூதனாக்கிக் கொள்ளவல்லாரில்லாமையை அறிந்து ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் அந்த ரஸாநுபவத்திற்காக 'தூதனுமாய் நாதனுமாகி' பாண்டவர்க்குத் தூது சென்று 'இன்னார் தூதனென நின்றான்' 'பாண்டவர் தூதன் என்றே பெயர் கொண்டான்' என்று வருணித்துப் பொருள் கூறுவர் பெரியோர். அதேமாதிரி ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனும், பெருமாள், இளைய பெருமாள், சக்ரவர்த்தி, பிராட்டி முதலிய எல்லோரையும்விட ஸ்ரீராமபாதுகைகளுடைய கோஸலபக்தஜனங்களுக்குத் தேறுதல் செய்தமையை ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் வருணித்தருளினார். பாதுகை செய்த மாதிரி எல்லோரும் உதாஸீநம் செய்து அநாதையாக இருக்கும் சில பக்தர்களை நாயகனாயிருந்து காப்பாற்றவேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார் போலும். பாதுகாஸஹஸ்ரம் பாடிய காலத்தில் வைராக்யசிகாமணியான ஸ்ரீ தேசிகன் தற்காலம் அந்த மனோரதம் நிறைவேற தகுதியாக எண்ணி ஸ்ரீ அழகியசிங்கரிடம் அநுப்ரவேசித்து நம்மைக் காப்பாற்றினார் என்று தோன்றுகிறது. ஏனெனில் ஸ்ரீ அழகியசிங்கர் ஆச்ரமஸ்வீகாரம்செய்துகொண்டது ஓதாதோதும் வேதாந்தாரியன் உதயம் செய்திட்ட திருவோண நன்னாள். இதுவரை 43 பட்டங்களில் இல்லாத திருநாமமாகிய 'ஸ்ரீவேதாந்ததேசிகயதீந்த்ரமஹாதேசிகன்' என்னும் திருநாமமும் இதையே வெளிப்படுத்துகிறது. ஸ்ரீ அழகியசிங்கரின் திருநாமத்தை மேலும் ஆராய்ந்தால் ஸ்ரீபாஷ்யகாரர் தமக்குப் பிறகு வைபவங்களை நோக்கி அப்பெயர் பூண்ட ஆசார்யனாக வரத் திருவுள்ளம் பற்றினமையும் ஒரே ஸமயத்தில் நிறைவேற்ற நம் ஸ்ரீ அழகியசிங்கராக அவதரித்தார்களோ என்று கூறலாம்படி அமைந்துள்ளது ஸ்ரீ அழகியசிங்கரது ஆஸ்தானஸ்வீகாரம்.

இதைக் கருத்திற்கொண்டு அபிநந்தனபத்ரிகைகள் வாசித்த பொழுது அடியேன்,

श्रीमान् रामानुजार्यो यतिपतिरधुना वेदचूडागुरुत्वं
श्रीमान् वेदान्तसूरिर्यतिवरवपुषं काङ्क्षमाणौ समेत्य ।
आविर्भूतौ यतीन्द्रे सकलगुणनिधौ श्रीनृसिंहाश्रमेऽस्मिन्
यस्मादाचार्यनामाऽभवदिति विबुधास्तर्कयन्त्यत्र नूनम् ॥

(யதிஸார்வபௌமனான ஸ்ரீ பாஷ்யகாரர் இப்போது வேதாந்ததேசிகன் என்று மிக ப்ரஸித்தமான திருநாமத்துடன் ஓர் அவதாரத்தையும், ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஸ்ரீபாஷ்யகாரரைப்போல் உத்தமாச்ரமியாக ஓர் அவதாரவிசேஷத்தையும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் திவ்யஸ்தானமாகிற ஸ்ரீமதஹோபிலமடத்தில் செய்யத் திருவுள்ளங்கொண்டு, எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமான 44-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் ஒரேகாலத்தில் ஆவிர்ப்பவித்திருக்கின்றனர் என்பது நிச்சயம். இது ஆச்சரியமன்றோ! ஏனென்றால் இதுவரையில் இல்லாதபடி ஸ்ரீ அழகியசிங்கரின் திருநாமமானது ஸ்ரீ வேதாந்ததேசிகயதீந்த்ரமஹாதேசிகன் என்று அமைந்துள்ளதன்றோ என்று பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்துள்ளார்கள்) என்று சிற்றறிவுக்கெட்டியதை விண்ணப்பித்துக் கொண்டபடி.

॥ श्रीः ॥

44-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்

தனியன்

॥ श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

॥ श्रीवकुळभूषणमहागुरवे नमः ॥ ॥ श्रीमते रामानुजाय नमः ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

॥ श्रीमदादिवण्शठकोपयतीन्द्रमहादेशिकाय नमः ॥

श्रीमते श्रीलक्ष्मीनृसिंहदिव्यपादुकासेवक श्रीवण्शठकोप

श्रीरङ्गनाथशठकोपयतीन्द्रमहादेशिकाय नमः ॥

॥ श्रीमते श्रीवण्शठकोप श्रीलक्ष्मीनृसिंहशठकोप यतीन्द्रमहादेशिकाय नमः ॥

॥ श्रीमते श्रीलक्ष्मीनृसिंहदिव्यपादुकासेवक

श्रीवण्शठकोप श्री श्रीरङ्गशठकोपयतीन्द्रमहादेशिकाय नमः ॥

॥ श्रीमते श्रीवण्शठकोप श्रीवीरराघवशठकोपयतीन्द्रमहादेशिकाय नमः ॥

श्रीमते श्रीवण्शठकोप श्री वेदान्तदेशिकयतीन्द्रमहादेशिकाय नमः

श्रीरङ्गनाथशठकोपयतीन्द्रदृष्टं लक्ष्मीनृसिंहशठजित्करुणैकपात्रम् ।

श्रीरङ्गवीररघुराट्छठकोपहृद्यं वेदान्तदेशिकयतीन्द्रमहं प्रपद्ये ॥

॥ श्रीमते श्रीवण्शठकोप श्री वेदान्तदेशिकयतीन्द्रमहादेशिकाय नमः ॥

ஸ்ரீரங்கநாதஶடகோபயதீந்த்ரத்ருஷ்டம்

லக்ஷ்மீந்ருஸிம்ஹஶடஜித்கருணைகபாத்ரம் ।

ஸ்ரீரங்கவீரரகுராட்ஶடகோபஹ்ருத்யம்

வேதாந்ததேசிகயதீந்த்ரமஹம் ப்ரபத்யே ॥

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வேதாந்ததேசிகயதீந்த்ர

மஹாதேசிகாய நம:

[திருநக்ஷத்திரம்- ஆவணிமீ ஹஸ்தம்]

ஸ்ரீ:

44-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கர் விஷயமாக

மங்கள கீதங்கள்

[ஸ்ரீ. உப. ஸரளகவி, பாதூர் புராணம் ராகவாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

अहोबिलरमालोलचरणाब्जमधुव्रताः । जयन्ति गुरवोऽस्माकं पावना योगिनायकाः ॥
सिद्धधर्माभिरक्षायां नैमिशे त्वरयोदितः । त्रय्यन्तसूरियोगीन्द्रो जीयादिह शतं समाः ॥
गोमतीचक्रराजादिपुण्यतीर्थोदकैः शुभैः । मुनिं मूर्धाभिषेकार्द्रं पश्येम शरदः शतम् ॥
मालोलनरसिंहांघ्रिसेवारसजुषो मुनेः । सेवमानाः पदद्वन्द्वं जीवेम शरदः शतम् ॥
पुनन्तं वैष्णवान्सर्वांस्त्रातारं वेदपद्धतेः । मुनिमेनमुपाश्रित्य नन्दाम शरदः शतम् ॥
ब्रह्मविद्योपदेशेन रक्षतः संश्रितान्मुनेः । कटाक्षविषयीभूय मोदाम शरदः शतम् ॥
वेदान्तदेशिकाभिख्ययोगिराजदयारसैः । वर्धितास्सततं सर्वे भवाम शरदः शतम् ॥
चरतः श्रीनृसिंहेन सार्धं भारतमण्डलम् । मुनीन्द्रस्य शुभां कीर्तिं शृणवाम शतं समाः ॥
सद्धर्मपालने विद्वन्मानने हरिपूजने । प्रसितस्य गुणानस्य ब्रवाम शरदः शतम् ॥
सर्वतोमुखवैदुष्यं शास्त्रेष्वस्मान्मुनेर्गताः । स्याम भारतदेशेऽस्मिन्नजिताः शरदः शतम् ॥
अनुष्टुप्पद्यकुसुमैरर्चयन्मुनितल्लजम् । मन्यते धन्यमात्मानं राघवः सरलः कविः ॥

वेदान्तवेद्यमहिमोदारमानृहरिपादारविन्दभजना-
स्वादातिमेदुर उदाराशयः प्रणतखेदापनोदिकरुणः ।
वादाहवेषु बहुमोदावहेषु जयवादानुकूलधिषणो
वेदाध्ववर्धकबुधोदाहतिर्जयति वेदान्तदेशिकमुनिः ॥

210746

—:0:—

(2)

[ஸ்ரீ. உப. K. S. தாதாசார்யஸ்வாமி, மானேஜர், ஸ்ரீஅஹோபிலமடம் ஆபீஸ், மதுராந்தகம்.]

जयति श्रुतिचूडार्यः यतीन्द्रो वाग्विदां वरः ।
योऽलंचक्रे यथापूर्वं मठमास्थानपण्डितः ॥
जीयात्स गुरुरस्माकं भाग्यशेषविशेषतः ।
तं नृसिंहार्चनासक्तं पश्येम शरदश्शतम् ॥

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

[ஹேமலம்பி ஸூ உத்தராயணம் - ஹேமந்த ருது மகர மீ 1958 பிப்ரவரி - மார்ச்]

1-2-58	தை மீ 19உ	சனிக்கிழமை	திருவாதிரை 38-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
4-2-58	22உ	செவ்வாய்க்கிழமை	○ பூர்ணிமை, ப்ரதமை திதித்வயம்.
5-2-58	23உ	புதன்கிழமை	த்விதீயை திதி, மகம், திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்.
8-2-58	26உ	சனிக்கிழமை	ஹஸ்தம், கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
11-2-58	29உ	செவ்வாய்க்கிழமை	அஷ்டகா.

[உத்தராயணம், சிசிர ருது, கும்ப மீ]

12-2-58	மாசி மீ 1உ	புதன்கிழமை	கும்பரவி- 22-17. விஷ்ணுபதி ஸங்க்ரமணதர்ப்பணம், அந்வஷ்டகா, மகரக்ருஷ்ண நவமி திதி.
14-2-58	3உ	வெள்ளிக்கிழமை	ஏகாதசி.
18-2-58	7உ	செவ்வாய்க்கிழமை	● அமாவாஸ்யை.
24-2-58	13உ	திங்கட்கிழமை	ஸ்ரீ அஹோபில உத்ஸவாரம்பம்.

குறிப்பு:— மகரக்ருஷ்ண நவமி திதி ச்ராத்தத்தை மாசி மீ 1உயும் கும்பக்ருஷ்ண நவமி திதி ச்ராத்தத்தை மாசி மீ 30உ வியாழக்கிழமையும் அனுஷ்டிக்கவேணும்.

(2) மாசி மீ முதல் தேதி ஸங்க்ரமணமும், அந்வஷ்டகா ச்ராத்தமும் செய்யவேண்டும். நைமித்திகமாகவும், அநியதமாயுமுள்ள ஸங்க்ரமண தர்ப்பணத்தை முதலில் செய்து பிறகு அந்வஷ்டகா தர்ப்பணத்தைச் செய்யவேண்டியது.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை அடியிற்கண்ட விலாஸத்திற்கே அனுப்ப வேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் மேற்படி விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் கீழே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். சந்தாத்தொகை அனுப்பப்படாமல் பாக்கியிருப்பவர்கள் உடனே அனுப்பிவைக்கவும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்றாகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

Regd. No. M. 4437.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு, மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்டரி.

சகலவிதமான

காகிதங்கள், அட்டைகள் தேவைக்கு

தயவுசெய்து கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்

M. கிருஷ்ணமாச்சாரி

62, பத்ரையன் தெரு,

மதராஸ் - 1.

தந்தி விலாஸம்:	டெலிபோன் நெ:
"PAPYRUS"	3473